ரிஜிஸ்டர் நெ. 2041 — தனிப்பிரதி விலை ஒரு அணா

குடி அரசு

வருட சந்தா முன்பணம்	— ரூ.	3—0
6-மாத சந்தா ,,	— ,,	1-12
வெளி நாட்டிற்கு ,,	— ,,	4—0

ஞாயிறு தோறும் வெளிவருவது.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 7 | ஈரோடு, பிரஜோத்பத்தி௵ கார்த்திகை 7௴ ஞாயிறு (22—11—1931) | மலர் 30

பலமுள்ளவீரபுருடனாக,

குமரனாக, வாலிபத்தன்மையடைய, ஆண் பெண் மன
மொத்துவாழ, இல்லற, இன்பம் அனுபவிக்க, புத்திர
பாக்கியம் பெற வழியில்லையென வருந்துபவர்கள்

தங்க பஸ்பம்.

சாப்பிடுங்கள்.

அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டா
கும் இல்வாழ்வில் அதியற்புத சுகந்தரும்.

48-நாள் பஸ்பம் விலை ரூ. 20. 24-நாளைக்கு ரூ. 10.

மாதர்களுக்கு

இது தான் வேண்டியது

கெர்ப்ப எண்ணெய்

மாதாந்தா காலத்தில் உண்டாகும் வயி
ற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய்
பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம், சினைப்பை
இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி
கெர்ப்பம் உண்டாகும். மிக்க அநுபவமானது.

புட்டி 1-க்கு ரூ. 2.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி, *S. I.*

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930ம் ௵ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)

M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,

அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—5—0

மானேஜர்,

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

'சண்டமாருதம்'

சுயமரியாதைத்தமிழ் தினப்பதிப்பு.

ஆசிரியர்:- சொ. முருகப்பா.

உள்நாடு மாத சந்தா	ரூ.	1—2—0
தனிப்பிரதி	ரூ.	0—0—6
வெளிநாடு வருட சந்தா	ரூ.	18—0—0
ஆறுமாதம் ...	ரூ.	10—0—0

மானேஜர்
'சண்டமாருதம்'
திருச்சினாப்பள்ளி

இரத்தவிர்த்தி, தேகபலம், தாதுபுஷ்டிக்கு

மனோரஞ்சித லேகியம்

தங்கபஸ்பம்

சேர்த்துச் சாப்பிடுங்கள்.

சகலவித உஷ்ணத்தையும், இரத்தக் கொதிப்பையும் அடக்கி நல்ல இரத்தத்தை ஏராளமாய்ப் பெருக்கித் தேக புஷ்டி, பலம், ஆண்மை வீரியவிர்த்தி, இந்திரிய விளைவு, தாதுக்கட்டு, போக இச்சை முதலியவைகளை உண்டுபண்ணி அடங்காத இன்பத்தைக் கொடுக்கும். திடகாத்திரம், மூளை பலம், ஞாபகசக்தி, அறிவு வளர்ச்சி, மனோவலிமையையும் உண்டாக்கும்.

அதிக ருசிகரமுள்ளது. சிறுவர் முதல் ஆண், பெண் யாவரும் சாப்பிடலாம். மாணாக்கர்களுக்கு மிகவும் அவசியமானது. எலும்பை உருக்கும் உஷ்ணத்தை அடக்கி இரத்த விர்த்தியை உண்டுபண்ணி தேகத்தை வளர்க்கும். தனி லேகியமும் சாப்பிடலாம்.

30 வேளை லேகியம் ரூபா 3. தங்கபஸ்பம் 30 வேளை ரூபா 7.

நம்மிடம் சகல வியாதிகளுக்கும் வேண்டிய உயர்ந்த மருந்துகள் கிடைக்கும். வியாதி விபரம் எழுதவும்.

தெண்டபாணி வைத்தியசாலை, பழநி. (*S. I.*)

ஜோதிமுத்து.

டாக்டர் B. A. எதிராஜுலுவினால் தயாரித்து 31 ஆண்டுகளாக அனுபவித்து கைகண்ட, கோஷாயி மேக எண்ணை.

(கோஷாயி ஒருவரால் அனுக்கிரகிக்கப்பெற்றது.)

சகோதர, சகோதரிகளே! வெட்டவாய்வு (அஷ்ட) எட்டுவிதங்களாக, கர்ப்ப,—விந்து ஸ்தானங்களில் தங்கி, வெளியாகிக்கொண்டிருப்பதை அக்காலங்களில் கண்டித்து நீக்காமல் விட்டு நீடித்து நின்று மேக வாய்வு என்று பெயர் பெற்ற கோடியோன் கபாலத்தில் தங்கி, கபால இடி, குத்தல் நேத்திரத்தில் பார்வை மங்கல், பல குற்றங்களும், நாசி, செவி, தந்தங்கள், கண்டம் இவைகளில் குற்றங்களும், நெஞ்சில் தங்கி, மாரடைப்பு, தமரகவாய்வு, திணரல், கொக்கிருமல், காசமாகவும், கீல்களில் தங்கி, சூலைகளாகவும், நரம்புகளில் தங்கி முன்-பின் (வீச்சுகள்) பலவித இழுப்புகளாகவும் வயற்றில் தங்கி, சகலவித குன்மங்கள் வாய்வு, குக்கக்கட்டிகள், பக்க விலா இழுப்பு குத்தல் கெர்ப குற்றங்கள் நித்திரை அற்ற நீர்தாரை ரோகங்கள், மூலங்கள், திமிர், மத மதப்பு, சகலவித மேகங்கள், சிட்டைகள் ரண குஷ்டங்களாகவும், மலட்போக்கு அல்லது சிக்கல் பட்டு ஜெனிக்கும் [விரிக்கிர் பெருகும்] அனந்த மேக வாய்வு ரோகிகளும், 3 நேரம் நம், கோஷாயி மேக எண்ணை சாப்பிட்ட 7வது நாளே, எல்லா உபத்திரவத்திலிருந்து விலகி 15வது நாள்பாலியதேஜசுடன், விருத்தரும் பாலிய உணர்ச்சிபெற்றுலவுருவது பிரத்தியக்ஷம்

யோகாப்பியாசிகளுக்கு சடலத்திலுள்ள துர்நீர்களை அகற்றி எல்லா அவயவங்களிலும் சுத்த இரத்தத்தை ஊட்டி, அறிவு இடத்தில் புத்தியை நிறுத்தி (ஜோதியாகிய) தன்னை தெரிசிக்க, காயத்தை இருகச்செய்து காக்கும் காயகர்பம். 3 நேரம் உபயோகிக்கும் கோஷாயி மேக எண்ணை கொண்ட சீசா 1க்கு ரூ. 7—0—0. பத்திய விபரம் மருந்துடன், பாக்கிங்தபால் செலவு பிரத்தியேகம். மலாய் வாசிகள் ஆர்டருடன் ரூ. 8—12—0 அனுப்பவேண்டும்.

கோஷாயி வைத்தியசாலை,

தென்னூர், திருச்சி.

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனுர் அவர்களியற்றிய

மாதர் சுதந்திரம் அல்லது

பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணு 8. (எட்டு)

கிடைக்குமிடங்கள்:- "குடி அரசு" புத்தகாலயம், ஈரோடு.

இம்பிரியல் பிரஸ், மாயவரம்.

சுயமரியாதைப் பொக்கிஷம்

எனும்

புதுவைமுரசு விசேஷ அநுபந்தம்.

இதில், சுயமரியாதை இயக்க அறிஞர், தலைவர், அன்னவர் ஆப்டோன் படங்கள், அறியகட்டுரைகள், விகடங்கள், கிண்டல்கள், கவிகள் அடங்கியிருக்கின்றன. பத்திரிகைகள் அனைத்தும் நமது அநுபந்தத்தைப்பற்றித் தெரிவித்துள்ள நல்லபிப்பிராயங்களையும் வாசகர் அறிவர். 130 பக்கங்கள் கொண்டது விலை ஆறே அணு.

3 காப்பிகளுக்கு குறைந்த ஆர்டருக்கு வி. பி. யில் அனுப்ப முடியாது. ஒரு காப்பி வேண்டுவோர் 7-அணு ஸ்டாம்பு அனுப்புக,

மானேஜர்,

புதுவை முரசு,

புதுச்சேரி, F. இந்தியா,

மறியலும், தேசியமும் எலக்ஷன் சூழ்ச்சி.

"குடி அரசு" ஏஜண்டுகள்.

N. S. கந்தசாமி,
திராவிடன் ஏஜண்ட், முசிரி.

*ராஜரத்னம், தமிழன் ஆபீஸ்,
ஆண்டர்சன் பேட்டை.

*காஸ்மாபாலிட்டன் கிளப்
விருதுநகர்.

*A. V. பாலசுப்ரமணியம்
23, எடய தெரு,
திருவாரூர்.

பி. சாமுவேல் பிள்ளை,
ஜெனரல் நியூஸ் ஏஜண்ட்
தூத்துக்குடி.

*எஸ். மாசிலாமணி பிள்ளை
நியூஸ் ஏஜண்ட்,
பாலக்கரை திருச்சி.

S. குற்றாலலிங்கம் பிள்ளை
நியூஸ் ஏஜண்ட்
மீனாட்சிபுரம் திருநெல்வேலி.

S. P. கிருஷ்ணசாமி,
நாகப்பட்டணம்.

P. பழனியாண்டி செட்டியார்,
நாகூர்.

T. சேத்துராயடு
சித்திரக்காரத் தெரு,
மதுரை.

K. கணபதி, சாக்கோட்டை
கும்பகோணம்.

மானேஜர், 'புதுவைமுரசு'
புதுச்சேரி.

P. R. C. எல்லப்பன்,
மரக்கடை வியாபாரம்,
கொசதெரு, காஞ்சீபுரம்.

A. S. முருகேசம், பஜார்
திண்டுக்கல்.

*T. சுப்ரமணியபிள்ளை,
3, செங்கல்வாராய முதலி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை.

A. R. M. சுந்திர பாண்டியன்
கடை வீதி,
அருப்புக்கோட்டை.

G: V. ராமசாமி
பெரிய கடைவீதி,
கரூர்

*B. ரங்கசாமி, டைலர்
பெரிய கடைவீதி,
கோயமுத்தூர்.

ஹாஜி முகமது ஷேக் உசேன்,
57, சுண்ணாம்புக்காரத்தெரு,
காரைக்கால்.

*M. ரத்னம்,
கிரோசினாயில் டிபோ,
நெல்லிக்குப்பம்.

S. ராமசாமி
செங்குந்தர் தெரு,
தஞ்சாவூர்.

C. S. ஜோசப்
159 கேவல்ரி ரோடு,
பெங்களூர் Cant

முத்துசாமி
நாடார் ஹைஸ்கூல்,
பொறையார்

P. S. ஜீவரத்னம் பிள்ளை,
2, மலாய்வீதி, ஸ்லேவ்ஜலண்டு,
கொழும்பு.

A. S. பரமசிவம்
நியூஸ் ஏஜண்ட்,
பம்பலபிட்டியா,
கொழும்பு.

எட்வர்ட்பால்
திருமலாபுரம்

செல்வராய கவுண்டர்
திருப்பத்தூர்.

*S. அப்பாதுரை
மண்டி, ராசிபுரம்.

M. N. M. பாவலர்
நியூஸ் ஏஜண்ட்,
திருப்பாபுலியூர்.

A. M. பாலசாமி
குமாரசாமி செட்டி வீதி
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

சிதம்பரம்.
எம். கலியாணசுந்திர முதலியார்
கதர்ஸ்டோர் மேலவீதி

சாத்தான் குளம்.
பெரியசாமி நாடார்
ஷாப் வியாபாரம்

மாயவரம். எம். கலியாணசுந்திர
முதலியார் கதர்ஸ்டோர்,

கொழும்பு.
S M. மீராமொய்தீன்
80—யார்க் வீதி, போர்ட்.

K கணபதி பிள்ளை, செட்டித்
தெரு, பருத்தித்துறை.

கோட்டார்.
S. பூதலிங்கம், காரியதரிசி
சுயமரியாதை வாசிப்புசாலை.

சாத்தூர்.
எம். ஏ. முத்துசாமி பிள்ளை,
சுப்பிரமணியசாமி கோயில் வீதி.

ஸ்ரீரங்கம்.
எம். கோவிந்தசாமி,
கீழ் அடையவழஞ்சன் வீதி.

திருச்சங்கோடு.
எஸ். கே. வரதராஜன்,
ஆனந்த நிலயம்.

பழனி.
எஸ். என். அப்பன்,
சன்மார்க்கன், ஆபீஸ்.

* இந்த புள்ளியுள்ள ஏஜண்டுதார்களிடம் குடி அரசு பதிப்பு புஸ்தகங்களும் கிடைக்கும்.

தாதி தேவை.

சுமார் 30 வயதிற்குட்பட்டவரும், சுகாதார முறையும், சிசுக்களை வளர்த்து அனுபோகமும் தெரிந்திருக்கவேண்டும். சாப்பாட்டுடன் சம்பளமும் தரப்படும், விவரத்திற்குஎழுதவும்.

Y X

C/o குடி அரசு ஈரோடு.

பேய், பிசாசென்பது உண்டா?

பம்பாய் அறிவு விளக்கச் சங்கத்தாரின் வேண்டுகோளின்மீது அதன் தலைவர் ஸ்ரீ. எ. எம். சுந்தரகால்பேய், பிசாசுகளைப்பற்றிப் பின்வருமாறு எழுதுகிறார்:- பேய், பிசாசு என்பதில் உண்மை ஒன்றுமில்லை. இல்லாததை உண்டு என்று பீதியால் நம்புவதே பேய்எனக் கொள்ளப்படுகிறது, மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்று சொல்லப்படுவதிலிருந்தே மிரண்டவர்களுக்குத்தான் பேய் என்பது தோன்றுகிறதென்றும், நல்ல அறிவுடனும் புத்தி சுவாதீனத்துடனும் இருப்பவர்களுக்கு அத்தகைய உணர்ச்சியே ஏற்படுகிறதில்லை என்றும் தெரிகிறதல்லவா? சில அறியாமை நிரம்பிய ஜனங்கள் பேய், பிசாசு பாழ்மனையில் இருக்கும் என்று யாரோ சொல்லி விடுவதைக் கேட்டுப் பீதியடைந்து அந்தப் பீதியால் அந்த பாழ்மனையில் நினைத்துக்கொண்டு அதற்கு ஒரு உருவையும் தங்கள் மனக்கண்ணில் ஏற்படுத்தி விடுவதால் அவர்கள் பேயைப் பற்றி நினைக்கும்போது அந்த உருவமே எதிரில் நிற்பதுபோல் நினைத்து பயப்படுகின்றனர். சிலர் தற்கொலை செய்து கொண்டவர்களும், வேறு துர்மரணங்களை அடைந்தவர்களும் பேய், பிசாசுகளாக மாறி ஜனங்களைத் துன்புறுத்துவதாகக் கூறினர். அதுவும் தக்கபடி ஆராய்ச்சி செய்து பார்த்தால் பொய்யாகும். பஞ்ச பூதங்களாலாகிய இவ்வுடல் எரிக்கப்பட்டு அழிந்ததும் பஞ்ச பூதங்களும் அதனுடன் கலந்துவிடுகின்றன.

உண்மை இவ்வாறிருக்க எப்படி இறந்தவர்களின் ஆன்மா இதர்களைத் தொந்தரை செய்யமுடியும். உருவமில்லா பேய் பிசாசுகள் எப்படி அடிக்கவும் நடக்கவும் முடியும். ஆகவே பேய் பிசாசென்பதெல்லாம் அறியாமையாலும், மூடத்தனத்தாலும், அச்சத்தாலும் நினைக்கப்படும் பொய்யல்லது வேறொன்றுமில்லை.

ஆண்களையும், பெண்களையும் பேய் பிடித்திருக்கிறதென்று சொல்லி மந்திரவாதி, பூசாரி முதலியவர்களிடம் ஒப்புவித்து பணம் செலவிடுவதும், அவை இன்னும் ஆட்டபாட்டங்களால் அதிகப்படுத்திவிடுவதும், இதனால் எவ்வளவோ துன்மார்க்கங்களும் மோசடிகளும் நடப்பதும் நமது அறியாமையையே காண்பிக்கிறது. நானும் சுமார் 24 வருஷங்களாக வைத்தியனாயும், மந்திரவாதியாகவும், மெஸ்மெரிசம் முதலிய மனோவசிய சக்தியுடையவனாயும் இருந்து பல சந்தர்ப்பங்களில் பல விஷயங்களை ஆராய்ந்திருக்கிறேன். இவ்வனுபவத்தின் பயனாக பேயோ பிசாசோ நிச்சயமாக இல்லையென்றும். வியாதி காரணமாகச் சிற்சிலருக்குச் சிற்சில சமயங்களில் மூளைக் கொதிப்பேறி விடுவதால் அப்படிப் பட்டவர்கள் ஸ்வாதீனமின்றிப் பைத்தியம் பிடித்தவர்கள் போல் ஆடவும் பாடவும், பிறரை அடிக்கவும் ஏதேதோ உளறவும் செய்வர். அப்படிப்பட்டவர்களுக்குப் பிசாசு பிடித்திருக்கிறதென்று மந்திரவாதிகளிடம் அழைத்துச் செல்வதால் அது அதிகப்படுகிறதே யொழிய குறைவதில்லை. எப்போதோ மூளை சாந்தமடையும்போது குறைந்ததுபோல் காணப்படும். அது கண்டு பிசாசு சிறிது குறைந்ததென்று நினைப்பர். ஆகவே நல்ல வைத்தியத்தால் அவ்வியாதியைத் தீர்த்துவிடலாம். பேய்பிசாசுகள் கிடையாது. 'ஆநந்தபோதினி'

ரூ. 1000 இனம்.

3 லட்சம் புட்டிகள் விலையாகி விட்டன.

முதல் தரத் தங்கமெடல்களும் மேரிட் சர்டிபிகேட்டுகளும் ஏராளமான நற்சாட்சிகளும் வைத்தியபதி, வைத்திய ஆசிரியர், டாக்டர் சித்தர், வைத்திய பூபதி முதலிய பட்டங்களும் பரிசுகளும் பெற்றிருக்கிற

டாக்டர் ஆர். எஸ். பதி அவர்களுடைய

ஆறுமுக முத்திரையுள்ள உண்மையான மருந்துகளை பதினாயிரக்கணக்கான குடும்பங்களில் உபயோகிக்கிறார்கள். ஆயிரக்கணக்கான ஏஜண்டுகளும் வைத்தியர்களும் வியாபாரிகளும் வாங்குகிறார்கள். இது உண்மையல்லவென்று ஒப்புவிப்பவருக்கு ரூ. 1000 இனம் கொடுக்கப்படும்.

தாதுபுஷ்டிக்கு

கெய்ரோடைன்

(ரிஜிஸ்தர் செய்த ஆறுமுக முத்திரையுள்ளது)

இந்த டானிக் மருந்து அளவு மீறிய தாதுபுஷ்டியையும் என்றும் எதிர்பாராத வீரிய பலத்தையும் உண்டாக்கும்.

இது வயது முதிர்ந்தவர்களுக்கும் நபும்ஸகர்களுக்கும் தளர்ந்து போன நாடி நரம்புகளுக்கும் புத்துயிருண்டாக்கி வாலிப வாழ்க்கையைத் தருகிறது.

இது மலேரியா ஜுரத்தையும், எலும்புருக்கி க்ஷயரோகத்தையும் வராமல் தடுத்து விடுகிறது. மெலிந்து வாடியிருக்கிற ஆண் பெண் இருபாலரும் இதைச் சாப்பிட்டால், ஏராளமான இரத்த விருத்தியுண்டாக்கி தேகபுஷ்டியும் முகத்திற்கு அழகும் தருகிறது. டாக்டர்கள் இதை வாங்கிப்பரீட்சை பார்க்கலாம். நாள்பட்டவெள்ளை, வெட்டை, துர்நீர் வியாதிகள் கை கால் பிடிப்பு, இடுப்புவலி, வாதநோய்கள், பித்த மயக்கம், பெண்களுக்குண்டாகும் வெள்ளை, சூதகவாய்வு, சூதக வயிற்றுவலி குணமாகும். நீடித்த மலச்சிக்கல், குன்ம வயிற்றுவலி, உஷ்ண வயிற்றுவலி, வாய்ப்புண், வாய்வுகள் நீங்கி தேகக் குளிர்ச்சியும் பலமும் உண்டாகும். தீராத சுவாச காசத்தையும் (ஆஸ்த்மா) சளி இருமல் வியாதிகளையும் திரும்பி வராமல் குணப்படுத்திவிடும். இதல்லாமல் பித்த ஜுர சம்பந்தமான நூற்றுக்கணக்கான வியாதிகளை உலகத்தார் ஆச்சரியப்படும்படி குணப்படுத்தி இரத்த சுத்தி, இரத்த விருத்தி செய்து தேகாரோக்யத்தை உண்டாக்கும். இது ஒரு கல்ப மருந்து.

பூரண சுகத்திற்கு 1-புட்டி மருந்து போதுமானது.

80 வேளை புட்டி 1-க்கு விலை ரூபாய் 5. தபால் செலவு வேறு.

விலாசம்— **ஆர். எஸ். பதி அண் கோ,** [ரிஜிஸ்தரானது]

தந்தி விலாசம்: "சித்தர்" மதுரை. 215, மேலமாசி வீதி, மதுரை.

ஏராளமான நற்சாட்சிப்பத்திரங்களடங்கிய புத்தகம் இனாமாக அனுப்பப்படும்.

God and the Universe.

கடவுளும், பிரபஞ்சமும்.

(தோழர் ம. சிங்காரவேலு B. A., B. L)

I.

நாளது வரை தெரிந்துள்ள பிரபஞ்சத்தில், எங்கேயாகிலும் கடவுளுக்கு இடமுண்டா? என்று வான ஆராய்ச்சி செய்வோர் கண்டாராய்ந்தும், எந்தபிரபஞ்சமூலையிலேனும் காணவில்லை என்று சொல்லலாம். பிரபல வான நூலாசிரியராகிய லர், ஜேம்ஸ் ஜீன்ஸ் என்பார் (Sir, James Jeans), தனது நூலாகிய "பிரபஞ்ச வான நூலில்" (Cosmogony and Astronomy), பிரபஞ்சத்தில், எங்கேயாகிலும் சைதன்யம், அதாவது, மனம் (Mind) இருப்பதாக யூகிக்க ஆதாரமில்லை என்கின்றார். நமது பூமியைத் தவிர மற்ற எங்கேயாகிலும் பிரபஞ்சத்தில் உயிர் (Life) அல்லது சீவன் உளதோ வெனில், அது சந்தேக மென்கின்றார். நம்மைச் சுற்றியுள்ளப் பிரபஞ்சத்தில் கடவுளுக்காகிலும், சீவனுக்காகிலும் இருக்க இடமில்லை எனில், மற்ற வேறு இடம் எங்கே இருக்கக் கூடும். இதன் சம்பந்தமாக ஒரு ருசிகரமான கதை யொன்றுண்டு. நட்சத்திர ஆபீஸ் (Observatory) ஒன்றினிடம், வான சாஸ்திரி ஒருவர் இருந்தார். அவர் கிறிஸ்தவ மார்க்கத்துப் பாதிரி. அவரிடம், வானத்தைப் பார்க்க வேண்டுமென வொருவர் சென்று, தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலமாக (Telescope) காணப்படும் பற்பல வான மண்டலங்களைக் காட்டும்படி கேட்டுக் கொண்டார். வானசாஸ்திரி முதலில், பூமிக்கு அருகாமையிலுள்ள சந்திர மண்டலத்தைக் காட்டி அடுத்துள்ள நவக்கிரக மண்டலத்தையும், சூர்ய மண்டலத்தையும், அதற்கப்பாலுள்ள நட்சத்திர மண்டலத்தையும் காட்டி வந்தார். இவைகளை எல்லாம் ஆச்சர்யத்துடன் பார்த்து வந்தவர் பாதிரியை நோக்கி, ஐயா தாங்கள் காட்டி வந்த பற்பலமண்டலங்களைப் பார்த்து வந்தேன். ஆனால் இவைகளுக்கப்பால் உள்ளதாகச்சொல்லும்பரமண்டலத்தையும், அதில் வீற்றிருக்கும் பிதாவையும், காட்ட வில்லையே என்றார்! பாதிரியார் இந்தக் கேள்வியைக் குறும்பென்று கருதி, அவரிடம் ஒன்றும் சொல்லாமலே அவரை விடை கொடுத்தனுப்பி விட்டார். ஆனால் தற்கால வான நூலோர், இந்தக் கேள்வியைக் குறும்பென்று கருதுவதில்லை. மெய்ஞ்ஞான நோக்கே, விசாரித்து உணர்தலானபடியால், கேள்வி எவ்வித ஆபாசமானதானாலும் அதனைத் தாழ்மையோடு ஏற்றுக் கொண்டு, அதற்கு விடையுண்டோ வென ஆராய்ச்சி செய்யப் புகுவர்.

"அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய்" என்ற தாயுமானர் தத்துவத்தைப் பற்றி நமக்கு ஒன்றும் விளங்கவில்லை. பிரபஞ்சத்தில் பிரகாசமில்லாத இடம் அநேக மென்று வான நூலோர் சொல்லுகின்றார்கள். கடவுள் பிரகாச மென்றால், இருள் யாது? கிறிஸ்தவர் சொல்லுவது போல், இருள் பிசாசென்றேற்படும். பிரபஞ்சத்தில் இருளடைந்த இடங்களே அதிகமாதலால், பிசாசே பெரிதெனவேற்படும். தாயுமானர் தத்துவம் இந்த ஆபாசங்களுக்கெல்லாம் இடம் தரும். ஆதலின் கவிஞர்களிடமிருந்து உண்மை ஞானத்தை எதிர் பார்க்க முடியாது.

"தூணிலுமிருப்பார், துரும்பிலுமிருப்பார்" என்று பிரகலாத சரித்திரமொன்றை கட்டி விட்டார்கள். இது சர்வ வியாபி என்ற கடவுளின் லட்சணத்தைக் குறிக்கும் கதையாகும். வானநூலின்படி பிரபஞ்சமெங்கும் வியாபித்துள்ளவை, தூசும் துரும்புமே. இதனைக் கடவு ளென்பதில் அர்த்தமில்லை. ஆகலின், கண்டவரையில், கடவுள் சர்வவியாபி என்று சொல்ல யாதொரு ஞாயமுமில்லை. வேதாந்திகள் சொல்லும் சத்து, சித்து, ஆனந்தமும், பிரபஞ்சத்தில் காணோம். அங்குமிங்கும் ஒளிக்கிரணங்களும், (Rediation) தூசும், (Dust), பரமாணுக்களும், (Electrons and Protons), இருப்பதாக யூகையே யொழிய, நிலைத்திருக்கும் சத்தாகிலும், அறியும் சித்தாகிலும், உணர்வாகிய ஆநந்தமும், மனிதனுடைய எண்ணத்தின், அதாவது, வார்த்தை அல்லது சொற்கள் அன்னியில்இருப்பதாக யூகிக்க இடமே இல்லை. உலகில் பரவியுள்ள பற்பல, தத்துவ ஞானங்களெனக் கூறும், (Philosophies), வார்த்தைகள் யாவும் கற்பனைகளாக முடிகின்றபடியால், எதையும் அனுபவமாகப்பார்க்க முடியவில்லை. அந்தந்த தத்துவப் பொருள்களெனப்படும் சொற்கள் ஒன்றுக் கொன்று வித்தியாசப்பட்டே இருக்கின்றன. கடவுளைப் பற்றிப் பேசும் ஞானிகளும், பக்தர்களும் யானையைக் கண்ட குருடர்களைப் போல், பேசுகின்றார்கள். யானையைக் கண்ட குருடர்களாகிலும், ஏதோர் மிருகத்தைக்கண்டு தங்கள் அனுபவத்திற்குத் தக்கவாறு சொல்லுகின்றார்கள். ஆனால் ஞானிகளோ வெனில், யாதொன்றையும் பார்க்காமலே, வாய்க்கு வந்தவாறு சொற்களைக் கட்டி விடுகின்றார்கள். கடவுள், ஆன்மா, பிரமம், சிவன், விஷ்ணு, பிரமா முதலிய முப்பத்து முக்கோடி தெய்வங்களும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும, கின்னர், கிம்புருடர், அஷ்டபாலகர், முதலிய உப தெய்வங்களும், இருளன், வீரன், காட்டேரி, நொண்டி, சண்டி, சாமுண்டி, தொட்டி, தாண்டி, நல்லண்ணன், சின்னான், பெத்தண்ணன், மாரி, முனியன், சங்கிலி, பாவாடை, குழி இரசி முதலிய பேய் பிசாசுகளும், நாம் தொட்டிலில் பழகிய சிறு வார்த்தைகளைக் கொண்டே, வயது வந்த பிறகு கட்டிய கற்பனை வார்த்தைகளே யாகும். இந்த சொற்களுக்குத் தான் கட்டியுள்ள உலககோயில்களும், மசூதிகளும், சர்ச்சுகளும் கெதிடிரல்களும், என அறிக! இருளன், வீரன், முனியனுக்கு பிரபஞ்சத்தில் இடமில்லை எனில், பக்தர் வணங்கி வழிபடும் ஈஸ்வரனுக்கு இடமேது? பாமர ஜனங்கள் வணங்கும் கோடான கோடி சிறு தெய்வங்கள் கற்பனை எனில், அறிஞர்கள் வணங்கும் அல்லது போற்றும் பிரமமும், கற்பிதமன்றோ?

உலகை நாம் தினம் பார்த்து வருகின்றோம். அதன் மேலுள்ள பொருள்கள் பலவற்றைக் கையாள்கின்றோம். அநேகமாக உலகம் ,இன்ன பொருளை உடையதாக இருக்கிறதென்று தெரியும். சகலமும மண்ணாகவே பரிசோதனையில் முடிகின்றது. இந்த மண்ணில்,சிற்சில உயிர்கள்தோன்றிஇருக்கின்றன. இவைகளும்மண்ணில் தோன்றி, மண்ணிலேயே மடிகின்றன. அவ்வுயிர்களில்நாம் ஒன்று (From Dust to Dust] அதாவது மண்ணிலிருந்து வந்து மண்ணாய் போகின்றோமென கிறிஸ்துவவாக்கியமொன்றுண்டு. இதுதான் நாம் கண்டுவரும் காட்சி. இதுதான் பிரத்தியட்ச அனுபவம். நமது உலக மண்ணில் எங்கேயாகிலும் கடவுள் (God) என்ற பொருள் தங்கி வாழ இடமுண்டாவென தேட்கின்றோம்? 'இருளன' 'வீரனுக்கு' எங்கே இடமென்று கேட்கின்றோம்? 'கன்னி அம்மனுக்கும்' 'பச்சை அம்மனுக்கும்' 'பெரிய பாளையத்தானுக்கும்' எங்கே இடமென்று கேட்கின்றோம். இச்சிறு தெய்வங்கள் எல்லாம ஆபாச வார்த்தைகளெனில் பெரிய தெய்வங்களும ஆபாசவார்த்தைகளாகாவா? கடவுளென்பதும், தெய்வங்களென்பதும், மோட்சமென்பதும், நரகமென்பதும, 'ஐந்து கண்ணன்' போன்ற மழலைச்சொற்களே. இந்த மழலைச் சொற்களை இயேசு சொன்னாலும, மகமது சொன்னாலும், சங்கரா சொன்னாலும, விவேகானந்தர் சொன்னாலும, காந்தி சொன்னாலும் இவை யாவும் கேள்விப்பட்ட சொற்களே அல்லாது பொருளைக்குறிக்கும் சொற்களாகா. தத்துவ ஞானிகள் கூறும் பிரமமும் (*Brahman*) சத்தும்(Sat) சர்வமும் (Absolute) தெரியப்படாததும் (Unknowable) எண்ணமும் (Idea) இச்சக்தியும், (Will) யாவும்கற்பனைகளென அறிக. இந்த கற்பனை வார்த்தைகளைக்குறித்து எழுதியுள்ள நூற்கள் எத்தனை! கட்டியுள்ள கட்டடங்கள் எத்தனை!! செய்யும் வாதங்களெத்தனை!!! இவைகள் யாவும் பாமரமக்களுக்கு மெய்ஞ்ஞானத்தெளிவு உண்டாயதும் குப்பைதொட்டியில்தான் போடவேண்டிவரும். இதற்கு ஐயமில்லை. காலந்தான் கடக்கவேண்டும். அன்றுதான் அந்த முடிவுக்கு அரும்பாடுபட்டு வரும் நமது பகுத்தறிவுச் சங்கத்தார்களாகிய சுயமரியாதைக்காரர்களுடைய எண்ணம் சித்திபெறும். அன்றுதான் பொதுவுடமையோருடைய முயற்சியும் பயன்படும். இந்த மெஞ்ஞான உண்மையை நமது இந்திய உலகம் அறிந்துய்யுமாறு இந்தச் சிறு வாக்கியத்தை எழுதத்துணிந்தனம்.

இது நிற்க, கடவுளுக்குத்தங்க நமதுவுலகம் இடந்தராவிடினும் அதனைச்சுற்றியுள்ள பிரபஞ்சப்பொருள்களில் யாதேனும் இடம் கொடுக்குமாவென்றுபார்ப்போம். நம்மைச்சுற்றியுள்ள பிரபஞ்சப்பொருள்கள்யாவை?

நமக்கு அருகேயுள்ளது நமது சந்திரனாகும். அதில்காற்றில்லை. தண்ணீரில்லை. ஒருபக்கத்தில் 14 நாள் ஒரே வெய்யல்காயும், மற்றொரு பக்கத்தில் 14 நாள் இருளடைந்து தாங்காத குளிராக இருக்கும். இதில் எந்த உயிர் வாழமுடியும்? உயிர்வாழ முடியாவெனில் அங்கே கடவுளுக்கு என்னவேலை? சிறுஉயிர் வாழ முடியாத இடத்தில் பேருயிர் வாழ இடமேது?

சந்திரனுக்கடுத்திருக்கும் உலகங்களை நவக்கிரகங்களென்பார். அவ்வித உலகங்களில் இரண்டொன்றில் மாத்திரம் நமது உலகிலுள்ள ஜீதோஷ்ணஸ்திதி இருப்பதாக யூகிக்கப்படுகின்றது. அவைகளில் உயிர் உண்டோ? அங்காரகனில் உயிர் ஏதாகிலும் இருக்கலாமென்று வெறும்உத்தேசம்-ஆனால் அங்காரகன் நமது உலகத்தைவிட வயதில் மூத்த உலகமாதலால் உயிர இருந்தால் நம்மைவிட விசேஷ அறிவை அவ்வுயிர்கள் படைத்திருக்கவேண்டும். அதற்கு சாட்சி இதுகாறும ஏற்படவில்லை. சுக்கிரனில் தண்ணீர் நிலத்தைவிட மூன்று பங்கு அதிகமாக இருத்தலால் அதில மீன்கள் உற்பத்தியாய் இருக்கலாம் என்பதோர் யூகை. சுக்கிரனில் மீன்கள் மாத்திரம் உற்பத்தியாய் இருந்தால் 'ஏதாபத்தாதாதேவர்' என்ற வேத வாக்கியப்படி அவைகளின் கடன் கடவுள் மீனவடிவமாக இருப்பார்போலும்! ஆனால் நமது கடலில் வாழும் மீன்களுக்கு கடவுளிருப்பதாகதெரியாதாகையால் சுக்கிரனில்

தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க!

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

நாத்தீகமா? ஆத்தீகமா? மக்களது ஒற்றுமைக்கு ஏற்றதெது?

(சாமவேதனுர்.)
கட்டுரை 2.

முந்தின கட்டுரையில் ஆத்திகம் ஒற்றுமைக்கு இடையிற் குறுக்கிடுமோர் முட்டுக்கட்டையென்பதை கவனித்தோம். அது பற்றி இன்னும் விரிவாய் ஆராய்தல் நலமென்றெண்ணுகிறேன்.

ஆத்திக வுணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டே உலகில் பல காலங்களில் பல்வேறு சமயங்கள் உண்டாக்கப் பட்டிருக்கின்றன. அவற்ருல் மக்களது நல்வாழ்வும், முன்னேற்றமும் செம்மையுறுமென்றே சமயவாதிகள் கூறுகின்றனர். ஆனால் சரித்திரம் அதற்கெதிராய்ச் சான்று பகர்கின்றது. ஒரு சமயமும், மற்றொரு சமயமும் ஒன்று மற்றொன்றைத்தாக்கி அவதியடைவதன்றி ஒரு சமயத்தின் உட்பிரிவுகளே ஒற்றுமை யற்று வேற்றுமையில் விழுந்து இடர்ப்படுகின்றன. இவ் வேற்றுமை காரணமாக மன்பதை எத்துணையோ துன்பத்திற்கும், அல்லலுக்கும் உட்பட்டு உழன்று வந்திருக்கின்றது!

கிறிஸ்தவ சமயத்தை எடுத்துக் கொள்ளுங்கள். கிறிஸ்துவைக் "கடவுள்" என்று கையெடுக்கும் எண்ணற்ற கிறிஸ்தவ சமயப்பிரிவுகள் ஒன்றை யொன்று, தாக்கி முட்டி, மோதி, வாதிட்டு மக்களது ஒற்றுமையைக் குலைத்து உலகின் அமைதிக்கே உலைவைத்துக்கொண்டிருக்கின்றன வென்பதை அறிவுடைய எவரேனும் மறுக்கவியலுமா? நமது உலகப்பிரசித்தி பெற்ற 'இந்து' சமயத்தின் ஊழல்கள் நம்மவரின் ஒற்றுமைக்கு ஏற்றவை யாகுமா? "சாதி" யென்ற பேய்க்கு அடிமைப்பட்டுள்ள நம் சமயத்தால் இம்மியேனும் பயன் விளையுமா? ஒற்றுமை ஊனுறுமா? இஸ்லாம் மதத்திலும் இதுகாலை உட்பிரிவுச் சண்டைகள் தோன்றி விட்டன. இஸ்லாத்தின் புனிதத்திற்காகப்பாடுபடும் திரு. தாவுத்ஷாவைக் 'கபீர்' என்று முல்லாக்கள் கூறுகின்றனரே!

இவ்வாறு பல பக்கங்கள் வரைந்து கொண்டே போகலாம். ஆயின் 'கடவுள்' என்ற ஒருபெயருடன் கண்ணிற்குத் தென்படாததும், அறிவுக்கு எட்டாததுமான ஒரு பொருள் உண்டு என்ற கூற்றிலும், அதை இவ்விதமே வணங்கல் வேண்டுமென்ற கூற்றிலும், அது எத்தகையதென்ற கூற்றிலும் ஒற்றுமையென்பது ஆத்திகர்களுக்குள் ஒருநாளும் உண்டாகாதென்பதுறுதி. ஆத்திகர்களுக்குள் அத்தகைய ஒற்றுமையும், ஒருமையும், வேண்டும் என்றால், மக்களது வாழ்க்கை செம்மையுறுதல் வேண்டுமென்றாதல் ஒரு அபா. அல்லது உணர்ச்சி இருக்கிறதென்பதற்கு ஆதாரமில்லாமலில்லை. "நீர் ("கடவுள்") பெருக வேண்டும்; நான் சிறுக வேண்டும்" என்று கிறிஸ்தவர் கூறுவர். அதன் கருத்தென்னையோ? மக்கள் எக்கேடு கெட்டாலுமென்ன? "கடவுள்" காரியம் சரியாய் நடக்கவேண்டும். அப்பிராணியைக் கும்பிடுதலும், போற்றிப் புகழுதலும், பண்டிகை கொண்டாடுதலும், பணத்தைச் செலவிட்டு கோமாளிக் கூத்தாடுதலும் சிறிதும் குறைதல் கூடாது என்பது தானே? பிற சமயங்களும் இங்ஙனமே மக்களைக் கொஞ்சமும் கவனியாது "கடவுள்" உணர்ச்சியில் ஈடுபட்டு நடந்து வருகின்றன.

மக்களது ஒற்றுமைக்கும், நல்வாழ்வுக்கும். முன்னேற்றத்திற்கும் அறிவுவளர்ச்சிக்கும் தடையாக பெரும்பாலும் ஆத்திக சமயங்களே சென்ற காலங்களில் குறுக்கிட்டு வந்திருக்கின்றன. ஒரு மனிதனது புனித வாழ்வுக்குச் சமயம் அவசியமென்ற தவறான எண்ணத்தினுற்ருன் உலகம் ஆராய்ச்சியின்றிச் சமய உணர்ச்சிக்கு அளவுகடந்த மதிப்பையளித்து வந்தது. ஆனால் இது காலை பேரறிஞர்கள் சமயம் மனிதப்புனிதத்துவத்திற்கு அவசியமன்று என்ற முடிவுக்கு வந்துள்ளனர். இனி,

நாத்திகத்தின் மேன்மையைப் பற்றிக்கவனிப்போம். "கடவுள்" உண்டு என்று கூறும் ஆத்திகர்களுக்குள் ஒற்றுமையில்லை; இருக்கமுடியாது. ஏனெனில் அப்பிராணி எத்தகையது, எங்கிருக்கின்றது, அதற்கும் மனிதனுக்குமுள்ள தொடர்பென்ன, என்பனபோன்ற பல கேள்விகளுக்கு ஆத்திகம் இடமளிக்கின்றது. ஆனால் நாத்திகத்தில் அவ்வாறொன்றுமில்லை. "கடவுள்" இல்லை யென்றுகூறும் நாத்திகர் எத்தேயத்தவராயினும், எந்நிறத்தவராயினும், எக்குலத்தவராயினும் அவருக்குள் நல்ல ஒற்றுமையுண்டு. "கடவுளை" மறுக்கும் கூட்டத்தினர் எல்லாச்சமயங்களையும் கணக்குக் குதவாதவையென்று தள்ளிவிடுவதால் பல சமயக் "கடவுள்"களும் தாக்கப்படுகின்றனர். இக்காரணத்தால் வேறு, வேறு சமயங்களில் நம்பிக்கை வைத்து ஆத்திகராயிருந்து நம்பிக்கையிழந்து நாத்திகராய் மாறிய அறிஞருக்குள் ஒற்றுமை உண்டாவது இயல்பேயன்றோ? ஆத்திகருக்குள்ளில்லாத ஒரு சிறந்த ஒன்றிப்பு, ஒருமை, ஒரு மனம் நாத்திகரிடையே உண்டாகக்காம விருக்கக் காரணமுண்டு. ஆத்திகத்தை மக்களிடையில் பரப்ப முயல்கையில் ஆத்திகர் தமக்குள் மல்லாடுகின்றனர். ஏனெனில் "கடவுள்" உணர்ச்சி குறுக்கிடுகின்றது. "கடவுளை"ப்பற்றிய இலக்கணத்தை விவரிக்கையில் பல சமயக் 'கடவுள்'களும் ஒன்றோடொன்று முட்டி மோதிக்கொள்வதால் விளைவது வேற்றுமையே; பெருந்தீங்கே. ஆனால் நாத்திகத்தைப் பரப்பவிரும்பும் நாத்திகர் வேற்றுமையடைய நிமித்தமேயில்லை. ஆத்திகத்தில் ஒன்றிப்பில்லை, நாத்திகத்திலோ வெனில் உலகம் முழுவதும் ஒன்றிடக் கூடும்.

ஆத்திகர் தாம் கொண்ட கொள்கையை மக்களிடையில் பரப்புவதையே குறிக்கோளாகக் கொண்டனர். நாத்திகர் அவ்வாறின்றி மக்களுக்குத் தொண்டாற்றுவதே மேல், சிறப்பு என்ற உறுதி பூண்டவர். ஆத்திகத்தில் கண்ணிற் றென்படாத 'கடவுளு"க்குத் தொண்டு. நாத்திகத்தில் கண்ணிற்குத் தென்படும் மக்களுக்குத் தொண்டு. சிறந்ததெது? வாசிப்போர் சிந்திப்பாராக.

நாத்திகமும் புனித வாழ்க்கையும்.

நாத்திகரனைவரும் நாசகாலிகள், தீயோர், துன்மார்க்கர் என்றே ஆத்திகர் எண்ணுகின்றனர். ஆனால் மேனாட்டில் பிரபல நாத்திகர்களான டார்வின். அக்சிலி பிரேட்லா, இங்கர்சால், பெயின், வால்ற்பேர் முதலியோர் புனித வாழ்க்கை நடத்தியதோடு, மக்களுக்குத் தொண்டாற்றி, பயனுடைய வாழ்க்கையும் நடத்தியுள்ளார்கள். ஆத்திகர் புனித வாழ்க்கையைமட்டும் சிறப்பிப்பவர். நாத்திகரோ பயனுடைய வாழ்க்கையைச் சிறப்பிப்பவர். உண்மையில் புனித வாழ்க்கை கடினமானதன்று. அதற்கு ஆத்திகவுணர்ச்சி அவசியமு மன்று. அங்ஙனம் புனித வாழ்க்கை நடத்த ஆத்திகவுணர்ச்சி அவசியமாயின் அஃதொரு அரிய பெரியகாரியமுமன்று. ஏனெனில், ஒரு மனிதன் புனித வாழ்க்கை நடத்துவதனுல் அவன் மட்டும் சிறப்படைகிறான். அவனே பயன் பெறுகிறான். பிறர்க்கு அதனுல் எட்டுணையும் பயனில்லை. இமயமலைச்சாரலில் புனித வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கும்மது 'முனிவர்களால்' நாட்டுக்குத் துளியேனும் பயனுண்டா? ஆத்திகம் புனித வாழ்க்கைக்கு அரண் செய்கின்றதென்றே கொண்டாலும் அதனுல் ஆத்திகம் மேன்மையடைந்து விடாது. ஒற்றுமையைக் குலைத்துவிடுவதால் ஆத்திகம் பயனுடைய வாழ்க்கை நடத்தத் துணை புரிவதில்லை. பயனுடைய வாழ்க்கை நடத்தும் ஒருவன் தன் புனிதத்தைபிழந்து விடினும் அதனுற் கேடொன்றும் விளைந்து விடாது. எவ்வாறு பார்ப்பினும் புனித வாழ்க்கையைக் காட்டிலும் பயனுடை வாழ்க்கையே சாலச்சிறப்புடைத்து என்ப துண்மை.

நம்பிக்கையீனத்தால் மக்களுக்கு விளைந்த நலன்.

பிரபல ஆங்கில நாத்திகரான சால்ஸ் பிறெட்லா என்ற பேரறிஞர் எழுதிய கட்டுரைகளடங்கிய அரியநூலில் ஆத்திகத்தாலும், ஆத்திகராலும் துன்புற்ற உலகத்திற்கும், மக்களுக்கும், பிரபல சந்தேகிகளால் விளைந்துள்ள எண்ணற்ற நன்மைகளைப்பற்றி அன்னார் மிக விரிவாய் விளக்கியிருக்கின்றார். நம்பிக்கையீனத்தால் "மனித சமூகம் அடைந்த இலாபம்" (Humanity's Gain From Unbelief) என்ற கட்டுரையிலிருந்து சில குறிப்புகளைக்கீழே தருகிறேன்.

"சந்தேகத்தாலும், நம்பிக்கையீனத்தாலும் கிறிஸ்தவ சமயம் புறக்கணிக்கப்பட்டுவிட மக்களது அறிவு அகன்று, பெருகி, விசாலித்து உலகினர் பல் வகையில் முற்போக்கடைந்துள்ளனர் என்கிறேன். ஏனைய சமயங்களும் ஒழிந்தாலன்றி அறிவு முதிர்ச்சியடையாது. சமயங்கள் எப்பொழுதும் ஒரே மாதிரியாகவிருப்பதில்லை. மதங்கள் ஏற்பட்ட காலத்தின் அறிவீனங்கள் நாகரீகவளர்ச்சியின் ஒளி முன்னர் தகர்த்தெறியப்படுகின்றன. மனிதனது அறிவுக்கேற்ப மத உணர்ச்சிகளும், கொள்கைகளும் மாறி வருகின்றன.

"மதவெறி கொண்ட கிறிஸ்தவர் சென்ற நூற்றுண்டுகளில் புரிந்துள்ள தீச்செயல்களுக்கு அளவுண்டோ? அவை நாகரீகத்திற்கே பெருங்குறைகளாகும். கிறிஸ்தவ சமயத்தால் உலகம் பல நன்மைகளைப்பெற்றிருக்கின்றதெனக் கிறிஸ்தவப்பாதிரிகள் கூறுவர். ஆனால் உண்மையென்னவெனில் உலகிற்கு நன்மை புரிந்தவர் பெயரளவில் மட்டும் கிறிஸ்தவர். (Only Nominal Christians) அன்னார் நன்மை செய்ததற்கு கிறிஸ்தவம் காரணமன்று. (Not because of Christianity but in spite of it)

"அடிமை வியாபாரத்தை எடுத்துக்கொள்வோம். கிருஸ்தவசமயமும், அச்சமயகுரவரனைவரும் அடிமைவியாபாரத்தை யாதரித்தனர். விவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் அடிமைவியாபாரத்திற்கு மேற்கோள்காட்டி மகிழ்ந்தனர். அடிமை வியாபாரத்தை எதிர்த்தோரைக் கிருஸ்தவசமயம் சபித்தது. எதிர்த்தோர் யார்? சந்தேகிகளும், நம்பிக்கையற்றோருந்தான். "கடவுள்" என்ற பொருளைப்பொருட்படுத்தாதோரும், அதற்குக் கையெடுக்காதோருந்தான் மக்களுக்குத்தொண்டாற்றுதலே தங்கடனெனக்கொண்ட சிறந்த மனிதர்கள்.

"ஆனால் ஆத்திகமும், ஆத்திகரும் மனிதனை அடிமைப்படுத்தி விலங்குகிலேக்குக்கொண்டேயினர், அன்றியும் பில்லி, சூனியம் முதலிய மூடப்பழக்கவழக்கங்கள் எண்ணங்களுக்குமதிப்பளித்து அவற்றால் மக்களை—அறியாமக்களைத்துன்புறுத்தியது எது? கிருஸ்தவ சமயமே விவிலியத்தில் பழைய புதிய ஏற்பாடுகளில் "வெட்டலூவி" களைப்பற்றிய கதைகள் பல

(தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க.)

ஆண் பெண் சமத்துவம்.

மனோதத்வ நிபுணர்களின் சோதனையின் முடிவு.

(நாகை கே. முருகேசன்)

ஆண் மக்கள் தங்களுடைய பெண்மக்களை அதாவது தாங்கள் மிகுதியும் மரியாதை செலுத்தும் தாய்மார்களாயிருந்தாலும் சரி, அன்பு செலுத்தும் சகோதரியாயிருந்தாலும் சரி, காதலுக்குரித்தான மனைவிகளாயிருந்தாலும் சரி, ஒரே படியாக அவர்களைக் கேவலமாகவே எண்ணியும், மதித்தும் வருவது சகஜமாக இருந்து வருகிறது. நமது நாட்டில் வெகுகாலமாக இம்மாதிரி பெண்களை இழிவாகக்கருதப்படுவதற்கு நமது சாஸ்திரங்களும், பண்டிதப்பெரியோர்களும், முற்றும் துறந்த முனிவர்களென்று சொல்லப்பட்டவர்களும் ஒருவிதகாரணமுமின்றி பெண்களைக்கேவலமாக வர்ணித்து வந்ததோடு, பாரபக்ஷமாக ஏட்டிலும் எழுதிவைத்திருக்கின்றனர். இதைப்படிக்கும் மக்கள் சாதாரணமாக தங்கள் பகுத்தறிவைக் கொண்டே ஆராயாமல் தங்கள் பெண் மக்களைக் கேவலமாக நடத்தி வந்ததோடு அவர்களுக்கு எவ்விதத்திலும் சமத்துவம் ஏற்படாதபடி சட்ட திட்டங்களையும் செய்து அதைப்பழக்கத்திலும் கொண்டு வந்து விட்டார்கள். இந்த பழக்கமானது இந்தியர் ஒவ்வொருவருடையமனதிலும் ஆழமாகப் பதிந்துவிட்டது. சுயமரியாதை இயக்கத்தின் பலனால் மக்கள் சிறிது சிறிதாகஉண்மையை உணர்ந்து வருகிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில் ஆண் பெண் சமத்துவத்தைப்பற்றி மேனாட்டு மனோதத்வ நிபுணர்கள் செய்யும் முடிவையும் நாம் பெரிதும் கவனிக்கவேண்டியது அவசியம்.

ஆடவர்கள் சாதாரணமாகப் பெண்களை "பேதையர்க"ளென்று அழைப்பதில் எவரும் பின் வாங்குவதில்லை. அடுப்பங்கரையில் சட்டி சுரண்டும் அம்மையார்களைத்தான் இவ்வாறு கூறிவிடுகிறார்களென்றாலோ தற்கால படிப்புப் படித்து ஆண்களைப்போலவே பி.ஏ., எம்.ஏ., பட்டம் பெற்றவர்களையும் கூட "எப்படியிருந்தாலும் பெண்புத்தி பின் புத்தி தானே; பேதமை என்பது மாதர்க்கணிகலன்" என்று அலட்சியமாகக்கூறி விடுகிறார்கள். இதைப்போல் பாமர மக்கள் கூறுவதுதான் ஒருபுறமென்றால் படித்த ஆண்களும் இவ்வாறு கூறுவதற்கு கூச்சமடைவதில்லை. அவர்கள் கூறுவதெல்லாம் என்ன? பெண்களுக்கு 'மூளையில்லை' என்பது தான் பொதுவானது. இது மனிதனுடைய பழக்க வாசனையா, அல்லது இயற்கை வாசனையா என்று கூட நாம் சில சமயங்களில் சந்தேகிக்கவேண்டியிருக்கிறது. என்றாலும் இது ஒரு அலட்சிய புத்தியினாலும், தற்பெருமையினாலும் நாளா வட்டத்தில் நிலை பெற்று விட்ட ஒரு தப்பபிப்பிராயமென்றே கூறவேண்டும். இந்தக் காரணத்தினாலேயே அவர்களை அலட்சியம் செய்து சரியான கல்வியை அளிக்காமல் இருந்து விட்டார்களெனக்கூறலாம். பெண்கள் புத்தியில்லாதவர்களென்று பொதுவாகக் கருதப்படுவதால் ஒவ்வொரு ஆடவரும் தங்கள் பெண்டிர்க்குஎல்லா விஷயத்திலுமே தங்களுடைய "புத்திசாலித்தனமான". யோசனைகளைக் கூற முன் வந்து விடுகிறார்கள். சமைக்கின்ற வேலை முதற்கொண்டு வீட்டு வேலைகள் சகலமும் சேர்த்துப் பிள்ளை பராமரிப்பு வரையிலுங்கூட விஷயங்கள் தங்களுக்கு எந்த விதத்திலும் அனுபோகமில்லாதிருந்துங்கூட தங்களுக்கு அதிக புத்தியுண்டு என்கின்ற ஒரு தற்பெருமையினால்—எதையும் யூகித்து சொல்லக்கூடிய திறமை உண்டென்கின்ற அசட்டுத் தைரியத்தால் தங்கள் யோசனையைப் பெண்களுக்குக் கூற முன் வந்து விடுகிறார்கள். இந்த சம்பவமானது எந்தக்குடும்பத்திலும் சகஜமானதென்றாலும் அவர்கள் அப்படிக்கூறும் சந்தர்ப்பங்கள் நேரும் போதெல்லாம் குடும்பத்திற்குள் கொஞ்சம் "முறு முறுப்பு" ஏற்படாமல் போவதில்லை. சாதாரணமாக வீட்டிலுள்ள பெண்டிர் அந்த "நிபுணத்தனமான" யோசனையை எதிர்த்துக்கண்டிக்காமல் விடுவதில்லை. சில சமயம் ஆத்திரம் பொங்கி தாங்கள் எப்பொழுதும் காட்டும் அடக்கத்தையும கூட மீறி "நீங்கள் பேசுவது இன்னதென்றே புரியாமல் பேசுகிறீர்கள்; உங்கள் வேலையைப் பார்த்துக்கொள்ளுங்கள்" என்று கூட சொல்லி விடுவார்கள். ஆடவர் தற்பெருமைக்குச் சிறிது ஆட்டங்கொடுத்தாலும தனது படிப்பை விடுவதில்லை. ஏனெனில் தன் பெண் ஜாதியைவிட இல்லை, மற்ற எந்தப்பெண்களையும் விடவே தனக்கு "அதிகமான மூளை" இருப்பதாகவே அவரது எண்ணம். அதோடு அதை "நிரூபித்து" காட்டக்கூட முடியு மென்று கூறுவார்கள். அதற்கு உதாரணங்களின் மேல் உதாரணம் எடுத்துக் காட்டுவார்கள். எது எப்படியிருந்தாலும் இவர்கள் இம்மாதிரியாக தம்பெண் ஜாதிகளுக்கு குடும்ப விஷயத்தைப்பற்றி யோசனை கூறப்போகும் போதெல்லாம் "முறுமுறுப்பு" ஏற்படுவதற்குக் காரணந்தானென்னவென்று யோசித்தாலோ இவர் கூறும் 10 யோசனைகளில் $9\frac{7}{8}$ யோசனைகள் சரியாகயிருப்பதில்லை. ஆனால் இவர் யோசனை சரியென்று இவர் நிரூபிப்பதற்கு பேசுகின்ற பேச்சோ ஊரைவளைக்கும்; ஆடுகின்ற ஆட்டமோ சொல்லமுடியாது. மற்ற உப அங்கங்களுக்கும் குறைவிருக்காது. இருந்தும் என்ன பயன். சில சமயம் இவர் கூறப்புறப்படும் யோசனைகள் யாவுமே பிசகாய் போய் விடுவதுண்டு.

ஆனால் அவர்கள் சச்சரவு எப்படியிருந்தாலும் இருந்து போகட்டும். மனோ தத்வ நிபுணர்கள் இது விஷயமாக என்ன கூறுகிறார்களென்றாலோ பெண்டிர்க்கும் "சரியான மூளை உண்டு" என்கிறார்கள். இது உத்தேசமென்றோ, கிட்டத்தட்ட என்றோ, வேறு சித்தாந்தமென்றோ சொல்லிவிட முடியாது. அவர்கள் நேரடியாக சோதித்துப்பார்த்து ஆராய்ந்தறிந்து கண்டறிந்த முடிவுண்மைகளாகும். அமெரிக்காவிலே ஒரு கல்லூரியிலுள்ள 115 ஆண்களையும், 111 பெண்களையும் எடுத்துக்கொண்டு அவர்களுடைய புத்தித்திறமையைப்பற்றிவெகு கவனமாக சோதனை செய்து பார்த்ததில் சராசரியாக பெண்களுக்கும் சரி, ஆண்களுக்கும்சரி சமத்துவமாக 142 மார்க்குகள் கொடுத்தார்களாம். அதைவிடுத்து பல பிரபல்யமான கல்லூரிகளிலுள்ள எல்லோரையும் ஒன்றுசேர்த்து மொத்தம் 3175 ஆண்களையும், 1575 பெண்களையும் சோதித்துப்பார்த்ததில் அவர்களுடைய கல்வித்திறமையானது 'ஏ' கிரேடு, 'பி' கிரேடு முதலிய இரண்டுமே சேர்த்து ஆண்களுக்கு 100க்கு75.4 மார்க்குகள் என்றும், பெண்களுக்கு 100க்கு 75. 2 மார்க்குகள் என்றும் முடிவிற்கு வந்தார்களாம். அமெரிக்காவில் ஹேர்வார்டு பல்கலைக்கழகமானது சற்றுமேல் தரமான கல்லூரி. இதனுடைய மாணவர்களையும், உயர்தராட்கிளிப்பெண் கல்லூரியிலுள்ள மாணவிகளையும் சோதித்து சில மாதங்கள் அவர்களுடைய அறிவுத்திறமையை ஆராய்ந்து பார்த்ததில் ஒருமாணவனும், ஒருமாணவியும் மாத்திரம முதல்தரமானவர்களென்று தேர்ந்தெடுக்கப்பெற்று அவர்களுக்கு 86% மார்க்குகள் நிர்ணயிக்கபபட்டது. ஒரு ஹார்வார்டுமாணவர் எல்லோரையும்விட நிரம்பத்தாழ்ந்ததான 6% மார்க்கு வாங்கினதைப்பற்றி யாவரும் ஆச்சரியப்படநேர்ந்தது. ஆனால் வெகு குறைந்த மார்க்குகள் வாங்கின பெண்மணிகள் மாத்திரம் 28% மார்க்குக்கு குறையாமல் வாங்கியிருந்தார்கள். பொதுவாக எல்லோரையும் சேர்த்து சராசரி பார்த்தபொழுது மாணவர்களுக்கு 100க்கு 50. 5 ஆகவும், மாணவிகளுக்கு சராசரி100க்கு 55 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டது. இதில் பெண்களுக்கும் ஆண்களுக்குமிடையே அறிவு, திறமை இவைகளில் அதிகமான வித்தியாசங்கள் இருக்கவில்லை என்பது திட்டமாகத்தெரிகிறது. மற்றும் அவரவர்களுக்கு இட்ட வேலைகளில் சிறிதும் ஏற்றத்தாழ்வு கூற முடியாதபடி திறமையாகவே நடத்தக்கூடிய ஆற்றல் உண்டென்று தெரிகிறது.

இப்பொழுது நாம் சாதாரணமாக உலகத்திலேயே உள்ள ஆண், பெண்களையும் எடுத்துக் கொண்டோமானாலும், திறமைசாலிகளான பெண்கள் சராசரியில் சமத்துவமாகவே தோன்றியிருப்பதாக கண்டு கொள்ளலாம் ஆண்களுக்குப்பிறகு எவ்வளவோ காலத்திற்குப்பின்னால் பெண்கள் தங்கள் சுதந்திரங்களைப் பெற்றிருந்தாலும் இந்தக்குறுகியகாலத்திற்குள் நல்ல புகழ்பெற்ற ஆசிரியைகளும், நடிகர்களும், பிரசங்கிகளும், வர்த்தகம் முதலான துறைகளில் தேர்ச்சி பெற்றவர்களும், எண்ணிக்கையில் கூடுமான வரையில் விதாச்சாரத்

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க.

இந்தியா கவர்ன்மெண்டில் ரிஜிஸ்டர் செய்த உண்மையான மருந்துகள்.

மூன்று லட்சம் புட்டிகள் விலையாகி விட்டன.

நற்சாட்சிகள் ஏராளம்! தங்கமெடல்கள் பெற்றது!! விலைசகாயம்.

20 வருஷங்களாக அனுபவமுள்ள கைகண்ட ஔஷதங்கள்.

ஆயிரக்கணக்கான ஏஜண்டுகளும், வைத்தியர்களும், வியாபாரிகளும் வாங்குகிறார்கள்.

கெய்ரோடைன்

பத்தியம் கிடையாது. ரிஜிஸ்டர் செய்தது. ஆறுமுக முத்திரையுள்ளது. கெடுதல் செய்யாது.

இது தாதுபுஷ்டிக்கு அதிசயமான டானிக் மருந்து.

இந்த ஒரே மருந்தினால் தீரும் வியாதிகளாவன:---

3 நாளில் வயிறு மந்தம், புளிச்சேப்பம், அஜீரண வாய்வுகள், மந்த வாய்வுகள் குணமாகும்.
6 ,, இரத்தமூலம், மூலக்குத்தல், வேதனைகள், மூலவாய்வுகள் தீரும், அபானவாய்வுகள் நன்றாய் வெளியாகும்.
7 ,, மலச்சிக்கல், வாய்வுகள் நீங்கி ஏராளமான பசி உண்டாகும். பித்த வாய்வு நீங்கும். அதிக உணவு செல்லும்.
9 ,, வயிற்றுவலி, வாந்தி, பித்தம், மயக்கம், புளிச்சேப்பம், எரிகுன்மம், நெஞ்சுவலி, வாய்வுக்குத்து, மார் அடைப்பு தீரும்.
10 ,, இரத்தம் ஊறும், ஊக்கமும், சுறுசுறுப்பும், நாடி நரம்புகளுக்கு வலிமையும், தேகபலமும் தரும்.
15 ,, வீரிய விருத்தியும், ஏராளமான தாதுபுஷ்டியும் மீறிவரும். சொப்பனஸ்கலிதம், அசதிகள் தீரும்.
20 ,, இருமல், இழுப்பு, நெஞ்சில் கபம், மந்தாரகாசம், சுவாசகாசம், ஈளைகாசம், க்ஷயம், சுரம், எலும்புருக்கி தீரும்.
25 ,, வாய்ப்புண், குடல்புண், நெஞ்சுப்புண்கள் ஆறும். கண்ணெரிச்சல், மூளைகொதிப்பு குணமாகும்.
30 ,, சூடு, நாள்பட்ட வெள்ளை, தந்திமேகம், மூலச்சூடு, நீர்க்கடுப்பு, மஞ்சள் மூத்திரம். உஷ்ண நோய்கள் தீரும்.
31 ,, சூதக வாய்வு, சூதக வயிற்றுவலி, சூதகக்கட்டு, கருப்பவெள்ளை, சூதக ஜன்னி, மலக்கிருமிகள் குணமாகும்.
32 ,, மெலிந்த தேகம் புஷ்டியாகும். உடம்பு நிறை அதிகப்படும், தாது கட்டும், இரத்தம் ஏராளமாக விருத்தியாகும்.
33 ,, தேகக்குளிர்ச்சியும், செழிப்பும், முகத்தில் அழகும், வசீகரமும் உண்டாகும். கை நடுக்கம், தேகவெளுப்பு மாறிவிடும்.
34 ,, புண்கள், சொறி கரப்பான் வியாதிகள், சிரங்கு, அரிப்புகள், கிரந்தி மேகநீர், துர் நீர் வியாதிகள். நீங்கும்.
35 ,, மேகநீர், கண்மங்கல், கண்கூச்சம், சிவப்பு, வலிகள், மாலைக்கண், தீபமங்கல் குணமாகும்.
36 ,, குழந்தை பெற்றிருக்கிற தாய்மார்களுக்குப் பாலுண்டாகும். பலம் வரும். குழந்தைகளும் புஷ்டியாய் வளரும்.
37 ,, வயது முதிர்ந்த கிழவர்களுக்கு நடக்கவும், களைப்பில்லாமல் வேலை செய்யவும் முடியும். சாப்பாடு நன்றாய்ச் செரிக்கும்.
38 ,, குளிர்சுரம், மலேரியாசுரம், யானைக்கால் சுரம், பிளேக்சுரம், விஷசுரங்களை அடிக்கடி வாராமல் நிறுத்திவிடும்.
39 ,, நெடுநாளாக சமையாமலும், இரத்தபுஷ்டி இல்லாமலுமுள்ள பெண்கள் சாப்பிட்டால், இரத்த புஷ்டியுண்டாகி பருவமடைவார்.
,, ,, மந்தாரகாசம், சுவாசகாசம், காக்கைவலிப்பு, மூர்ச்சை மயக்கம், வாதங்கள், ஜன்னிகளை அடிக்கடிவாராமல் தடுத்துவிடும்.
40 ,, உடம்பு மெலிந்துபோவதினால் உண்டாகும் எலும்புருக்கி, க்ஷயரோகம், இருமல் வியாதியை வாராமல் தடுக்கும்.

ஒரு மண்டலம் தொடர்ச்சியாகச் சாப்பிட்டால் பலவீனம், மலடுகள், ஆண்மைக்குறைகள் நீங்கும். வாதங்கள், வலிப்புகள், குன்மக்கட்டிகள், சூலக்கட்டிகள், ஆரம்பக்குஷ்டங்கள், மேகநீர், துர்நீர் வியாதிகள், புண்புரைகள், பற்பல வியாதிகள் சேர்ந்த தொந்த வியாதிகளையெல்லாம் சமப்படுத்தி உடலுக்கு வலிமையும், ஆயுள் பலமும் தரும். இது ஒரு கல்பமருந்து.

வியாதி இருந்தாலும், இல்லாவிட்டாலும், ஆண், பெண் யாவரும் யாதொரு பத்தியமும் இல்லாமல் சாப்பிடலாம்.

பூரண சுகத்திற்கு ஒரே புட்டி மருந்து போதுமானது 80 வேளை மருந்து புட்டி 1க்கு விலை ரூ. 5-0-0.

எமது "சித்தர் சஞ்சீவி மாத்திரையை" இரண்டு மூன்று நாளைக்குப் பேதிக்குச் சாப்பிட்டு அதன் பிறகு 'கெய்ரோடைன்' டானிக் சாப்பிட்டால் சீக்கிரம் குணம் உண்டாகும். சித்தர் சஞ்சீவி மாத்திரை புட்டி 1க்கு விலை அணா 8.

எல்லா மருந்துகளுக்கும் பாக்கிங் தபால் செலவு வேறு. முன்பணம் அனுப்பவேண்டும். மலாய் நாட்டார்கள் ஆர்டருடன் (கேட்லாக் இனாம்.)

ஹெட் ஆபீஸ் விலாசம்:—

தந்தி விலாசம்,— "சித்தர்" மதுரை.

ஆர். எஸ். பதி அன்கோ, (Regd)

215, மேலமாசி வீதி, மதுரை.

கிளை ஆபீஸ்:—

ஸ்ரீ மீனாட்சியம்மன் கோயில் மேலக்கோபுரம், உட்புறம், மதுரை.

திரு. காந்தி
தனித்தொகுதியை மறுப்பதின்
ரகசியம்
I
சீர்திருத்தம் கூடாது என்பதேயாகும்.

(தேசீயத் துரோகி)

திரு. காந்தியும், காங்கிரசும், பார்ப்பனர்களும், தனித் தொகுதி கூடாது கூடாது என்று கூச்சலிட்டுக்கொண்டு வருகின்றனர். தனித்தொகுதி இருந்தால், அரசியலில் எல்லாவகுப்பினர்களும் சம உரிமைபெற முடியும். ஆகையால் தனித்தொகுதியோடு கூடிய அரசியல் சீர்திருத்தமே வேண்டுமென்றும், நாட்டில் உள்ள சிறுபான்மை வகுப்பினர்களும், அவர்களின் தலைவர்களும் கூறுகின்றனர். இதை நாட்டின் உண்மை நிலையைத் தெரிந்த நடுநிலைமையாளர்கள் சரியென்று ஒப்புக்கொள்ளுகின்றனர். ஆனால், தனித்தொகுதிக்கு எதிராக இருக்கின்றவர்கள், தனித்தொகுதி வேண்டுமென்று கூறுபவர்களையும், அதை ஆதரிப்பவர்களையும், வகுப்புவாதிகள் என்றும், தேசத்துரோகிகள் என்றும், தாராளமாகப் பிரசாரஞ் செய்கின்றனர். தேசியப் பத்திரிகைகளும், இவர்கள் பாடும் பல்லவியையே பாடி வருகின்றன.

இந்த முறையிலேயே பார்ப்பனரின் மகாத்துமாவாகிய திரு. காந்தியும், அவரைப் பின்பற்றுபவர்களும், ஒரே யடியாகத் தனித்தேர்தல் முறை கூடாது என்று கூறுவார்களானால், அதில் ஏதாவது தேசிய நோக்கம் இருக்கலாம் என்றாவது சொல்ல இடமுண்டு. ஆனால் இங்கிலாந்து வட்டமேஜை மகாநாட்டிற்குப் போன பின், திரு. காந்தியும், மாளவியா போன்ற வைதிகர்களும், முஸ்லீம்களுக்கும், சீக்கியர்களுக்கும், தனிப் பிரதிநிதித்துவம் கொடுக்கச் சம்மதிப்பதாகவும், தீண்டாதார்களுக்கும், மற்றசிறுபான்மை சமூகத்தாருக்கும் தனிப்பிரதிநிதித்துவம் கொடுக்கக் கூடாதென்றும் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

திரு. காந்தியவர்கள், "எனது உயிரை விட்டாவது தீண்டாதாருக்குத் தனிப்பிரதிநிதித்துவம் கொடுப்பதை மறுப்பேன்" என்று வெகு உறுதியாகப் பலவிடங்களில் சொல்லி வருகிறார். வட்டமேஜை மகாநாட்டிலிருக்கும் மற்ற வைதிகர்களும், திரு. காந்திக்குத் துணையாக நிற்கின்றனர். ஆனால் திருவாளர்கள். சாப்ரு, பாத்ரோ போன்ற அரசியல் வாதிகளும், முஸ்லீம்களும், தீண்டாதாருக்கும் சிறுபான்மையோருக்கும் தனிப்பிரதிநிதித்துவம் கொடுப்பதை உறுதியாக ஆதரித்து நிற்கின்றனர்.

முஸ்லீம்களும், தீண்டாதார்களும், மற்ற சிறுபான்மை வகுப்பினர்களும் சேர்ந்து ஒவ்வொரு மாகாணச் சட்டசபையிலும், தலைமைச் சட்டசபைகளிலும், ஒவ்வொரு வகுப்பினருக்கும், இத்தனை இத்தனை பிரதிநிதிகள் இருக்கவேண்டுமென்று ஒரு திட்டம் தயார் செய்து, அதை முதல் மந்திரி, திரு. மெக்டனால்டு அவர்களிடம் கொடுத்து விட்டார்கள். அத்திட்டத்தினாலும், தீண்டாதார்களுக்கு அரசியல் சமூகப்பங்கு கிடைக்கிறதே அல்லாமல் சமத்துவம்பெறுவதற்குத் தடை இருக்கிறதாயினும், திரு. மெக்டனால்டு அதை ஒரு முக்கியமான திட்டமாகக் கருதி, சிறுபான்மையோர் பிரச்சினைக் கமிட்டியின்கடைசிக்கூட்டத்தில், "சிறுபான்மையோர் உரிமைகளை முடிவு செய்யும்போது அத்திட்டத்தையும், முக்கியமான ஒரு கருவியாகவைத்துக்கொண்டு முடிவு செய்யப்படும்" என்று கூறிவிட்டார்.

ஆகவே, பிரிட்டிஷாரும், முஸ்லீம்களும், கிருஸ்தவர்களும், தாழ்த்தப்பட்டவர்களும் ஐரோப்பியரும், வட்டமேஜை மகாநாட்டு இந்தியப் பிரதிநிதிகளில் மெஜாரிட்டியாரும், தீண்டாதாருக்கும், மற்ற சிறுபான்மையினருக்கும் தனிப்பிரதிநிதித்துவம் கொடுப்பதை ஆதரிக்கின்ற காரணத்தால் வட்டமேஜை மகாநாடு வெற்றிகரமாக முடிந்தால் தனிப்பிரதிநிதித்துவம் விரும்பும் சமூகத்தாருக்கு அது கிடைப்பது நிச்சயம். இவ்வாறு தனிப்பிரதிநிதித்துவம் கேட்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், சிறுபான்மையினருக்கும் வெற்றி யேற்படாமலிருக்கத் திரு. காந்தியும் எவ்வளவோ சூழ்ச்சிகள் செய்து பார்த்தார். முஸ்லீம்களுக்கு அவர்கள் இஷ்டப்படி பாதுகாப்பு கொடுக்கச் சம்மதிப்பதாகவும், ஆனால் அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனிப்பிரதிநிதித்துவம் கொடுக்க மறுக்கும் விஷயத்தில் தன்னோடு ஒத்துழைக்கச் சம்மதிக்கவேண்டுமென்றும் கேட்டார். ஆனால் முஸ்லீம் பிரதிநிதிகளோ இந்த மோசமும், சூழ்ச்சியுமான உடன்படிக்கைக்குச் சிறிதும் சம்மதிக்க வில்லை.

இவ்வாறு தீண்டாதார்களுக்கும், மற்ற சிறுபான்மை வகுப்பினரான கிருஸ்தவர், ஐரோப்பியர் முதலானவர்களுக்கும் ஒரேபிடிவாதமாகத் தனிப்பிரதிநிதித்துவம் கொடுக்க திரு. காந்தியவர்கள் மறுப்பதன் இரகசியம் என்ன என்பதைக் கவனிப்போம். திரு. காந்தியும், மாளவியா, ரங்கசாமி அய்யங்கார்முதலானவர்களும் வருணாச்சிரம தருமத்திற்கு முன்வேலி போடுகிறவர்கள் என்பதை அவர்கள் பேச்சிலிருந்தும், நடவடிக்கைகளிலிருந்தும் நன்றாய் அறியலாம். வரப்போகும் சுயராச்சியம், வைதிகர்களுக்கும், அவர்கள் மதங்களுக்கும், கலைகளுக்கும், நாகரீகங்களுக்கும் பாதுகாப்பு அளிக்கும் சுயராச்சியமாக இருக்க வேண்டும் என்பது திரு. காந்தியினுடைய கொள்கையும், காங்கிரஸ் கொள்கையும் ஆகும் என்பதைக் கராச்சி காங்கிரஸ் செய்திருக்கும் தீர்மானத்திலிருந்து அறியலாம்.

முஸ்லிம், கிருஸ்தவர், தீண்டாதார், ஐரோப்பியர் ஆகிய எல்லோருக்கும் தனிப் பிரதிநிதித்துவம் கொடுத்து விட்டால், சட்டசபைகளில் இவர்களின் சரியான பிரதிநிதிகள் கண்டிப்பாக வந்து சேர்ந்து விடுவார்கள். மேற்கண்ட வகுப்பினர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்தால் இந்துக்களின் பிரதிநிதிகளுக்கு சற்றேறக்குறைய சமமாக ஆகி விடுவார்கள் முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் ஐரோப்பியர்களும், தீண்டாதார்களும், வைதீக இந்துக்களைப் போல் வருணாச்சிரமதர்ம வாதிகள் அல்லர்; சமதர்ம விரோதிகள் அல்லர். ஆகையால் சீர்திருத்த தீர்மானங்களும் சமூக சமத்துவத் தீர்மானங்களும் சமதர்மத் தீர்மானங்களும் நிறைவேற்றப்படலாம். இவைகளின் மூலம் வைதீகமும, வருணாச்சிரம தர்மமும் அழிக்கப் படலாம். ஆகவே வருணாச்சிரமதர்மமும், வைதீகஇந்து மதமும், அழிய வேண்டிய நிலைக்கு வந்து விடும். இந்தக் கருத்தை மனத்தில் வைத்துக் கொண்டு தான் வருணாச்சிரமத்தையும், வருணாச்சிரமஇந்து மதத்தையும் காப்பாற்றவே பிறந்திருக்கும் திரு. காந்தி தீண்டாதார்களுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் கொடுக்க மறுக்கிறார் என்பதில் சந்தேகப்பட வேண்டிய தில்லை.

திரு. காந்தியின் மனப்பான்மை நன்றாய் அறிய வேண்டுமானால் மற்றொரு விஷயத்திலிருந்தும் தெரிந்து கொள்ளலாம். அதாவது திரு. காந்தியவர்களை "முஸ்லிம்களுக்கும், சீக்கியர்களுக்கும் தனிப்பிரதிநிதித்துவம் கொடுக்கச் சம்மதிக்கும் போது, தீண்டாதவர்களுக்கு அவ்வாறு கொடுக்க ஏன் ஆட்சேபிக்கிறீர்கள்" என்று கேட்ட போது, திரு. காந்தி 'லெட்சுமணபுரி காங்கிரஸ் ஒப்பந்தப்படி அவர்களுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் கொடுப்பதைக் காங்கிரஸ் ஒப்புக் கொள்ளுகிறது" என்றார். மறுபடியும் "லெட்சுமணபுரி ஒப்பந்தப்படி சீக்கியர்களுக்குத் தனிப்பிரதிநிதித்துவம் கொடுக்க ஏற்பாடு இல்லையே" என்று கேட்ட போது, இதற்குத் திரு. காந்தி 'சரித்திர சம்பந்தமான காரணங்களால் முஸ்லிம்களுக்கும், சீக்கியர்களுக்கும் தனிப்பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டியதிருக்கிறது" என்று கூறினார். இவ்வார்த்தையில் தான் திரு. காந்தியின் மனப்பான்மை நன்றாய் விளங்குகிறது.

முஸ்லிம்களும், சீக்கியர்களும், பரம்பரையாகப் பெருமையோடுவாழ்ந்தவர்கள். அரசர்களாக இருந்து ஆட்சி புரிந்தவர்கள் ஆகையால் அவர்கள் அரசாங்க உரிமைகளுக்குப் பாத்தியமுடையவர்கள். ஆகவே அவர்களுடைய உரிமைக்குப் பங்கம் உண்டாகாதபடி அரசியல் பாதுகாப்புகள் வேண்டியது என்னும் கருத்தும் தீண்டாதார்களோ பரம்பரையாகச் சுதந்தரமின்றி அடிமையாகத் தாழ்த்தப்பட்டே வாழ்ந்தவர்கள். அவர்கள் ஆட்சி புரிந்த பரம்பரையைச் சேர்ந்தவர்கள் அல்லர், ஆகையால் அவர்களுக்கு அரசியலில் பங்கு பெறுவதற்குப் பாதுகாப்பு வேண்டிய அவசியமில்லை என்ற கருத்தும் அடங்கியிருக்க வில்லையா? இக்கருத்துக்கும் வருணாச்சிரம தர்மத்தைப் பாதுகாக்க வேண்டும் என்னும் அபிப்பிராயத்திற்கும் வித்தியாசம் என்ன இருக்கிறது. வருணாச்சிரம தருமம் எவ்வாறு பரம்பரையாக உயர்வு பெற்று சுதந்தரம் அனுபவிப்பவர்கள் அவ்வாறே அனுபவிக்கவும், பரம்பரையாக அடிமையாக இருந்து தொழிலாளிகளாய் கூலிகளாய் அல்லற்படுபவர்கள் அவ்வாறே இருக்கவும் அரண் செய்கிறதோ அவ்வாறு தானே திரு. காந்தியின் மேற்கண்ட அபிப்பிராயம் இருக்கிறது என்பது யோசித்துப் பார்ப்பவர்களுக்குத் தெரியாமற் போகாது.

இன்று தீண்டத் தகாத வகுப்பினர்கள் இந்தியாவில் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்பது திரு. காந்திக்குத் தெரியாததல்ல. பொது ரோட்டில் நடக்க முடியாத தீண்டத் தகாதவர்கள்-பொதுக் குளம், கிணறுகளில் தண்ணீர் எடுக்க முடியாத தீண்டத்தகாதவர்கள்-பொது இடமான கோயில் சத்திரம் முதலியவைகளில் பிரவேசிக்க முடியாத தீண்டத் தகாதவர்கள்-ரயில்வேஸ்டேஷன் ஹோட்டல்களிலும, மற்றும் தனிப்பட்டவர்கள் வைத்திருக்கும் ஹோட்டல்களிலும் போக முடியாதிருக்கும் தீண்டத்தகாதவர்கள் பொதுத்தொகுதியில் நின்று உயர்ந்த ஜாதிக்காரர்களால் சட்டசபைக்குத்தெரிந்தெடுக்கப் படுவார்களா? என்பது திரு. காந்திக்குத் தெரியாததல்ல. வயது வந்தவர்கள் எல்லோருக்கும்ஓட்டுரிமைகொடுக்கும் காரணத்தாலும், திரு. காந்தியின் காங்கிரஸின் முயற்சியாலும் ஒரு தீண்டத்தகாத வகுப்புப்பிரதிநிதி தெரிந்தெடுக்கப்படவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டாலும் [ஏற்படுவதே சந்தேகம்] திருவாளர்கள் அம்பெட்கார், ஆர். சீனிவாசன், எம். சி. ராஜா போன்ற உண்மையான-சுயமரியாதையுள்ள அவ்வகுப்புப்பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படமுடியாமல் உயர்ந்த ஜாதிக்காரர்களின் தயவைநாடி அவர்களுடைய அபிப்பிராயத்தை

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க.

கார்ப்பொரேஷன் தேர்தலைப்பற்றி பார்ப்பனர் குறை கூறுவதன் ரகசியம்.

II

(தேசீயத் துரோகி)

சென்னை கார்ப்பொரேஷனில் திரு. எ. ராமசாமி முதலியார் தலைவராயிருக்கும் காலத்தில், தலைவர் தேர்தலுக்குப் போட்டி போட்டுக்கொண்டு அதனால் வகுப்புச் சண்டையை வளர்க்கும் தொல்லையை நீக்குவதற்காக ஒரு சமாசமான முடிவு செய்து கொண்டனர். அந்த முடிவின்படி ஒவ்வொரு வருஷமும், தலைவர் தேர்தல் கஷ்டமில்லாமல் நடக்கலாயிற்று. அவ்வொப்பந்தம் சென்னையில் உள்ள ஒவ்வொரு வகுப்பினரும் தங்கள் தங்கள் எண்ணிக்கைக்குத் தக்கவாறு கார்ப்பொரேஷனில் தலைமைப்பதவிபெற வழிசெய்தது. அவ்வொப்பந்தம் ஏற்பட்ட காலத்தில் அனேகமாக எல்லோரும் அதை நியாயமான ஒப்பந்தம் என்று பாராட்டினர். அவ்வொப்பந்தமாவது.

1. பிராமணரல்லாதார்.
2. பிராமணர்.
3. பிராமணரல்லாதார்.
4. கிருஸ்தவர்.
5. பிராமணரல்லாதார்.
6. முஸ்லீம்.
7. பிராமணரல்லாதார்.
8. தாழ்த்தப்பட்டவர்கள்.

என்று இவ்வாறு குறிப்பிட்டபடி அந்தந்த வகுப்பிலிருந்து தலைவர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டியது என்பதாகும். இவ்வொப்பந்தப்படியே முதலில் திரு. பி. டி. குமாரசாமி செட்டியார் அவர்கள் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். அவருடைய உத்தியோக காலமாகிய ஒரு வருஷம் முடிந்தபின், அடுத்த தலைவர் தேர்தல் சென்ற 12—11—31ல் நடைபெற்றது.

இத்தேர்தலில், முன் ஏற்படுத்திய திட்டப்படி ஒரு பிராமணர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டியவராவார். ஆகையால் பிராமணரல்லாத வகுப்பினரும், மற்ற வகுப்பினரில் யாரும் தலைவர் தேர்தலுக்குப் போட்டியிடவில்லை. ஆனால் பிராமணர்களுக்குள்ளேயே போட்டி உண்டாயிற்று. திரு. ஜி. ஏ. நடேசன் அவர்களும், திரு. டி. எஸ். ராமசாமி அய்யர் அவர்களும் போட்டியிட்டனர். இப்போட்டியில் திரு. டி. எஸ். ராமசாமி அய்யரே வெற்றிபெற்றார். திரு. ஜி. ஏ. நடேசன் தோல்வியுற்றார். பார்ப்பனரல்லாத கார்ப்பொரேஷன் அங்கத்தினர்கள் திரு. டி. எஸ். ராமசாமி அய்யருக்கு ஓட்டுச்செய்தனர். பார்ப்பன அங்கத்தினர்களும், ஐரோப்பிய அங்கத்தினர்களும் திரு. ஜி. ஏ. நடேசனுக்கு ஓட்டுச் செய்தனர்.

திரு. நடேசன் தோற்றதும், திரு. சத்தியமூர்த்தி சாஸ்திரியார் முதலிய பார்ப்பனரும் மற்றும் பார்ப்பன தாசர்களும் ஐரோப்பிரும் "ஒப்பந்தம் முறிந்துவிட்டது" "முறிந்து விட்டது" என்று கூச்சல்போட ஆரம்பித்து விட்டனர்.

ஆனால் உண்மையில் ஒப்பந்தம் முறிந்து விட்டதா என்றால் முறியவில்லை என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. எப்படி எனில் இது வகுப்புவாத சம்பந்தமான ஒப்பந்தமே யொழிய வேறில்லை. உண்மையிலேயே ஒப்பந்தம் முறிந்து விட்டதென்றால், பிராமணருக்குப் பதிலாக மற்றொரு பிராமணரல்லாதாரோ கிறிஸ்தவரோ, தாழ்த்தப் பட்டவரோ தலைவராக வந்திருக்க வேண்டும். அவ்வாறில்லாமல், ஒப்பந்தத்தின் நிபந்தனைப்படி ஒரு பிராமணரே தலைவராக வந்திருக்கும் போது, ஏன் ஒப்பந்தம் முறிந்து விட்டதென்று கூச்சலிட வேண்டும் என்பதை நன்றாய் யோசித்துப் பார்த்தால் அதில் உள்ள இரகசியம் விளங்கும்.

முதற்காரணம் பார்ப்பனர்களின் மனத்திற்கிசைந்த ஒரு பார்ப்பனர் தெரிந்தெடுக்கப்படாததாலும், திரு. ஜி. ஏ. நடேசன் அவர்கள் பிராமணீயத்தையும், பிராமணர்களையும் அனுசரிக்கும் முழு வகுப்புவாதியாக இருந்ததால். இக்காரணத்தைக்கொண்டு தான், பார்ப்பனர்கள் அவரை ஆதரித்தனர். ஐரோப்பியர்களைப் பற்றி நாம் சொல்ல வேண்டியதில்லை. அதுவும் சென்னையில் உள்ள ஐரோப்பியர்களும், பார்ப்பனர்களும், சகோதரர்களாகவோ, சம்பந்திகளாகவோ, ஒருவரோடு ஒருவர் சேர்ந்திருப்பவர்கள் என்பது நாடறிந்த விஷயமாகும்.

அன்றியும் பார்ப்பனர்களால் ஆதரிக்கப் படுகிறவர் பார்ப்பனரல்லாதார்களுக்கு விரோதியாய் இருப்பார்கள். அப்படியிருப்பவர்களைத் தான் பார்ப்பனர்களும் ஆதரிப்பார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. பார்ப்பனர்களில் வகுப்புவாதம் இல்லாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள் என்பது உண்மையானாலும், இரண்டு பிராமணர்கள் போட்டி போடும் போது அவர்களில் அதிக மோசமில்லாத ஒருவரை ஆதரிப்பதால் பிராமணரல்லாதார் செய்கையில் குற்றமாகாது, இந்த உத்தேசத்தின் பேரிலேயே, பார்ப்பனரல்லாதார் திரு. டி. எஸ். ராமசாமி அய்யரைத் தேர்தலில் ஆதரித்தனர். அன்றியும் பார்ப்பனரல்லாதாருடன் நெருங்கிப் பழகுபவர்களிடம் பார்ப்பனர்களுக்கு எப்படி விருப்பம் இருக்கக்கூடும்? ஆகையால் தான் ஒப்பந்தம் முறிந்து விட்டது என்று அவர்கள் வீண் புரளி செய்கின்றனர். இது ஒருபுறமிருக்க இதைவிட முக்கியமான இரகசியம் என்னவென்றால் இவ்வொப்பந்தத்தை அடியோடு ஒழித்து விட வேண்டும் என்னும் நோக்கமும் ஆகும். ஏனெனில், இன்னொரு முறை பிராமணர் தலைவராய் வர 7 வருஷங்கள் ஆகும். அது வரையிலும், பிராமணரல்லாதாரும், கிறிஸ்தவரும், மகமதியரும், தாழ்த்தப்பட்டவருமே தலைவராயிருக்கமுடியும். இவ்வாறு மற்றவகுப்பினர்கள் நீண்டகாலம் பதவி வகிப்பது பார்ப்பனர்களுக்குப் பொறுக்குமா? அன்றியும் ஒவ்வொரு தேர்தலிலும் பார்ப்பனர்கள் உள்ளே புகுந்து கலகம் செய்து கக்ஷிசேர்க்கவும் இவ்வொப்பந்தத்தால் இடமில்லாமல்போய்விட்டது. இந்த காரணங்களால் பார்ப்பனர்கள் ஒப்பந்தத்தை ஒழித்துவிடவேண்டிய அவசியத்தில் வந்துவிட்டார்கள். வெள்ளைக்காரரும் பார்ப்பனர்களுடைய தாயாதிகளேயானதால் இந்த ஒப்பந்தத்தால் வெள்ளைக்காரருடைய தயவுக்கு காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஆதலால் அவர்களுக்கும் தங்கள் தயவு தலைவர் அபேக்ஷகர்களுக்கு இல்லாமல் போய்விட்டதே என்கின்றதைக்கொண்டு தங்களையாரும் இனிலக்ஷியம் செய்யமாட்டார்களே என்றுபயந்து கொண்டதுடன், இனித்தேர்தலிலும் தங்கள் தாசர்களைக்கொண்டு வரமுடியாமல் போய்விடுமே என்ற ஆத்திரத்தினாலும் ஒப்பந்தம் முறிந்துபோய்விட்டது என்று புரளி செய்கின்றனர். பார்ப்பனப்பத்திரிகைகளாகிய சுதேசமித்திரனும், இந்துவும், இவ்வெண்ணத்தோடுதான், ஒப்பந்தம் முறிந்துவிட்டது என்று எழுதியிருக்கவேண்டும்.

திரு. ஜி. ஏ. நடேசன் தோற்றதனால் வருத்தமடைந்தவர்கள் சீனியர் அங்கத்தவராகிய திரு. நடேசன் அவர்களையே பார்ப்பனரல்லாதார் ஆதரித்திருக்கவேண்டும் என்று கூறுகின்றனர். சீனியருக்கும் ஒப்பந்தத்திற்கும்

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க.

சென்னை சுயமரியாதை மகாநாடு.

29—11—31 தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சென்னை பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் இம்மகாநாடு துவக்கப்படும்.

மகாநாட்டுத்தலைவர் ஜோலார்பேட்டை திரு. V. பார்த்தசாரதி அவர்கள்.

புரொபசர் P. லெட்சுமிநரசு B. A. அவர்கள் வரவேற்புத்தலைவர்.

மகாநாட்டுத்திறப்பாளர் திருமதி எஸ். குஞ்சிதம் B. A. அவர்கள்.

மாகாணத்தின் பல பகுதிகளிலிருந்தும் நமது இயக்கத்தலைவர்களும் தோழர்களும் விஜயம் செய்வார்கள்.

காரியதரிசிகள்.
S. P ரெத்தினசாமி,
V. P. S. மணியர்.

விளம்பர அதிகாரிகள்.
S. V. லிங்கம்,
M. முருகேசம் B. A.

குடி அரசு

ஈரோடு 1931 நவம்பர் 22உ

மற்றொரு 'சனியன்'

"கார்த்திகைத் தீபம்"

—:0:—

மதத்தின் பேரால் ஏற்பட்ட பண்டிகைகளின் மூலமாகவே நமது நாட்டுச் செல்வங்களும், மக்களின் உழைப்பும் பெரிதும்வீணாகிக்கொண்டு வருகின்றனஎன்பதை நாம் பலதடவை எடுத்துக்காட்டிப்பேசியும், எழுதியும் வருகிறோம். எவ்வளவு பேசினாலும், எவ்வளவு எழுதினாலும் நமது மக்களுக்கு இன்னும் அப்பண்டிகைகளில் உள்ள அபிமானமும், மூடநம்பிக்கையும் ஒழிந்த பாடில்லை. "அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்" என்பதைப்போல, அடிக்கடி அவற்றின் புரட்டுக்களை வெளிப்படுத்தி வருவதனால் நமது மக்களுக்கு அவைகளின் உண்மை விளங்கக்கூடும் என்று கருதியே நாமும் இடைவிடாமல் எழுதிக் கொண்டு வருகிறோம்.

சென்றமாதத்தில் தான் நமது நாட்டின் செல்வத்தைக் கொள்ளைகொண்டுபாழாக்கிச்சென்ற தீபாவளிப் பண்டிகையைப்பற்றி எழுதியிருந்தோம். அப்பண்டிகையால் நமக்குக் கிடைத்த பலன் என்ன? தீபாவளியின் பெயரால் ஏறக்குறைய 20 கோடி மக்களாவதுபண்டிகை கொண்டாடி இருப்பார்கள். இவர்கள் பண்டிகை கொண்டாடியதன் பயனாய் சுமார் 10 கோடி ரூபாய்க்குக் குறையாமல் பாழ்பட்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்தப் பத்துகோடி ரூபாயும், அனாவசியமாய்த் துணி வாங்கிய வகையிலும், பலகாரங்கள் செய்த வகையிலும், பட்டாசு வாங்கிப் பொசுக்கிப் புகையும், கரியுமாக ஆக்கிய வகையிலும் செலவாயிருக்கும் என்பது மட்டும் அல்ல; பண்டிகை நாளில வருத்தமின்றிக் களித்திருக்கவேண்டும்என்பதைக்கருதி ஏழைகள், கள், சாராயம், பிராந்தி, விஸ்க்கி, ஜின், வொயின், பீர், ராமரசம் முதலிய வெறிதரும் பானங்களை குடித்துக் கூத்தாடிய வகையிலும் ஏராளமான பணம் செலவழிந்திருக்கும் என்பதை யாரும் மறுக்கமுடியாது. இந்தப்பண்டிகையினால் வெற்று நாளில் மறந்துபோயிருந்த-சாமிக்குப்படையல் போடத் தூண்டும் புராணக் கதை, மூட நம்பிக்கை மக்கள் மனத்தில் மறுபடியும் வந்து குடி புகுந்ததோடு, அவர்களுடைய செல்வமும்கொள்ளைபோகும் நிலை ஏற்பட்டது.

இவ்வளவு மாத்திரம் அல்ல; தீபாவளிப் பண்டிகைக்கு விடுமுறை விட்டதன் பயனாய், தினக்கூலிக்கு வேலை செய்யும் ஏழை மக்கள் கூலியை இழந்ததோடல்லாமல், கடன்பட்டுக் கஷ்டமடைந்தது எவ்வளவு! வேலை நடக்கும் தொழிற்சாலைகள் மூடப்பட்டு, அதனால் தடைப்பட்ட காரியங்கள் எவ்வளவு! தீபாவளிக்கு முன் சில நாட்களும், தீபாவளிக்குப்பின் சில நாட்களும், தீபாவளியைக்கருதி மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்தாமல், விளையாட்டுக்களிலும், வேடிக்கைகளிலும் கவனம் செலுத்திய காரணத்தால் அவர்களுடைய படிப்புக்கு நேர்ந்த கெடுதி எவ்வளவு! அரசாங்க காரியங்கள் நடைபெறுவதில் இந்த ஓய்வால் தடைபட்ட காரியங்கள் எவ்வளவு?

இவ்வளவு தொல்லைகளையும் உண்டாக்கிச்சென்ற தீபாவளிப் பண்டிகையின் ஆர்ப்பாட்டம் மறைந்து இன்னும் ஒரு மாதங்கூட ஆகவில்லை, சரியாய் 15 நாட்களுக்குள்ளாகவே மற்றொரு'சனியன்' தொடர்ந்து வந்து விட்டது. இவ்வாறு தவறாமல் ஒவ்வொரு மாதமும் நமது நாட்டுச் செல்வத்திற்குச் 'சனியன்' பிடிப்பது வழக்கமாகவும், அவ்வழக்கம், "தெய்வீகம்" என்று சொல்லப்படுவதாகவும், "மதத்தின் முக்கியபகுதி" என்று சொல்லப்படுவதாகவும் இருந்து வருகிறது. இப்பொழுது வரும்'சனிய'னாகிய பண்டிகை "கார்த்திகைத்தீபம்" என்பது தான்.

இந்தக் "கார்த்திகைத் தீபப் பண்டிகை"யை ஒரு பெரிய "தெய்வீகம்" பொருந்திய சிறந்த நாளாகக் கருதி இந்தியா முழுதும் கொண்டாடப்பட்டு வருகிறது. இதை இந்து மதத்தில் உள்ள சைவர், வைணவர் வீரசைவர், ஸ்மார்த்தர் முதலிய எல்லாப் பிரிவினரும் கொண்டாடுகின்றனர்.

சாதாரணமாகக் கார்த்திகை நட்சத்திர தினத்தைச் "சுப்பிரமணியன்" என்னும் சாமிக்கு உகந்த சிறந்த நாளாகக் கருதியே "பக்தர்கள்" என்பவர்கள் விரதங்களும், பூஜைகளும் நடத்தி வருகின்றனர். சாதாரண காலத்தில் வரும் கார்த்திகைகளைவிட, கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகையே மிகவும் சிறந்த பண்டிகையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இதன் பொருட்டுத் திருவண்ணாமலை முதலிய பல ஊர்களுக்கு யாத்திரை போய்ப்பணத்தைச் செலவு செய்து விட்டுத் திரும்பும்போது அங்கிருந்து வாந்திபேதியைக்கொண்டு வருகின்றனர். ஒவ்வொரு மாதமும் கார்த்திகைக்காக, வைத்தீஸ்வரன் கோயில், குன்றக்குடி, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர் சுவாமிமலை முதலிய ஊர்களுக்கு மக்கள்சென்று செலவு செய்யும் செல்வங்களேபதினாயிரக்கணக்காகவும், இலட்சக்கணக்காகவும், ஆகும்போது 'பெரிய கார்த்திகை' என்று பெயர்பெற்ற கார்த்திகை மாதப் பண்டிகை நாளில் செலவாகும் பொருள் கோடிக்கணக்கில் குறைவுபடுமா? இதில் எவ்வாறு பொருள்வீணாக்கப்படுகிறதென்பதை நினைத்துப் பாருங்கள்! தீபாவளிக்காக வரவழைத்து விற்பனையாகாமல் கடைகளில் தங்கிக்கிடக்கும் பட்டாசுகளுக்கு செலவுவந்து இந்தப் பட்டாசுகளின் மூலம் பணம் படபடவென்று சத்தமிட்டு வீணாக்கப்படும்.

வீடுகளுக்குள்ளும், வெளிப்புறங்களிலும், காடுகளிலும், மேடுகளிலும், குப்பைகளிலும், கூளங்களிலும் எண்ணற்ற 100, 1000, 10000, 100000 கணக்கான விளக்குகளைக் கொளுத்தி வைப்பதன் மூலம் செலவாகும் நெய் எண்ணெய்ச்செலவு எவ்வளவு! கோயில்கள் என்பவைகளுக்குச்'சொக்கப்பானை' கட்டி நெருப்புவைப்பதற்காகச் செலவு செய்யும்நெய், எண்ணெய், விறகு முதலியவைகளுக்காகும் செலவு எவ்வளவு! கார்த்திகைப்பண்டிகைக்காகத் திருவண்ணாமலை முதலிய ஊர்களுக்குப் பிரயாணஞ் செய்வதன் மூலமாகும் ரொக்கப்பணச் செலவு எவ்வளவு! அங்கு கூம்புக்கு (சொக்கப்பானை)செலவாகும் விறகு, கற்பூரம், வெண்ணெய், நெய் ஆகியவற்றிற்காகும் செலவு எவ்வளவு? இவ்வாறு பல வகையில் செலவு செய்யப்படும் கோடிக்கணக்கான பணங்களால் நமது நாட்டிற்குக்கடுகளவாவது பயனுண்டா என்று ஆலோசித்துப்பாருங்கள்.

இன்னும் இப்பண்டிகையினால் மக்களுக்குண்டாகும் மூடநம்பிக்கையையும், அதனால் உண்டாகும் மூடப்பழக்கவழக்கங்களையும் கொஞ்சம் யோசித்துப்பாருங்கள்! கார்த்திகையைப்பற்றி வழங்கும் புராணக்கதை இரண்டு. அவைகளில் ஒன்று:—

ஒருசமயம் 'அக்கினி தேவன்' (நெருப்பு) என்னும் 'கடவுள்' சப்தரிஷிகளின் மனைவிமார்களைப் பார்த்து மோகங்கொண்டானாம். அதை அறிந்த அவன் மனைவி 'சுவாகாதேவி' என்பவள், அந்த ரிஷிகளின் மனைவிகளைத்தொந்தரவு செய்தால் அவர்களால் தன் கணவன் சபிக்கப்படுவான், என்றெண்ணினாளாம். அதனால் அவள் வசிஷ்டரின் மனைவியாகிய அருந்ததி உருவத்தை மாத்திரம் விட்டுவிட்டு, மற்றஆறுரிஷிகளின் மனைவிமார்களைபோல் உருவங்கொண்டு, தன் கணவன் ஆலையை நிறைவேற்றினாளாம். இவ்வாறு சுவாகாதேவி கொண்ட ஆறு உருவத்திற்கும் கார்த்திகை என்றுபெயராம். இவைகள் தான் கார்த்திகை நட்சத்திரமாகக் காணப்படுவதாம். இந்தப் நட்சத்திர பெண்கள் தான் 'சுப்பிரமணியன்' என்னுஞ்சாமி, குழந்தையாக இருக்கும்போது, அதையெடுத்து வளர்த்தார்களாம்! என்பது ஒருகதை.

இக்கதையினால் தான் கார்த்திகை நட்சதிரத்திற்குப் பெருமை. இக்கதை நமது மக்களுக்குக்கற்பிக்கும் மூட நம்பிக்கையைப்பாருங்கள். பிறர்மனைவிமேல ஆசைப்பட்டு விபசாரம் பண்ணுவது குற்றம் இல்லை என்பது ஒன்று, மனைவி தன் கணவன் எந்தத்தகாத காரியத்தை விரும்பினாலும அதை எப்பாடுபட்டாவது பூர்த்திசெய்து கொடுக்கும் அடிமைக்கருவியாக இருக்கவேண்டுமென்பது ஒன்று. இவைமட்டும் அல்லாமல் இயற்கைப்பொருள்களின்மேல் எல்லாம் 'தெய்வீகம்' என்னும் மூடநம்பிக்கையை உண்டாக்கும் தூர்ப்போதனை ஒன்று. ஆகவே இவற்றை ஆராயும்போது இக்கதையும இதன் மூலம் ஏற்பட்டவிரதம், பண்டிகை முதலியனவும புரட்டு என்று உணரலாம்.

இனி, இக்கார்த்திகையைப் பற்றிய இரண்டாவது கதையாவது:—

ஒரு காலத்தில் பிரம்மா என்னும் கடவுளும், விஷ்ணு என்னும் கடவுளும் தாம் தாமே ஆதி மூலக் கடவுளர் என்று கூறிக்கொண்டதனால் இருவருக்கும் முதலில் வாய்ச் சண்டை உண்டாகி, பிறகு அது

கைச்சண்டையாக மூண்டு ஒருவரோடு ஒருவர் அடிபிடி சண்டை செய்தனராம். அவர்களுடைய சண்டை சீக்கிரத்தில் ஒரு முடிவுக்கும் வரவில்லையாம். ஆகையால் அப்பொழுது 'பரமசிவன்' என்னும் 'கடவுள்' அவர்கள் மத்தியில் ஒரு பெரிய 'ஜோதி' உருவத்தோடு, வானத்திற்கும் பூமிக்குமாக நின்றாராம். உடனே சண்டைக்காரக் 'கடவுள்'கள் இருவரும் ஒன்றும் தெரியாமல் திகைத்து நின்றார்களாம். அப்பொழுது 'ஜோதி' உருவாக நின்ற 'பரமசிவக்கடவுள்' 'ஏ பிரம்ம விஷ்ணுகளே! இந்த 'ஜோதி'யின் அடிமுடிகளை யார் முதலில் கண்டு வருகிறாரோ அவர்தான் உயர்ந்தவர்' என்று ஒரு அனுமதேய (அசரீரீ) வார்த்தை சொன்னாராம். உடனே விஷ்ணு பன்றி உருவங்கொண்டு அடியைக்காண பூமியைத்துளைத்துக்கொண்டு வெகுதூரம் சென்றும காணமுடியாமல் திரும்பி வந்து விட்டாராம். பிரமன் அன்னப்பறவை உருவம் கொண்டு ஜோதியின் முடியைக்காணப் பறந்து மேலே செல்லும்போது வழியில் ஒருதாழம்பூ வந்துகொண்டிருந்ததாம். அதைக் கண்டு பிரமன் "தாழம்பூவே, எங்கேயிருந்து எவ்வளவு காலமாக வந்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்க; அது "நான் பரமசிவனுடைய முடியிலிருந்து கோடிக்கணக்கான வருஷங்களாக வந்துகொண்டிருக்கிறேன்" என்று சொல்லிற்றும். உடனே பிரமன் "நான் சிவனுடைய முடியைப்பார்த்து விட்டதாக அவனிடத்தில எனக்காக சாட்சிசொல்லுகிறாயா என்று கேட்க, அதுவும் சம்மதிக்க, இருவரும், பரமசிவனிடம் வந்து முடியைக்கண்டு வந்ததாகப பிரமன் கூற, தாழம்பூவும் அதை ஆமோதித்ததாம். அதுகண்ட சிவன் கோபங்கொண்டு, இருவரும் பொய் சொன்னதற்காக, 'பிரமனுக்கு இவ்வுலகில கோயில் இல்லாமற் போகக்கடவது" என்றும், "தாழம்பூ இனிமேல் தனக்கு உதவாமல போகக்கடவது" என்றும் சாபம் கொடுத்தாராம். பிறகு பிரமாவும் விஷ்ணுவும் தங்கள் கர்வம் ஒழிந்து பரமசிவனே பெரியவர் என்று எண்ணி இருவரும் அவரை வணங்கி, எங்கள் வழக்கைத் தீர்த்து வைத்ததற்கு அடையாளமாக இந்த மலையின் மேல் ஒரு "ஜோதி" உருவாக இருக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டார்களாம். 'பரமசிவனும்' அதற்குச் சம்மதித்து "ஒவ்வொரு வருடத்திலும் கார்த்திகை மாதத்தில, கார்த்திகைப்பண்டிகையில் நான் இந்த மலையின் உச்சியில் ஜோதியாகக்காணப்படுவேன்" என்று சொன்னாராம். இதுதான் திருவண்ணாமலைப் புராணமாகிய அருணாசலப்புராணத்தில் சொல்லப்படும் கார்த்திகைப்பண்டிகைக் கதை.

இந்தக்கதையை ஆதாரமாகக்கொண்டுதான் இன்றும் 'சைவப்பெரியார்கள்' என்பவர்கள் சிவன் என்பவரே மற்ற 'கடவுள்'களைவிட உயர்ந்தவர் என்று சண்டைபோடுகின்றனர். இந்தக் கதையைக்காட்டிச் 'சிவனை' உயர்த்தியும் மற்றவர்களைத்தாழ்த்தியும் பாடாத சைவப்புராணங்களும், தேவாரங்களும், திருவாசகங்களும், தோத்திரங்களும் இல்லை. இதற்கு எதிராக மற்ற மதத்தினர்கள் எழுதிவைத்திருக்கும கதைகள் பல. இவ்வாறு மதச்சண்டையை உண்டாக்குவதற்கு இக்கதை முதற்காரணமாக இருப்பதை அறியலாம். இந்தக்கதையில் தாழம்பு பேசுவது ஒரு வேடிக்கை! 'கடவுள்'களுக்குள்ளேயே சண்டைவந்தது ஒரு விந்தை! இதுபோலவே ஆராய்ந்தால் பரிகாசத்திற்கும் வேடிக்கைக்கும் இடமாக இக்கதையில் அனேகம் செய்திகள் அமைந்திருப்பதைக்காணலாம்.

இவ்வாறு இரண்டு முரண்பட்ட வேடிக்கைக்கதைகளை ஆதாரமாகக்கொண்ட இந்தக்கார்த்திகைப் பண்டிகையினால் நமது மக்கள் மனத்தில் குருட்டு பக்தியும், மூடநம்பிக்கையும்; முட்டாள்தனமும் அதிகப்படும் என்பதில் சந்தேகம் உண்டா? இது நிற்க மேலே கூறியகதைகளில் இரண்டாவது கதையைச் சைவர்கள்தான் 'சிவனுக்கு' பெருமை கற்பிக்கிறதென்று நம்பி கார்த்திகைப்பண்டிகை கொண்டாடுகிறார்களென்றால், வைணவர்களும் கொண்டாடுவதில் என்ன அர்த்தமிருக்கிறது என்பதுதான் நமக்கு விளங்கவில்லை. வைணவர்களின் 'கடவுளை' மலந்தின்னும் பன்றியாக்கிக்கேவலப்படுத்தியிருப்பதுடன் சிவனுடைய பாதத்தைக்கூட காணமுடியாத அவ்வளவு சக்தியற்ற தெய்வம் என்று இழிவுபடுத்தியிருப்பதை அறிந்தால் அவர்கள் இந்தப் பண்டிகையைப் பெருமையாகக் கொண்டாடச் சம்மதிப்பார்களா? இவர்கள் போகட்டும், ஏதாவது ஒரு கடவுளாவது இருக்கிறார் என்ற நம்பிக்கையில்லாத-தானே கடவுள் என்னும கொள்கையுடைய ஸ்மார்த்தர்களும் இக்கதையை நம்பிப்பண்டிகை கொண்டாடுகிறார்களே! இதில்தான் என்ன அர்த்தமிருக்கிறது? இவற்றையெல்லாம் யோசிக்கும்போது இவர்கள் முட்டாள்தனம் காரணமாகவாவது, வீண் ஆடம்பரம் காரணமாகவாவது இப்பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள் என்றுதான் நினைக்கவேண்டியதிருக்கிறது. அல்லது அறிந்தோ, அறியாமலோ நமது மக்கள் மனத்தில், "பண்டிகைகள் புண்ணிய நாட்கள், அவற்றைக் கொண்டாடுவதால் புண்ணியம் உண்டு. கொண்டாடாவிட்டால் பாவம்" என்னும் ஒரு குருட்டு எண்ணம் குடி கொண்டிருக்கிறது என்ற முடிவுக்குத் தான் வரவேண்டியிருக்கிறது.

ஆகவே, இதுபோன்ற பண்டிகைகளால், நமது நாட்டில், பொருட்செலவும், வறுமையும், மூடநம்பிக்கையும், வீண்காலப்போக்கும், நிறைந்திருப்பதை எடுத்துக்கூறத் தொடங்கிறவர்களுக்கு உடனே பகுத்தறிவற்ற வைதீக மூடர்கள் "தேசத்துரோகி" "மதத்துரோகி" "வகுப்புவாதி" "நாஸ்திகன்" என்ற பட்டங்களைச்சூட்டி விடுகின்றனர். சிறிதேனும் பொறுமை கொண்டு, சொல்லும் விஷயத்தைப் பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்து பார்க்கின்றவர்களில்லை.

இத்தகைய வீண் காரியங்களை ஒழித்து மக்களைப் பகுத்தறிவுடையவராகச் செய்ய இதுவரையிலும், எந்த தேசியத்தலைவர்களாவது, எந்த தேசியத் தொண்டர்களாவது, எந்த தேசியப்பத்திரிகைகளாவது முயற்சியெடுத்துக்கொண்டார்களா? இன்னும் இது போன்ற மூட நம்பிக்கைக்கான விஷயங்களை, "சுயராஜியம்" "சுதந்தரம்" "காங்கிரஸ்" "பாரதமாதா" "மகாத்மா காந்தி" "காந்தி ஜயந்தி" என்னும் பெயர்களால் பிரசாரஞ்செய்து மற்றும் பண்டிகைகளையும், உற்சவங்களையும், விக்கிரகங்களையும் கற்பித்து மக்களை ஏமாற்றிக்கொண்டு தானே வருகிறார்கள். இவ்வாறு தேசிய பிழைப்புக்காரர்கள் ஒரு புறமும், பண்டிகையில் நம்பிக்கையுள்ள வைதீகமூடர்கள் ஒரு புறமும், பணம் சேர்க்க ரயில்வேகம் பெனிக்காரர்கள் ஒரு புறமும் புராணப்பிழைப்புக்காரர்களும், குருக்கள்களும், புரோகிதர்களும் மற்றொரு புறமும் பண்டிகைப் பிரசாரம் பண்ணினால் மக்களுக்குப் பகுத்தறிவு விளங்குவது எப்பொழுது?

'சர்வம் பார்ப்பன மயம்' திருவாங்கூர்.

புதிய மகாராஜா பட்டத்திற்கு வந்தவுடன் திருவாங்கூர் சமஸ்தானக்குடி மக்களுக்கு இனியேனும் உண்மையான சுதந்தரம் உண்டாகும் என்று நம்பினோம். இதற்கு அறிகுறியாக கப்பற் பிரயாணம் செய்து அந்நியநாடு சென்று வந்தவர்கள் உள்ளே போகக்கூடாது என்று தடுக்கப்பட்டிருந்த கோயில்களுக்குள் அவர்களும் போகலாம், என்று முன்னிருந்த தடை நீக்கப்பட்டது. இதைக்கொண்டு, "இனி திருவாங்கூர் மக்கள் வைதீகக் கொடுமையிலிருந்தும் நீக்கப்படுவார்கள்போலும்" என்றும் சந்தோஷப்பட்டோம். ஆனால் இப்பொழுது சர், சி. பி. ராமசாமி அய்யர் அவர்களை மேன்மை தங்கிய மகாராஜவுக்கு அரசியல் ஆலோசனை கூறும் உத்தியோகஸ்தராக நியமிக்கப்பட்டதிலிருந்து கப்பலேறி அந்நியநாடுகளுக்குச்சென்று வந்த சர். சி. பி. ரா. அய்யர் அவர்கள் கோயிலுக்குள் போவதற்குத்தடை இருக்கக்கூடாதுஎன்பதற்காகவேமுன்னிருந்த தடை நீக்கப்பட்டது என்றே நினைக்கவேண்டியதிருக்கிறது. அன்றியும் இப்பொழுதிருக்கும் மகாராஜா அவர்கள், ஒரு சமயம் சர். சி. பி. ரா. அய்யர்அவர்களுடன் இங்கிலாந்து முதலிய தேசங்களுக்குப் பிரயாணம்செய்துவந்தால், அப்பொழுதுமகாராஜாகோயிலுக்குள்போவதற்கு யாதொருதடையுமில்லாமலிருப்பதற்கு முன்னேற்பாடாக இக்காரியம் செய்யப்பட்டிருக்கவேண்டுமென்றும் நினைக்கவேண்டியிருக்கிறது.

அன்றியும் இப்பொழுது பட்டத்திற்குவந்திருக்கும் மகாராஜா அவர்கள் காலத்தில முன்னிருந்ததைக்காட்டிலும இன்னும் பார்ப்பன ஆதிக்கம் அதிகப்பட்டு உறுதிப்படும் என்றும் கருதி திருவாங்கூர் பிரஜைகளின் சார்பாக இரக்கப்படுகிறோம், இவ்வாறு நடக்கக்கூடும் என்பதற்கு அடையாளமாக மகாராஜா பட்டத்திற்குவந்தவுடன், முன்பே திரு. சுப்பிரமணிய அய்யர் என்னும் பார்ப்பனர்திவானாயிருக்க, சர். சி. பி. ராமசாமி அய்யரும் அரசியல் ஆலோசனைகூறும் அதிகாரியா

ஞர். ஆகவே இப்பொழுது திருவாங்கூர் ராஜ்யம் இரண்டு பார்ப்பன அதிகாரிகளின்வசம் அகப்பட்டுக்கொண்டிருக்கிறது.

திருவாங்கூர் சமஸ்தானம் பார்ப்பனர்களின் அதிகாரத்தில் அகப்பட்டு, அச்சமஸ்தான மக்கள் பார்ப்பனீயத்தால் நசுக்குண்டு கிடப்பது இன்று அல்லது நேற்று முதல் நடைபெறும் விஷயம் அல்ல; நூற்றுக்கணக்கான வருஷங்களாகவே இப்படி இருந்துவருகின்றது. இதைக்கீழ்வரும் விஷயத்தால் தெளிவாய்த் தெரிந்து கொள்ளலாம். 1817 ஆம் ஆண்டு முதல் 1931ஆம் ஆண்டுவரையிலும் திருவாங்கூர் திவான் உத்தியோகத்தை 24 பேர்வகித்து வந்திருக்கின்றனர். இந்த 24பேர்களில் திரு நாணுப் பிள்ளை என்பவர் 1877 முதல் 1880வரையில் 3 வருஷமும், இப்பொழுது சென்னை அரசாங்கத்தில் சட்டமந்திரியாய் இருக்கும் திரு. கிருஷ்ணன் நாயர் 1914 முதல் 1920 வரை 6 வருஷமும், திரு. வாட்ஸ் என்னும் ஐரோப்பியர் 1925 முதல் 1929 வரை 4 வருஷமும் திவானாக இருந்திருக்கின்றனர். இவர்கள் திவானாக இருந்த 13 வருஷங்கள்போக பாக்கி 101 வருஷங்களும் பார்ப்பனர்களே திவான்களாக இருந்து வந்திருக்கின்றனர். இந்தக் கணக்கைப்பார்த்தாலே திருவாங்கூர் ராஜ்யம் எப்பொழுதும் பார்ப்பனமயம் என்பதில் ஏதேனும் தவறு உண்டா?

சுதேச சமஸ்தானமாகவும், பார்ப்பன ஆதிக்க ராஜ்யமாகவும், 'பத்மநாபசுவாமி' என்னும் 'கடவுளின்' ராஜ்யமாகவும் இருக்கும் அந்த சமஸ்தானம் எந்நிலையிலிருக்கிறது? 40 லட்சம் ஜனத்தொகையுள்ள அந்த சமஸ்தானத்தில் சுமார் 20 லட்சம் பேர் மகமதியர், கிறிஸ்தவர் முதலிய அந்நியமதத்தினராகவும், சுமார் 12½ லட்சம்மக்கள் தீண்டக்கூடாதவர்களாயும், பார்க்கக்கூடாதவர்களாகவும், தெருவில நடக்கக் கூடாதவர்களாகவும்இருக்கின்றார்கள். இவைபோக சுமார் 7½ லட்சம் 'இந்துக்கள்' என்பவர்களே 'பத்மநாபக்கடவுளின்' அரசாங்கமாகிய இந்து ராஜ்யத்தில் இருக்கிறார்களென்றால் இதை என்ன ராஜ்யம் என்று சொல்லுவது? பார்ப்பனர்களின் அதிகாரத்தின் காரணமாக - பார்ப்பனீயமாகிய இந்துமதக்கொடுமை காரணமாக-இந்துமதத்திலிருந்து விலகியவர்கள் தான் இப்பொழுது அச்சமஸ்தானத்தில் இருக்கும் 20 லெட்சம் வேறு மதக்காரர்களும் என்பதை யார் இல்லையென்று சொல்லமுடியும்? இந்துமதத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தால் தானே இன்று 12½ லெட்சம் பேர் தீண்டத்தகாதவர்களாகவும், பார்க்கக்கூடாதவர்களாகவும், தெருவில் நடக்கக் கூடாதவர்களாகவும், மிருகத்திலும் கேடாக மதிக்கப்பெற்று கொடுமை செய்யப்பட்டுக் கிடக்கிறார்கள்? இவர்களும் அந்நிய மதத்தினர்களாக ஆகி விட்டால் இவ்வளவு கொடுமைக்கு ஆளாவார்களா?

இந்த இழிவான நிலையில் உள்ள இச்சமஸ்தானம், எல்லாமக்களும் கண்விழித்துச் சுயமரியாதை உணர்ச்சி பெற்று வருகிற இந்நாளிலுமா பார்ப்பனர் வசமும் பார்ப்பனீய வசமும் சிக்கித் துன்பப் பட்டுக்கொண்டிருக்க வேண்டும்? என்ற உணர்ச்சியுடன் திருவாங்கூர்ப் பிரஜைகள் அனைவரும், சர். சி.பி. ரா. அய்யரின் நியமனத்தைச் சரியான காரணங்களுடன் கண்டித்துத் தீர்மானங்கள் செய்வதை நாம் பாராட்டுகிறோம்.

இதோடு மற்றொரு வதந்தியும் உலாவுகிறதென்று அறிகிறோம். அதாவது, இப்பொழுதுள்ள திவான், திரு. சுப்பிரமணிய அய்யர் திவான் பதவியை விட்டு விலகியவுடன், அப்பதவிக்கு, சென்னையில் உள்ள திரு. டி. ஆர். வெங்கட்டராம சாஸ்திரி அவர்களும், மற்றும், இரண்டு பெரிய இந்திய அரசாங்க உத்தியோகஸ்தர்களும் முயற்சி செய்கிறார்களாம். இவ்வாறு முயற்சி செய்துகொண்டிருக்கும், திரு. டி. ஆர். வெங்கட்டராம சாஸ்திரியார் அவர்களோ, அல்லது வேறு ஒரு "சாஸ்திரியார்" அல்லது "அய்யர்" அல்லது "அய்யங்கார்" அல்லது "ஆச்சாரியா"ரோ திவானாக வந்தால் திருவாங்கூர் ராஜ்யம் இன்னும் மோசமான பார்ப்பன ராஜ்யமாக ஆகவேண்டியதைத் தவிர வேறு வழியில்லை என்பது உறுதியான விஷயமாகும். உதாரணமாக சர். சி. பி. ரா. அய்யர் அவர்களின் யோக்கியதையைப் பார்த்தாலே இது விளங்கும். முதலாவது, திரு. அய்யர், தன் அதிகாரத்தால் செய்யக்கூடிய எந்த உத்தியோகங்களையும், நன்மைகளையும், தன் இனத்தார்களாகிய பார்ப்பனர்களுக்கு மாத்திரம் செய்யக்கூடியவர் என்பது நாம் அறிந்த சங்கதி. இரண்டாவது, எல்லாமக்களும் சம சுதந்தரம் பெற்றுச் சகோதரர்களாய் வாழ வேண்டும் என்னும் சமதர்மக் கொள்கைக்கு எதிரான வருணாச்சிரம தரும கும்பினரைச் சேர்ந்தவர் என்பது யாவருக்கும் தெரிந்த செய்தி. மூன்றாவது, அவர் எப்பொழுதும்பிரிட்டிஷ் காரருக்குச் செல்லப்பிள்ளையாக நடந்து தன் காரியங்களைச் சாதித்துக்கொள்ளக்கூடியவர் என்பது அவருடைய "அரசியல் நாடகம்" அறிந்தவர்களுக்கு நன்றாய்த் தெரியும். இதனால், பிரிட்டிஷ் இந்தியாவில் இருந்து சுதேச சமஸ்தானத்திற்குப் போகும்பார்ப்பனரும், பெரும்பாலும் இந்த மாதிரியான யோக்கியதை உள்ளவராகத்தான் இருப்பார்கள். ஆகையால் திருவாங்கூர் பிரஜைகள் தம்மைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு இத்தகைய விஷயங்களை, இந்திய அரசாங்கத்தாருக்கும், மேன்மைதங்கிய மகாராஜாவுக்கும் எடுத்துக்காட்டிப் பரிகாரம் தேடிக்கொள்ளும்படி அவர்களுக்கு நினைப்பூட்டி, நாமும் இந்தச் சமஸ்தானம் பார்ப்பனருக்கும், பார்ப்பனீயத்திற்கும் அடிமைப் பட்டு வருவதைப் பலமாகக் கண்டிக்கிறோம்.

ஈரோடு முனிசிபாலிட்டி.

தேர்தலின் முடிவு.

ஈரோடு முனிசிபாலிட்டிக்கு புது சட்டப்படி நடக்க வேண்டிய24 ஸ்தானங்களில் 16 வார்டுகளுக்குப் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட கௌன்சிலர்களின் பெயர்களைமுன்னமே தெரியப் படுத்தப் பட்டிருக்கிறது அவை கெஜட்டிலும் பிரசுரமாகி விட்டது அவைகளாவன:—

திருவாளர்கள், 1 கே. வி. ஷெத்தாவுத் சாயபு, 2 ஈ. வி. கிருஷ்ணசாமி நாயக்கர், 3 மாரிமுத்துப் பண்டாரம், 4 எம். சிக்கைய நாயக்கர், 5 ஈ. சி. ரங்கராஜுலு செட்டியார், 6 ஈ. வி. நஞ்சப்ப செட்டியார், 7 கேசவலால் காளிதாஸ், 8 ஈ. ஒ. சி. முத்துசாமிக் கவுண்டர், 9 எஸ். ஆர். கண்ணம்மாள், 10 எம். கே. மகமது சுல்தான் சாயபு, 11 சி. பி. சின்னசாமிக் கவுண்டர், 12 எஸ். வெங்கடாசல முதலியார், 13 ஜே. பி. மகமது சுல்தான் சாயபு, 14 கே. கே. மகமது குதரத்துல்லா, 15 இ கே. அப்துல் ரஜாக், 16 கே. எம். சீனிவாசம்பிள்ளை ஆகியவர்களாகும்.

மற்றும் எட்டு வார்டுகளுக்கு 17பேர்கள் போட்டிபோட்டிருந்தார்கள் அவைகளுக்கு18-11-31 தேதி தேர்தல் நடைபெற்றதில் கீழ்க் கண்டவர்கள் அதிக ஓட்டுகளால் வெற்றி பெற்றார்கள் அவர்களின் பெயர்களாவன:—

திருவாளர்கள்.—

1 ஈ. எஸ். கோவிந்தசாமி நாயுடு, 2 எம். என். முத்துகருப்பஞ் செட்டியார், 3 ஈ. ஒய். சுல்தான் சாயபு, 4 குழந்தைவேலு பிள்ளை, 5 எம் அப்பைய கவுண்டர், 6 ஆர். எஸ். விஸ்வாசம், 7. டி. சீனிவாச முதலியார், 8 கே. பி. ராகவேந்திரராவ். ஆகியவர்களாகும்.

திரு. வல்லத்தரசின் விடுதலையும், பார்ப்பனர் சூழ்ச்சியும்.

கவர்ன்மெண்டார் கேட்கிற உத்தரவாதத்தைக்கொடுப்பதாகவும், லெவ்டிரால் ஜெயிலில் வைக்கப்பட்டிருக்கும் திரு. வல்லத்தரசை விடுதலைசெய்யவேண்டுமென்றும், கோரிசட்டசபையங்கத்தினர்கள் பலரும், பலபிரபல வக்கீல்களும் சேர்ந்து தர்பாருக்கு ஒரு மகஜரை அனுப்பியிருக்கின்றனர். என்பதை அறிந்ததும் (புதுக்கோட்டை கலவர வழக்கு சம்மந்தமாக சிறையிலிருக்கும் 120 பேர்களில்) "119 பேர்களின் கதியை கருதாமல் ஒருவர்மட்டும் பெரிதென்றெண்ணி அவரைமட்டும் விடுவித்தல் வேண்டுமென்று மற்றும் பல சபா அங்கத்தினர்களிடம் கையெழுத்துக்கள் வாங்கி சுமார் 30 கையெழுத்துடன் ஓர் மனுவை ஏஜண்டுதுரைக்கு சமர்ப்பணம் செய்திருப்பதாகத் தெரிகிறது. சமஸ்தான வாக்காளர்களோ எலலோருக்கும் பொது மன்னிப்பு வேண்டும் மனோபாவம் கொண்டவர்களாயிருக்க 119 பேர்களை நீக்கி ஒருவருக்குமட்டும் மனுவை சமர்ப்பித்துக்கொள்ள இவர்களைப் பணித்தது யாரோ"?

என மேற்கண்டபடி புதுக்கோட்டையிலிருந்து வெளிவரும் ஒரு பார்ப்பனப்பத்திரிகை திரு. வல்லத்தரசைவிடுதலைசெய்வதற்கு முயல்வதுகண்டு பொறாமைப்பட்டு இவ்வாறு எழுதியிருக்கிறது.

மோட்சவழி.

மோட்சம் என்றால் சாவது என்று அர்த்தம். இதைப்பெறுவதற்குச் சுலபமானவழி [illegible] கௌரி பாஷாணமேயாகும். இதை அறியாமல் ஏன் மதங்களையும், கடவுள்களையும், கட்டிக்கொண்டு செல்வங்களை வீணாக்குகிறீர்கள்?

அழகர்சாமி.

யா
கட்டளை

(9-ம் பக்கத்தொடர்ச்சி)

சம்பந்தமில்லை. சென்ற வருஷத் தேர்தலில் திரு. டாக்டர் நடேசன் அவர்களைத்தேர்ந்தெடுக்காமல் திரு. பி. டி. குமாரசாமி செட்டியாரைத்தெரிந்தெடுக்க வில்லையா? அப்பொழுது ஒப்பந்தம் முறிந்துபோயிற்று என்று ஒருவரும் சொல்லவில்லையே. இப்பொழுது பார்ப்பனர்களுடைய முழுநம்பிக்கைக்குப் பாத்திரமுடையவரும், பார்ப்பனரல்லாதார் நம்பிக்கைக்குப் பாத்திரமில்லாதவரும் ஆகிய ஒருவர் வெற்றிபெறாமல் வேறு ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன்தான் இந்தக் கூச்சல் உண்டாயிற்று. என்பதை யோசிக்கும்போது பார்ப்பனர்கள் சத்தம் போடுவதின் ரகசியம் விளங்குகிறது.

ஆகவே இதன் ரகசியம் எந்த வகையிலாவது ஒப்பந்தத்தை முறியச்செய்யவேண்டுமென்னும் சூழ்ச்சியேயாகும் என்று கூறி முடிக்கிறோம்

(8ம் பக்கத் தொடர்ச்சி)

அனுசரித்து நடக்கும் ஒரு போலி வருணாசிரம வைதீகப்பிரதிநிதிதான் தெரிந்தெடுக்கப்படக்கூடிய நிலை ஏற்படும் என்பதும் திரு. காந்திக்குத்தெரியாததல்ல. தெரிந்திருந்தும் அவர்களுக்குத்தனிப்பிரதிநிதித்துவம் கொடுக்க மறுத்தால் அதை ஒரு சூழ்ச்சியாகத்தானே கொள்ள வேண்டும்?

உள்ளபடியே தனிப்பிரதிநிதித்துவம் இல்லாமலே தீண்டாதவர்களுக்கு அரசியலில் சம உரிமையும் சமூகத்தில் சம உரிமையும் கொடுத்துவிடலாம் என்று திரு காந்தி நினைப்பாரானால் அதை நாம் எவ்வாறு ஒப்புக்கொள்ள முடியும்?

சென்ற ஒத்துழையாமையின்போது திரு. காந்தி, தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்பதைக் காங்கிரஸில் முக்கியமாகச்சேர்த்த காரணத்தால் தானே ஒத்துழையாமையும் தோல்வியடைந்து, காங்கிரசில் இருந்த பார்ப்பனர்களும் பிரிந்து சுயராஜியக்கட்சியை ஆரம்பித்தார்கள். திரு. காந்தியையும் மூலையில் தூக்கிப்போட்டுவிட்டார்கள். இப்பொழுதும் தீண்டாதவர்கள்சார்பாகத் திரு. காந்தி உண்மையாக ஏதாவது நன்மை செய்யவேண்டுமென்று நினைத்தால் பார்ப்பனர்களும், காங்கிரசும் தன்னைக் கைவிடுவிடுவதோடு முன்போலவே மூலையில் உட்காரவைத்து விடுவார்கள் என்பதை அவர் அறியாதவர் அல்லவே. இந்த எண்ணம் கொண்டுதான் திரு. காந்தியவர்கள் ஒத்துழையாமை செத்தபிறகு தென்னாட்டுக்கு வரும்போது வருணாச்சிரம மூட்டையைத் தலையில் தூக்கிக்கொண்டுவந்து வருணாசிரம பிரசாரம் செய்து பார்ப்பனர்களை சுவாதீனம் செய்துகொண்டுபோனார். அந்த உறுதியினால்தான் அவரது உப்பு சத்தியாக்கிரக இயக்கத்துக்கும் எல்லா பார்ப்பனர்களும் அவரோடு ஒத்துழைத்து விளம்பரம் கொடுத்து மகாத்மாபட்டத்தை அரங்கேற்றினார்கள்.

ஆகவே இப்போது திரு. காந்தி தீண்டாதவருக்கும், மற்ற சிறுபான்மைவகுப்பினருக்கும் தனிப்பிரதிநிதித்துவம் கொடுப்பதை மறுப்பதின் காரணமும், உயிர்போனாலும் ஒப்பமாட்டேன் என்று சொல்லும் காரணமும், வருணாச்சிரமத்தையும் வைதிக இந்துமதத்தையும் பாதுகாக்கவேதான் பாடுபடுவதாக பார்ப்பனர்கள் உணரவேண்டும் என்பதைத் தவிர வேறு ஒன்றுமில்லையென்று உறுதியாகக்கூறுகிறோம்.

திரு. காந்திக்கு இந்த அபிப்பிராயம் இருப்பதை அனுசரித்துத்தான் இந்நுள்ள வருணாச்சிரமதர்மக்காரர்களும் திரு. காந்தியை வாயும் அவதாரமகாத்மா என்றும், அவதாரபுருஷரென்றும் கொண்டாடுகிறார்கள். மற்றும் தான் 'தீண்டாதாரின் தனிப்பிரதிநிதித்துவத்திற்கு விரோதி' என்கின்ற பெயருடன் இந்தியாவுக்குத்திரும்பி வருவாரேயானால் கண்டிப்பாக திரு. காந்தியை 'மகாத்மா காந்தி' என்பதோடுமாத்திரமல்லாமல் 'பகவான் மகாத்மாகாந்தி' என்கின்ற பட்டம் கிடைக்கும் என்பது அவருக்குத்தெரியும். இந்த விஷயங்களையெல்லாம் நன்றாய் உணர்ந்ததினால்தான் தீண்டாதார் சமூகத்தாரும் தங்கள் சமூகசங்கங்கள் மூலமும் மகாநாடு மூலமும். பொது கூட்டங்கள் மூலமும், திரு. அம்பெட்கார், திரு. சீனிவாசன் ஆகியவர்களை தங்கள் பிரதிநிதிகள் என்றும், திரு. காந்தியும், காங்கிரசும் தங்கள் பிரதிநிதிகள் அல்லவென்றும், தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். இதற்குமாறாக இங்குள்ள வருணாச்சிரம தருமிகள், சிலபோலிகளைப்பிடித்து திரு. அம்பெட்காரும், திரு. சீனிவாசனும் தாழ்த்தப்பட்டவர்களின் நம்பிக்கைக்கு உரியவர்கள் அல்லர் என்றும் திரு. காந்தியும், காங்கிரசுமே தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிநிதிகளென்றும், புரட்டுத்தந்திகள் கொடுத்திருக்கின்றார்கள். இந்த வருணாச்சிரமதர்மவாதிகளை அனுசரித்தே தேசியப்பத்திரிகைகளும் பெரும் பிரசாரம் செய்கின்றன. தேசியவாதிகளும் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். ஆகவே இவர்கள் செய்யும் புரட்டுகளும், ஆரவாரங்களும் தாழ்த்தப்பட்டவர்கள் தலையில் கையைக்கச்செய்யப்படும் சூழ்ச்சிகள் என்று எச்சரிக்கை செய்யவிரும்புகிறோம்.

கோவிற்பட்டி.

ஆதிதிராவிடர் சுயமரியாதைச்சங்கம்.

ஷை சங்கத்தின் கூட்டமொன்று தோழர் ஜி. எம். ராஜையா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

அது சமயம் தோழர் ஈ. வெ. இராமசாமியும், கே. வி. அழகர்சாமியும் கூடிய சீக்கிரம் நற்சுகமடைய வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பல நண்பர்கள் சுயமரியாதை இயக்கத்தைப்பற்றி பிரசங்கங்கள் செய்தனரென ஒருநிருபர்எழுதுகிறார்.

திரு. எம். சி. ராஜாவும், வைசிராயும்.

ராவ்பகதூர் எம். சி. ராஜா வைசிராய் லார்டு வெல்லிங்டனை பேட்டிகண்டு தாழ்த்தப்பட்டவர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைப்பற்றி பேசினார். சர்க்கார் உத்தியோகஸ்தர்களில் தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் அற்பமான பிரதிநிதித்துவத்தை கவர்மெண்டார் கவனிக்கவேண்டுமென்றும், ஏற்கனவே கிடைத்திருக்கும் உத்தியோகங்களை சிக்கனத்திட்டம் பாதிக்கக்கூடாதென்றும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கு ஒரு ஹாஸ்டல் அமைக்கவேண்டுமென்றும் அந்த சமூகத்தைச்சேர்ந்த மாணவர்களுக்கு வேறுபல கல்விவசதிகளை அளிக்கவேண்டுமென்றும் திரு. ராஜா தெரிவித்துக்கொண்டார்.

அகில இந்திய மாதர் மகாநாடு.

எர்ணாகுளத்தில் 15-11-31ந்தேதி மாலை கொச்சிராஜகுடும்பத்தைச்சேர்ந்த திருச்செல்வி. இக்காவுக்குட்டித் தம்பிரான் தலைமையில் நடைபெற்ற அகில இந்திய மாதர்மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் முக்கியமானவை.

இம்மகாநாடு தீண்டாமையைப்பலமாகக்கண்டிக்கிறது. பொதுவாக பொது ஜனங்களையும், சிறப்பாக வாலிபர்களையும், இத்தீமையை ஒழிக்க முழுமனதுடன் உழைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறது. தீண்டாமையை ஒழிக்க ஒரு அறிக்கையை வெளியிடும்படி கொச்சி கவர்மெண்டை இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது,

இந்துகோவில்கள் எல்லாம் எல்லா இந்துக்களுக்கும் திறந்துவிடப்படவேண்டுமென இம்மகாநாடு அபிப்பிராயப்படுகிறது.

காமன்ஸ்சபையில் சத்தியாக்கிரகக்கேள்வி.

காமன்ஸ்சபையில் தொழிற்கட்சி அங்கத்தினர் மிஸ்டர் டாகர் அடியிற்கண்ட கேள்வி கேட்டார்.

நாசிக் ஆலயத்திற்சென்று வணங்க முயன்ற தீண்டாதாரைஜாதி இந்துக்கள்தடுத்தபொழுது தீண்டப்படாதார் மட்டும் ஏன் கைது செய்யப்பட்டனர்.

சர். சாமுவேல் ஹோர்:— உத்தியோக தோரணையில் எவ்வித செய்தியுமில்லை. பொதுஜன அமைதியை முன்னிட்டு சட்டத்தின் மூலம் பிரயோகிக்கப்பட்ட உத்திரவுகளை கைது செய்யப்பட்டவர்கள் மீறினார்கள் என்பதில் சந்தேகமில்லை. கைது செய்ததில் எதுவும் பாரபக்ஷமாக காட்டப்பட்டதாகக்கூற காரணம் இல்லை எனக்கூறினர்.

வேண்டுகோள்கள்.

பாளையங்கோட்டை முனிபல் 18 நெம்பர் வார்டு ஓட்டர்களை பாளையங்கோட்டை முனிசிபல் கவுன்சிலரும் திருநெல்வேலி ஜில்லா எஜிகேஷன் கவுன்சிலரும், திருநெல்வேலி சகின்டரி எஜிகேஷன் மெம்பரும், சென்னைசட்டசபை மெம்பருமான திரு. எம். தேதவதாசன் பி. ஏ., பி. எல்., எம். எல். சி., அவர்கள் சமீபத்தில் நடைபெறும் முனிசிபல் தேர்தலில் தன்னை ஆதரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறார்.

பாளையங்கோட்டை 7வது வார்டு ஓட்டர்களை திருநெல்வேலி ஜில்லா மதுவிலக்குப்பிரசாரகரும், மேலப்பாளையம், கொட்டிகுளம், ஆதிதிராவிடபாடசாலை மேனேஜருமான திரு. ஆ. அருணாசலசாம்பான் அவர்கள் சமீபத்தில் நடைபெறும் முனிசிபல் தேர்தலில் தம்மை ஆதரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறார்.

தாழ்த்தப்பட்டார் மகாநாடு.

அருப்புக்கோட்டை தாலூகா தாழ்த்தப்பட்டவர் இரண்டாவது மகாநாடு இவ்வூர் ஆதிதிராவிட இராப்பாடசாலையில் 5-11-31ல் நடைபெற்றது. அம்மகாநாட்டுக்கு முஸ்லீம் பாலிய சங்கக்காரியதரிசி ஜனாப்சைய தூராவுத்தர் தலைமைவகித்தார்.

இக்கூட்டத்திற்கு ஏராளமான தாழ்த்தப்பட்டவர்களும், அவர்கள் பிரதிநிதிகளும், அனுதாபிகளும் வந்திருந்தனர். திருவாளர்கள் எஸ். மல்லையா, டி. கருப்பையா, சுந்தரம்முதலியவர்கள் சொற்பொழிவுகள் நிகழ்த்தியபின் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. வட்டமேஜை மகாநாட்டில் டாக்டர். அம்பெட்கார், திரு. ஆர். சீனிவாசன் ஆகியவர்களை தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிநிதிகள் அல்லவென்று திரு. காந்தி கூறியதை இம்மகாநாடு கண்டிக்கிறது.

2. டாக்டர். அம்பெட்கார், சீனிவாசன் ஆகியவர்களே தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிநிதிகள் என்றும், திரு. காந்தி அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிநிதிகள் அல்லவென்றும், காந்திமீதும், காங்கிரஸ்மீதும் நம்பிக்கை இல்லை என்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

3. தாழ்த்தப்பட்டமக்களின் முன்னேற்றத்திற்கு தனித்தொகுதியே அவசியமென்றும், கூட்டுத்தொகுதி மறுபடியும் அடிமைத்தனத்தை விருத்தி செய்யக்கூடியதென்றும் கருதுவதால் தனித்தொகுதியே ஏற்படுத்தவேண்டுமென்று கவர்மெண்டாரை இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

மற்றும் ஆதிதிராவிடர்களின் முன்னேற்றத்திற்கான பலதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தலைவர் முடிவுரையுடன் மகாநாடு இனிது நடைபெற்றதென ஒருநிருபர் எழுதுகிறார்.

ஈரோடு முனிசிபாலிட்டி.

ஈரோடு முனிசிபாலிட்டிக்கு 24 கவுன்சிலர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டார்கள். தேர்தலில் பார்ப்பனத்தொல்லை பலமாக இருந்தாலும் எந்தவித விஷயமும் பயன் பெறவில்லை. ஒரே ஒரு ஸ்தானவிஷயத்தில் தாங்கள் வெற்றிபெற்று விட்டதாகஅவர்களுக்குச் சிறிது மகிழ்ச்சிஏற்பட வழியிருக்கலாம். ஆனபோதிலும் இந்த மகிழ்ச்சியிலும் பின்னால் அவர்கள் ஏமாந்து விட்டோம் என்று தான் நினைப்பார்கள்.

நிற்க டிசம்பர் மாத முதல் வாரத்தில் சேர்மென் எலக்ஷன் நடைபெறக்கூடும், அதில் ஜனாப் கே. எ, ஷேக்தாவுத் அவர்களே தெரிந்தெடுக்கப்படுவார் என்பதில் ஐயமில்லை.

சில பார்ப்பனர்கள் எப்படியாவது தேர்தலில் கட்சியுண்டாக்க வேண்டும் என்ற எண்ணத்தின் மீது யார்யாரையோ, நீநில், நீநில் என்று கிளப்பிவிடுகிறார்கள். இது பலிதமாவது குதிரைக்கொம்பாகவே முடியும்.

திரு. சிக்கைய நாயக்கர் சேர்மென் ஸ்தானத்திற்கு நிற்கப்போவதாய் ஒரு பொய் வதந்தியைக்கட்டி விட்டு அதன் மூலமாய்க் கக்ஷிபிரிக்க சிலரின் யோசனை. திரு. சிக்கைய நாயக்கர் அவர்கள் சேர்மென் ஸ்தானத்திற்கு நிற்பதாய் உத்தேசமேயில்லை என்றும் ஜனாப் ஷேக்தாவுத் சாயபை கட்டாயப்படுத்தியாவது சேர்மெனுக்கும் முயற்சியில் தான் இதுவரை பாடுபட்டு வந்ததுடன் இன்னமும் வெளிப்படையாய் எல்லா கவுன்சிலர்களிடமும் சென்று முதலாளி சாயபையே சேர்மெனாயிருக்க சம்மதிக்க செய்யும்படி கேட்டுக்கொண்டும் வருகிறார்.

திரு. சிக்கைய நாயக்கர் சேர்மெனாவதாயிருந்தாலும் இப்போது ஜனாப் முதலாளி சாயபு உள்பட அநேகம் பேர் ஆதரிக்கத் தயாராகவே இருக்கிறார்களே ஒழிய, வேறு எவ்விதத்திலும் ஆக்ஷேபணையில்லை. ஆனால் அவர் கண்டிப்பாய் தான் சேர்மெனாயிருக்கஇஷ்டப்படவில்லை என்றும், தனக்கு இப்போது போதிய சாவகாசம் இல்லை யென்றும் சொல்லி விட்டார். அது போலவே திரு. எம். எஸ். முத்துக்கருப்பஞ் செட்டியார் பெயரையும் கற்பனை செய்து சிலர் பேசுகிறார்கள். அவரும் திரு. சிக்கைய நாயக்கரைப்போலவே தான் இதில் இஷ்டப்படவில்லை என்று தாராளமாய் சொல்லி விட்டார்.

அது மாத்திரமல்லாமல் "திரு. ஜனாப் ஷேக்தாவுத் சாயபு சேர்மனாக இல்லையானால் தனக்கு கவுன்சிலர் ஸ்தானமே வேண்டியதில்லை என்றும் சொல்லி விட்டார்.

ஆகவே கலகக்காரர்களுடைய வார்த்தைகளையும், சூட்சிகாரர்களுடைய வார்த்தைகளையும் யாரும் நம்பவேண்டியதில்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். மற்றவர்கள் பெயர் பிரஸ்தாபம் இல்லாததால் மற்றவர்களைப்பற்றி ஒன்றும் சொல்லவேண்டிய அவசிய மேற்படவில்லை.

குறிப்பு:- அடுத்தவாரம் "தேர்தலில் செய்த மூன்று வித சூழ்ச்சிகள்" தந்திரங்கள்) வெளிவரும் எதிர்பாருங்கள்!

நகரதூதன்.

ஸர் ஸி. பி. ராமசாமி அய்யர் மீது கண்டனம்.

திருவனந்தபுரம் கச்சேரி மைதானத்தில் 14—11—31 மாலையில் திரு. ஏ. கே. பிள்ளை பி ஏ. பாரிஸ்டர் அவர்கள் தலைமையில் 5000க்கு மேற்பட்ட மக்கள் நிரம்பிய ஒரு பெருங் கூட்டம் நடைபெற்றது. முதலில் தலைவர், சமஸ்தானத்தின் பொறுப்புள்ள உத்தியோகஸ்தராகத் திவான் இருக்கும் பொழுது ஸர் ஸி. பி. ராமசாமி அய்யரை அரசியல் ஆலோசனை உத்தியோகஸ்தராக நியமித்தது அனாவசியமென்றும், சமஸ்தான உத்தியோக திட்டங்களுக்குக்கட்டுப்படாதவராக ஒரு உத்தியோகஸ்தரை நியமித்திருப்பது கேலிக்கிடமானது என்றும் பலவிதமாக விவாதித்துப் பேசி அவருடைய நியமனம் பொருத்தமற்ற தென்பதை விளக்கிக் காட்டினார். பிறகு தலைவரின் வேண்டுகோளின்படி திரு ஜி. சங்கரன் நாயர் கீழ்கண்ட தீர்மானத்தைப் பிரரேபித்தார்.

தீர்மானமாவது:—

அடியிற் கண்ட காரணங்களுக்காக ஸர் ஸி. பி. ராமசாமிஅய்யர் நியமனத்தை இக்கூட்டம் ஆட்சேபித்து, அவ்வாட்சேபத்தையும், இந்த நியமனத்தால் சமஸ்தானம் முழுதும் பரவியிருக்கும் அதிர்ப்தியையும் பதிவு செய்கிறது.

காரணங்கள்.

1. சமஸ்தான உத்தியோகத்திட்டத்தின் கீழ் ஸர். ஸி. பி. ராமசாமி அய்யர் சமஸ்தானத்திற்கும் பிரஜைகளுக்கும், பொறுப்பில்லாதவராய் இருக்கிறார்.

2. ஸர். ஸி. பி. இராமசாமி அய்யர் இயற்கையிலேயே பிரிட்டிஷ் இந்தியாவின் நன்மையில் அக்கரையுள்ளவராயிருப்பதால் அவர் திருவாங்கூர் சமஸ்தானத்தின் க்ஷேமத்திற்காக விட்டுக்கொடுக்காமல் போராடும் வேலையை உண்மையாகச் செய்ய முடியாதவராவார். இந்த இரண்டு நன்மைகளும் ஒன்றோடொன்று ஒற்றுமைப்படாமல் அடிக்கடி வேறுபடக்கூடியவைகள்.

3. சமஸ்தானத்தின் நன்மையை அதிகப்படுத்தும் திறமையுள்ளவர்கள் இந்தச்சமஸ்தானத்திலிருந்தே கிடைக்கக்கூடும்.

4. ஸர். ஸி. பி. ராமசாமி அய்யரின் பழைய அரசியல் வரலாற்றிலிருந்து அவர்மீது அதிக அவநம்பிக்கை ஏற்படுவதானால், அவர் சமஸ்தான மக்களின் நம்பிக்கையைப்பெறுவதற்கு பாத்திரமுள்ளவரல்ல.

5. இப்போது இந்த நியமனம் அவசியமில்லாததும், வேண்டாததுமானதாயிருக்கையில், இவ்வாறு நியமித்திருப்பது ஏற்கனவே சமஸ்தான பிரஜைகள் பொருளாதார நெருக்கடியினால் பெரிதும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும்போது, இன்னும் அவர்கள்மேல் சுமத்தும் பாரமாகும். இத்தீர்மானத்தை பிரரேபித்ததும் கூட்டத்திலிருந்துபலர் ஆதரித்து ஆரவாரம் செய்தனர். பிறகு திருவனந்தபுரம் வக்கீல் ஒருவர் தலைவரின் அனுமதியின்பேரில் அத்தீர்மானத்தை எதிர்த்துப் பேச ஆரம்பித்தார். உடனே கூட்டத்திலிருந்தவர்கள் அவர் பேசுவதைக்கேட்காமல் அவர்பிரசங்கமேடையிலிருந்து இறங்கவேண்டுமென்றும், தீர்மானத்தை ஓட்டுக்கு விடவேண்டுமென்றும் கூறினார்கள். தலைவரும் தீர்மானத்தை ஓட்டுக்கு விட்டபோது 5000 பேர்களுக்கு மேலிருந்த அக்கூட்டத்தில் மூன்று பேர்களே தீர்மானத்திற்கு விரோதமாக ஓட்டுக்கொடுத்தனர். ஆகவே தீர்மானம்மிகுந்த ஆரவாரத்தோடு நிறைவேறியது.

சடங்குக்கொசு.

மக்களின் உழைப்பினால்வரும் செல்வமாகிய இரத்தத்தை உறிஞ்சி அவர்களை தரித்திரமாகிய கோயில் ஆழ்த்துவன 'சடங்குகள்' என்னும் கொசுக்கள் ஆகையால் அவற்றை அழியுங்கள்.

சா. ஸி.

ஒருபெண்ணுக்குப் பல புருஷர்கள் மைசூர் மகாராஜாரேநரில் கண்டகாட்சி

இமயமலைக்குப் பின்புறத்தியசாரலில் இருக்கும் திபேதியர்கள் தங்கள் சமூகங்களில் குடும்பத்தில் மூத்த ஆண்பிள்ளை கல்யாணம் செய்துகொண்டால் அந்தப்பெண்ணை அக்குடும்பத்தில் உள்ள சகோதரர்கள் எல்லோருமே மனைவியாக ஏற்படுத்திக் கொள்ளுகிறார்கள்

அதுமாத்திரமல்லாமல் புருஷன்மார்களின் தகப்பனுருக்கும் அப்பெண் மனைவியாயிருக்கிறாள்

மற்றும் ஒரு விதவையை ஒரு புருஷன் மணந்துகொண்டால் அவ்விதவையும் அவளுக்குவயது வந்த பெண்கள் இருந்தால் அப்பெண்களும் அப்புருஷனுக்கு மனைவிகளாகிவிடுகின்றார்கள்.

சு—மி

இந்த உண்மையால்பஞ்சபாண்டவர்கள் திபேத்திலிருந்து வந்தவர்களாகஇருக்கவேண்டும்.

திரு. கிரன்தாஸ் வழக்கின் முடிவு.

திரு. கிரன்தாஸ் வழக்கை விசாரித்த அடிஷனல்ஜில்லாமாஜிஸ்திரேட் மிஸ்டர். டாட்வெல் பின்வருமாறு தீர்ப்புக் கூறியிருக்கிறார்.

5000 ரூபாய்க்குச் சொந்த ஜாமீனும், 2500 ரூபாய் வீதம் இரண்டு பேர் ஜாமீனும் கொடுக்கவேண்டுமென்றும் ஜாமீன் கொடுப்பதற்கு டிசம்பர் 16ந் தேதிவரை அவகாசமளிப்பதாயும் தீர்ப்பு கூறியிருக்கிறார்.

திரு. கிரன்தாஸ் இத்தீர்ப்பை ஆட்சேபித்து ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொள்ளப்போவதாகத் தெரிகிறது.

ஆதிதிராவிடர்களுக்குத் தண்ணீர் எடுக்கும்உரிமை.

பெரம்பலூர் தாலூகா செஞ்சேரி கிராமத்தில் பொதுவாகவுள்ள முனியன் குளம் என்ற குளத்தில், ஆதிதிராவிடர்களைத்தண்ணீர் எடுக்கக்கூடாதென்று கட்டுப்பாடு செய்து முத்துசாமி உடையார்வகையறாக்கள் சென்ற நான்கு மாதத்திற்கு முன்பு பெரம்பலூர் சப் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஷை ஆதிதிராவிடர்களை தண்ணீர் எடுக்காமல் இருக்கும்படி கி. பி. கோ. 144வது பிரிவின்படி தடைஉத்திரவு கேட்டிருந்தார்கள். இவ்விதமே ஷை உடையார் வகையறாக்கள் அரியலூர் டிப்டி கலெக்டரிடமும் தடை உத்திரவு கேட்டிருந்தனர். இவ்விரு கோர்ட்டிலும் ஆதிதிராவிடர்கள் சார்பாக திருச்சி வழக்கறிஞர் திரு. டி. வி. சோமசுந்தரம் பி. ஏ. பி. எல். அவர்கள் ஆஜராகி ஆதிதிராவிடர்களுக்கு ஷை குளத்தில் தண்ணீர் எடுக்க உரிமை உண்டு என்பதை நிச்சயப்படுத்தினர் எனஒருநிருபர் எழுதுகிறார்.

(6ம் பக்கத் தொடர்ச்சி)

திற்குக் குறையாதென்பது திண்ணம். இந்தியாவின் பெண்கள் சுதந்திரமோ வெகு காலமாக தடுக்கப்பட்டிருந்தும் அவர்களிலும் புகழ்பெற்றவர்களும், அறிவிலும், ஆற்றலிலும், ஆண்களோடு சமத்துவமாக வைத்துப் போற்றக்கூடிய இயல்புடையவர்கள் எத்தனையோபேர் இந்த குறுகிய காலத்திற்குள் தோன்றியிருக்கிறார்களென்பதையும் கண்டுகொள்ளலாம்.

இதனால் ஆண்களுக்கும், பெண்களுக்கும் உள்ள சமத்துவமானது ஒரே தன்மையிலென்பதாக தவறுதலாகக்கொள்ளக் கூடாது. அவர்கள் ஆண்களுக்குச் சமத்துவமான துணைவர்களே ஒழிய அதாவது தன்மையில் வேறுபட்டாலும் ஒவ்வொருவருக்குமுள்ள திறமையில் அவரவர்கள் சமத்துவமென்றுசொல்ல வேண்டியிருக்கிறதே ஒழிய ஆண்களைப்போன்ற நகல்கள் என்று கூறுவதல்ல. இருபாலர்களுக்கிடையே அவசியமான வித்தியாசங்கள் உண்டு. அவர்களுடைய மனோபாவத்தில் தெளிவாக வித்தியாசப்படுகிறார்களென்பதாக புரபசர் எட்வர்ட்டி தான்டைட் என்ற மனோதத்துவ சாஸ்திரி கூறுகிறார். பெண்களானவர்கள்பாஷாவித்வத்திலும், சடுதியான ஞாபக சக்தியிலும், கிரகிக்கும் தன்மையையுடையவர்களென்றும், ஆண்களோ சரித்திர ஆராய்ச்சியிலும், உள் உணர்ச்சியிலும், திரேக பலத்திலும், ரசாயன சாஸ்திரங்களிலும பெருமையாய் இருப்பதோடு நுணுக்கமான வேலைகளிலும் திறமைசாலிகள் என்றும் கூறுகிறார். ஒவ்வொரு பாலருக்கும இம்மாதிரியான, இயல்பான குணகுணங்கள் தனித்தனியாக இருக்கிறதென்பதை உணராமல் ஆண்களுக்குள்ள அறிவுத்திறமையில் பெண்கள் குறைவானவர்கள் என்ற முடிவுக்கு வருவதானது ஒருபெரிய தவறு. ஒரு பிரபல விஞ்ஞான சாஸ்திரியானவர் விஞ்ஞான ஆராய்ச்சியைப் பற்றி வியாசம் தயாரிக்கும்போதெல்லாம் அடிக்கடி தன்பக்கத்திலுள்ள 13 வயதுடைய மகளை தனக்குச் சந்தேகமாய் இருக்கும் ஒவ்வொருவார்த்தைக்கும் எழுத்துக்கூட்டுதலைக் கேட்டுக் கொண்டு எழுதுவாராம். இந்தப் பெண்சாதாரணமாகப்பள்ளி மாணவியாயிருந்தும் விஞ்ஞான கலை சம்பந்தமான வார்த்தைகளைக்கூட பிழையில்லாமலும் தயக்கமின்றியும் எழுத்துக் கூட்டிச் சொல்லும் வழக்க முண்டாம். அப்படிச் சொல்லும் பொழுதெல்லாம் அந்தப் பெண் குழந்தையானது தனக்கு இருக்கும் ஞாபகசக்தி கூட தந்தையாருக்கு இல்லாதிருப்பதைப் பற்றி பெரிதும் வியப்புறுவாளாம்.

ஒவ்வொரு குடும்பத்திலும், வீட்டு ஆண்களுக்கு பாட்டனார் திதி எப்பொழுது, அமாவாசை எப்பொழுது, தான் ஊர் போய் வந்தது எப்பொழுது என்பதான வெகு சாதாரணமான விஷயங்களைக்கூட எந்த தேதியிலென்பது கூட ஆண் மக்களுக்கு ஞாபகம் வருவதில்லை. குடும்பத்தில் நடந்த எந்த சந்தர்ப்பங்களைப் பற்றியும் சரியானபடி எந்த தேதியில் நடந்தது என்று சொல்லவும்முடியாது. தன்னுடைய பவுண்டன் பேனாவை எங்காவது வைத்து விட்டு வீடெல்லாம் தேடித் திரிவார்கள். ஆனால் வீட்டிலுள்ள பெண்களோ எதுவாயிருந்தாலும் மறக்காமல் ஞாபகத்தோடு சொல்வதும் எடுத்துக் கொடுப்பதும், ஞாபக மூட்டுவதும் வெகு சகஜமான தென்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். மேனாட்டிலோ தற்சமயம் பெரும்பாலான பெண்கள் தங்கள் பாஷா ஞானத்தின் திறமையையாவருக்கும் திடுக்கிடும் படியான விதத்தில் பிரத்தியட்சத்தில்காட்டி வருகின்றார்கள். முற்காலத்தில் எப்படி இருந்தது என்பதை இப்பொழுதும் நாம் கவனிக்க விட்டு விட்டே பார்த்தாலும் 100 க்கு 30 பேர்கள் வரையில் உலகத்தில் புகழ் பெற்ற போசிரியர்களாய் இருப்பவர்கள் பெண்களென்றே சொல்ல வேண்டும். இங்கிலாந்தில் நூல் வல்லார்களெல்லாம் பெண் மணிகளே. பிரான்சில் எத்தனையோ நூலாசிரியர்களும், நடிக நாடகத்தில் பேர் போனவர்களும், அரசியல் நிபுணர்களும பெண்களாகஇருந்திருக்கின்றனர். இத்தாலியிலிருந்தும், ஜர்மனியிலிருந்தும எவ்வளவோ சங்கீத சாகித்யத்தில் பேர் போனவர்களெல்லாம் தோன்றியிருக்கின்றனர். அமெரிக்காவில் எவ்வளவோ சமூக சீர்திருத்தத்தில் புகழ் பெற்றபெண்களைக் காணலாம். இன்னும் அநேக தொழில்களிலும் ஈடுபட்டு இருக்கின்றார்களெனினும் சமூக சீர்திருத்தத்தில் முனைந்து நிற்பவர்கள் பெண்கள் தான் அதிகமெனலாம். வர வர அமெரிக்கப் பெண்கள் அரசியல் விஷயத்திலும் புகுந்து யாவருடைய போற்றுதலையும் பெற்று வருகின்றனர். சமீப காலத்திற்கு முன் தான் விஞ்ஞான சாஸ்திர வழிகளிலும் தங்களுக்குத் திறமையுண்டென்று பெண்கள் அறியத் தொடங்கினார்கள். சென்ற ஜனக் கணிதத்திலிருந்து விஞ்ஞான ரசாயன சாஸ்திர ஆராய்ச்சியிலும் முனைந்து நிற்கும்பெண்கள் 10 வருடங்களுக்குள்ளாக இரட்டிப்பாக அதிகரித்திருக்கின்றார்களென்று தெரிகிறது. இப்பொழுது அமெரிக்காவிலே 10 வருடங்களுக்கு முன் 400 பேர் இருந்த விடத்தில் இப்பொழுது 3000 பெண்கள் பிளான் வரைவதில் திறமைசாலிகளாகவும், பெண் கல்லூரித் தலைவிகளாகவும் போசிரியர்களில 1000 மேற்பட்டவர்களும், 2000 ஜட்சுகளும், லாயர்களில் சுமார் 5000 வரையிலும் பெண்கள் இருப்பதாகவும் தெரிகிறது. பாங்கு உத்தியோகத்தில் முக்கியஸ்தானங்கள் வகித்து வருபவர்கள் மாத்திரம் 4000 க்கு மேற்பட்டவர்களென்று தெரிகிறது பெண்கள் டாக்டர்களாகவும், நர்சுகளாகவும், பாதிரிமார்களாகவும் எத்தனையோ 1000பேர்கள் இருப்பதாகவும் தெரிகிறது. இவற்றை யெல்லாம் கொண்டு நாம் என்ன முடிவிற்கு வர முடிகிறதென்றால் அவர்களுக்கு எந்த விஷயங்களிலும் ஆண்களைப் போன்ற திறமை உண்டென்றும் ஆனால் அவர்களுக்கு முன்னிருந்த சந்தர்ப்பங்கள் அவர்களுக்கு அவர்களுடைய திறமையைக் காட்ட ஒட்டாதபடி செய்ததே ஒழிய அவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கப் பட்டால் அவர்களுடைய போக்கில் நல்ல திறமையைக் காட்டக் கூடுமென்பதாகவே நாம் கருத வேண்டி இருக்கிறது.

ஒரு காலத்தில் ஆண்களுடைய மூளையைவிட பெண்களுடைய மூளை அளவில் சிறியதாக இருந்திருப்பதால் புத்தியில் பெண்கள் குறைந்தவர்கள் என்று கருதப்பட்டது. ஆனால், உடற்கூறு சாஸ்திரிகளும்மனோதத்வசாஸ்திரிகளும் மூளையினுடைய அளவில் உள்ள வித்தியாசத்தைக் கொண்டு புத்தியை நிரூபிக்க முடியாதென்றும் பெரிய மூளைகளைவிட சிறிய மூளைகளிலேதான் அதிலும் பெண்களுடைய மூளைகளிலே அதிகமான "பிரைன் செல்கள்" இருப்பதாகவும், செல்களுடைய எண்ணிக்கைக்கு தகுந்த விதத்திலே தான் புத்தியின் அளவும் இருக்கிறதென்றும், ஆதலால் சாதாரணமாக பெண்களும், ஆண்களும் சமத்துவமான அறிவுபலம் உடையவர்களென்று முடிவுகட்டி இருக்கின்றனர். ஆனால், ஆண்கள் எப்பொழுதும் தங்கள் மனைவிக்கு "மூளை இல்லை" யென்று அடிக்கடி ஏன் சொல்லுகிறார்களென்று யோசித்துப் பார்க்குமிடத்தில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் மனப்போக்கும், குணப்போக்கும், உணர்ச்சிப்போக்கும் வித்தியாசப்பட்டு இருப்பதினாலேயே யென்பதை கவனிக்கவேண்டியது. இவற்றை அளவிடுவதற்கு நிபுணர்களாலேயே பெரிதும் கஷ்டமாயிருக்கிறது. அவர்களுக்கு உணர்ச்சியும் உற்சாகமும் புத்தி போக்கு, மதாபிமானம், இரக்கம், பொறுமை, கூச்சம், நாணம் முதலிய வைகளான குணங்கள் அதிகமாயிருக்கிறதென்றும், ஆண்களோ சுயேச்சையிலும், தீவிரத்திலும், உள் உணர்ச்சியிலும், கேலிகளிலும் அதிகமான போக்குடையவர்களாய் இருந்து வருகிறார்கள். இந்த அளவு கூட சராசரி என்றுதான் கொள்ளவேண்டி இருக்கிறதே ஒழிய தனித்தனியாகவும் கூற முடியவில்லை, ஏனெனில் சில ஆண்கள் குழந்தைகளிடத்தில் பெண்களைவிட அதிகமான ஆர்வத்தை காண்பிக்கின்றனர், சில பெண்கள் ஆண்களைப்போல திடமும், தீவிரமுள்ளவர்களாகவுமிருக்கிறார்கள். பெண்களானவர்கள் ஒரு ஆசாமியினுடைய தோற்றத்தைக்கொண்டே நிர்ணயிக்கமுற்படுகிறார்கள். ஆனால் ஆண்கள் உண்மை நிகழ்ச்சிகளைக் கொண்டே தங்கள் அபிப்பிராயங்களை ஏற்படுத்திக் கொள்ளுகிறார்கள். ஆண்களானவர்கள ஒருவர் செய்த காரியத்தைக் கொண்டே அவர்களை மதிக்கின்றார்களே ஒழிய அவர்களுடைய குணகுணங்களைக் கொண்டோ, அந்தரங்க நடவடிக்கைகளைப் பற்றியோ கவலைப்படுவதில்லை. மனிதஸ்பாவத்தை சம்பந்தப்பட்டு எந்த விஷயங்களையும் பெண்களுக்கு யூகித்து உணர்வதற்கான நுட்ப அறிவானது ஆண்களைவிட அதிகமாகவே இருக்கிறது. இதற்கு உதாரணமாக:- ஒரு ஆணானவன் எவ்வளவுதான் தன் மனைவியோடு பழகி இருந்தாலும் அவளுடைய குணகுணங்களை சரிவர அறிந்துகொள்வதற்கு சக்தியில்லாமலிருக்க ஒரு மனைவி தான் பழகிய புருஷனின் குணகுணத்தை சிறுகாலத்திற்குள் அவனைப்

ஞா முத்தையா
நூலக அறக்கட்டளை

சேலத்தில்
அசோகா ஆஸ்பத்திரி திறப்புவிழா.

சேலத்தில் திரு.பி. வரதராஜுலு நாயுடு அவர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அசோகா ஆஸ்பத்திரியின் திறப்பு விழா 15-11-31 மாலை 5 மணிக்கு நடைபெற்றது. இவ்விழாவிற்குத் திருவாளர்கள் முதல் மந்திரி பி. முனிசாமி நாயுடு, ஜே. வெங்கட்டநாராயணநாயுடு, ராஜமாணிக்கபண்டாரம், எல்லப்பச்செட்டியார், டாக்டர்சுப்பராயன், சந்திரய்யசெட்டியார்முதலியவர்களும், மற்றும் பல உத்தியோகஸ்தர்களும், உத்தியோகஸ்தரல்லாதார்களும் வந்திருந்தனர். அவ்விழாவிற்குத் திரு. ஜே. வெங்கட்டநாராயண நாயுடு அவர்கள் தலைமைவகித்து திரு. வரதராஜுலு நாயுடு அவர்களின் தேசசேவையைப்பற்றியும், இந்தியவைத்தியத்திற்குக்காலஞ் சென்ற பனகால் அரசர் செய்த நன்மையைப்பற்றியும் புகழ்ந்து பேசினார்.

பிறகு விழாவுக்கு வரமுடியாமைக்கு வருந்தியும், விழா இனிது நிறைவேறவேண்டும் என்று வாழ்த்தியும் செட்டிநாட்டுக்குமாரராஜா, ஈ. வெ. இராமசாமி, சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் முதலிய பலர் எழுதிய கடிதங்களைத் திரு. ராமச்சந்திர நாயுடு அவர்கள் படித்துக்காட்டினார்.

பிறகு திரு. வரதராஜுலு நாயுடு அவர்கள் "மேல் நாட்டு வைத்தியத்தையும், கீழ் நாட்டு வைத்தியத்தையும் நன்கு ஆராய்ந்து நடத்தி வந்தால் பல நன்மைகள் ஏற்படுமென்றும், இந்த ஆஸ்பத்திரியைக் கட்டத்தான் தீர்மானித்தபோது அதை திருமதி. வரதராஜுலு நாயுடுவும் ஆமோதித்ததாகவும், இதன் செலவுகளுக்காக 5000 ரூபாய் நன்கொடை கொடுக்கத் தீர்மானித்திருப்பதாகவும், இதன் சார்பில், மருந்துகள் தயாரிக்கப்படுவதனால் வரும் இலாபமும் இவ்வாஸ்பத்திரியின் செலவுக்கே உபயோகப்படுமென்றும், இவ்வாஸ்பத்திரிக்கு ஸ்தலஸ்தாபனங்களையாவது, அரசாங்கத்தையாவது உதவி செய்யும்படி வேண்டிக்கொள்ளும் உத்தேசமில்லையென்றும் கூறினார்.

பின்னர், தலைவர் திரு. முனிசாமி நாயுடுவை, ஆஸ்பத்திரியைத்திறந்து வைக்கும்படி வேண்டிக்கொண்டார். கனம் மந்திரியவர்கள் "பனகால் அரசர் இந்திய வைத்திய கலாசாலையை ஏற்படுத்திய பிறகு கீழ் நாட்டு மேல் நாட்டு வைத்திய முறைகளைக்கலந்து ஏற்படுத்தியிருப்பது இந்த ஒரு ஆஸ்பத்திரிதான் என்றும், சர்க்கார் உதவியில்லாமலே இதை நடத்த முன்வந்தது பாராட்டத்தக்கதென்றும், அசோகன் பெயரை இவ்வாஸ்பத்திரிக்கு வைத்திருப்பது மிகவும் பொருத்தமானது என்றும், சொல்லித் திறந்துவைத்தார்.

பிறகு திரு. வரதராஜுலு நாயுடு, திருவாளர்கள் பி. கேசவப் பிள்ளை, விஜயராகவாச்சாரியார், இவர்கள் படங்களைத்திறந்துவைக்கும்படி டாக்டர் சுப்பராயன் அவர்களை வேண்டிக்கொண்டு பேசும்போது திரு. கேசவபிள்ளை, திரு. விஜயராகவாச்சாரி, இவர்களின் குணதிசையங்களையும், அவர்கள் செய்த ஊழியங்களையும் புகழ்ந்து பேசினார். டாக்டர். சுப்பராயன் அவர்களும், திருவாளர்கள் கேசவப்பிள்ளை, விஜயராகவாச்சாரி இவர்களைப் பாராட்டிப்பேசி இருவர்களின் படங்களையும் திறந்துவைத்தார்.

இதன்பின் நாயுடு சங்கத்தாரின் சார்பாக திரு. ராமச்சந்திர நாயுடு அவர்களால் கனம் முதல் மந்திரிக்கு ஒரு உபசாரப்பத்திரமும், திரு. குருமூர்த்திநாயுடு அவர்களால் திரு. வெங்கட்டநாராயண நாயுடு அவர்களுக்கு ஒரு உபசாரப்பத்திரமும், வாசித்துக்கொடுக்கப்பட்டன.

அன்று நடுப்பகலில் முதல் மந்திரி முதலியவர்களுக்கு திரு. ராஜமாணிக்க பண்டாரம் அவர்கள் பங்களாவில் விருந்தும், மாலையில் திரு. விஜயராகவாச்சாரியார் அவர்களால் டீ பார்ட்டியும், இரவில் திரு. ராமச்சந்திரநாயுடு அவர்கள் வீட்டில் விருந்தும் நடைபெற்றது.

ராசீபுரம்.

16—11—31ல் ராசீபுரம் யூனியன் போர்டு ஆபீசில் திரு. வரதராஜுலு நாயுடு அவர்களின் பட அலங்கரிப்பு விழா நடந்தது. அவ்விழாவிற்கு சேலம்ஜில்லாவில் உள்ளபலபிரமுகர்களும், வெளியூர்களிலிருந்து பலரும் வந்திருந்தனர். இவ்வைபவத்திற்குத் திரு. விஜயராகவாச்சாரியார் தலைமை வகித்து ராசீபுரம் வாசிகள் தங்களூரில் பிறந்த திரு. வரதராஜுலு நாயுடுவுக்குச் செய்த கௌரவத்தைப் பாராட்டிப்பேசினார். பிறகு முதல் மந்திரி திரு. முனிசாமி நாயுடு அவர்கள் ராசீபுரம் வாசிகள் திரு. வரதராஜுலு நாயுடு அவர்களின் படத்தைத்திறந்து வைப்பதன் கௌரவம் தங்களுக்கே உரியதாகுமென்றும், இவரது படம் ராசீபுரம் வாசிகளாகிய இளைஞர்களை ஊக்கப்படுத்துமென்றும், திரு. வரதராஜுலு நாயுடு அவர்கள் செய்த ஊழியங்களையும் பாராட்டிக்கூறியும், படத்தைத்திறந்து வைத்தார்.

அதன் பின் ராசீபுரம் விவசாய சங்கத்தினர் திரு. வரதராஜுலு நாயுடு அவர்களுக்கு ஒரு உபசாரப்பத்திரம் படித்துக்கொடுத்தனர். பிறகு ராசீபுரம் நாயுடு சங்கத்தில் முதல் மந்திரி திரு. முனிசாமி நாயுடு, திரு. வெங்கட்டநாராயண நாயுடு இவர்களின் உருவப்படத்தை திரு. டாக்டர் சுப்பராயன் அவர்கள் திறந்து வைத்து அவர்கள் செய்த ஊழியங்களையும், குணங்களையும் பாராட்டிப்பேசினார்.

அதன் பின் நாயுடு சங்கத்தால் திருவாளர்கள் முனிசாமி நாயுடு, வெங்கட்டநாராயண நாயுடு, வரதராஜுலு நாயுடு ஆகிய மூவர்களுக்கும் உபசாரப் பத்திரங்கள் வாசித்துக்கொடுக்கப்பட்டன.

பற்றி அவனே உணர்ந்திருப்பதை விட அதிகமாக உணர்ந்திருக்கிறாள்.

எவ்வளவு காரணங்கள் இதைப்போல் சொன்னாலும் ஆண்களுக்கு மாத்திரம் பழக்க வாசனையால் ஏற்பட்ட ஒரு அபிப்பிராயமானது திருந்துவதற்கு வெகு நாட்கள் பிடிக்கும்போல் தோன்றுகிறது. இருந்தாலும் இதற்கு முக்கியமான காரணம் குடும்பத்தில் சச்சரவு ஏற்படாமல் சமாதானம் நிலவவேண்டுமென்று பெண்கள் நினைத்துத் தங்கள் ஆண் மக்களுக்கு அடிக்கடி எந்த விஷயத்திலும் விட்டுக்கொடுத்து விடுவதினாலேயே பெண்களைப்பற்றிசர்வ சாதாரணமாக சமத்துவமில்லாதவர்களென்று எண்ணம் தோன்றுவதற்கு இடமாயிருக்கிறது. மேலும் அவர்கள் சுதந்திரத்தோடு தங்களுடைய சுய சம்பாத்திய முயற்சியினால் வாழ்ந்து காட்டவேண்டுவதும் அவசியமாயிருக்கிறது. பெண்கள் தங்கள் ஜீவனத்திற்கு ஆண்களை எப்பொழுதும் எதிர்பார்த்துநிற்பதானது அவர்களை ஆண்களுக்கு சமத்துவமானவர்களாய் செய்ய முடியாமலிருக்கிறது. பெண்கள் அறிவுத்திறமையில் சமத்துவமானவர்களாயினும் புத்திபோக்கில் மாத்திரம் மாறுபட்டவர்களாய் இருக்கிறார்களாதலால் அவர்கள் இருவரும் சமத்துவமானவர்களென்பதோடு இவர்கள் இருவருடைய குணகுணங்களும் ஒத்து நின்று ஒரு காரியம் நடத்துவதாலேயே வாழ்க்கையும் இன்பமும் ஏற்படமுடியுமென்பதையும் திண்ணமாய் உணரவேண்டும்.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

சொல்லப்பட்டிருக்கின்றன. அப்பாட்டிக்கதைகளை உண்மையென நம்பிய புரோகிதக்கூட்டம் குருமாய் அவற்றில் நம்பிக்கையற்றோரை நடத்தியது. சந்தேகிகளும், நம்பிக்கையற்றோரும் பலகால் போராடி அம்மூடநம்பிக்கையையும், அதனால் விளைந்துகொண்டிருந்த தீமையும் ஒழித்தனர்.

இவ்வாறே சந்தேகமும், நம்பிக்கையீனமும், சுருக்கக்கூறின் நாத்திகமுமே மக்களுக்குப்பெரு நலன்களையளித்தனென்பேன். எடிசனது பாடுக்கருவியும், மின்சாரமும், ஏனைய அரிய புதுமைகளும் "கடவுள்" "பக்தரால்" அன்று. "கடவுளைப்" பற்றிய சிந்தனையேயற்ற மக்களது தொண்டரால் விளைந்த நன்மைகளேயாகும். கலிலேயோ என்ற அறிஞர் கண்டுபிடித்த வானசாஸ்திர உண்மைகளைப் பொய்ப்பிக்க கிருஸ்தவசபை எவ்வளவாய் முயன்றது! அவரை என்ன பாடு படுத்திற்று! அவர் ஆஸ்திகரா? நாஸ்திகரா? "உலகம் தட்டையாயிருக்கிறது" என்ற பழைய கொள்கையில் நம்பியிருந்தால் கொலம்பஸ் அமெரிக்காவைக்கண்டு பிடித்திருப்பானோ?

என்னால் பல்வேறு எடுத்துகாட்டுதல்களைக்குறிப்பிடக்கூடும்! ஆயினும் "பானைச் சோற்றிற்கு அரிசி ஒன்று போதும் பதம்பார்க்க" என்றபடி நான்குறித்தனவே போதும். சந்தேகிகளும், நம்பிக்கையற்றோரும் நாத்திகருமாகிய பேரறிஞர்கள் கண்டுபிடித்த செம்பொருட்களையும், சீரிய கருத்துகளையும் தழுவியே கிருஸ்தவ சமயம் காலத்திற்கேற்ப மாற்றப்பட்டும், புதுப்பிக்கப்பட்டும், விசாலிக்கப்பட்டும், மனிதத்தன்மை அளிக்கப்பட்டும் வந்தது.

மேலெழுதியவற்றிலிருந்து ஒருவாறு நாத்திகத்தின்சிறப்புவிளங்கும். இனி அடுத்த கட்டுரையில் "ஆத்திகர்யார்? நாத்திகர்யார்?" என்பதை ஆராய்வோம். (தொடரும்)

WANTED Candidates for Electrical Engineering and wireless Preparation for London City and Guilds Examination. Rail fare Paid Prospectus on 3 annas stamps.

Technical Institute of India Ltd, Bombay No. 10.

ராஜா முத்தையா நூலக அறக்கட்டளை

வீர இளைஞர்களே!

மதத்தை ஒழியுங்கள்.

(பட்டுக்கோட்டை கோ. ஷண்முகசுந்தரம்)

இவ்விரிந்த நிலவுலகிலே மக்கட்தொகுதியில் அனேக மதங்கள் தெய்வ அம்சம் பொருந்தியவர்கள் என்பவர்களால் அதாவது எல்லாம் வல்ல இறைவனால் உலகைச்சீர்திருத்த அனுப்பப்பட்டவர்கள் என்று சொல்லப்படுபவர்களால், ஆக்கப்பட்டிருப்பதும், அவை என்றும் அழியாது செழித்தோங்குவான் வேண்டி உபக்கருவிகளாய் வேதம், சுருதி, ஸ்மிருதி, புராண இதிகாசங்களும், மக்கள் மதங்களை உண்மை என நம்ப வேண்டி மதத்தலைவர்களின் மாயா ஜால சூழ்ச்சித்தந்திரங்களை வெளிப்படையாய்க் காட்டிக்கொண்டிருக்கிற காவிய ஓவியங்களை உண்டாக்கப்பட்டிருப்பதும் யாவருமறிந்த விஷயமேயாகும். அவைகளுள்முக்கியமானவை இந்து மதம், கிறிஸ்துமதம், மூகமதியமதம், சைனமதம், என்பனபோன்றவைகளும் இன்னும் பலவுமேயாகும். இப்பொழுது இவைகளுள் முக்கியமாக இந்துமதத்தைப்பற்றி ஆராய்வோம். அம்மதத்தின் முக்கிய விதிகளாவன:--

1. மனிதனை மனிதன் மிருகத்திலும் கேடாக நினைப்பது.

2. பெண்களை காமக்கருவிகளாக உபயோகிப்பது.

3. எங்கும் நிறைந்த சர்வ சக்தி என்று சொல்லப்படுவதைக் குறித்த அளவுள்ள கல்லிலோ, செம்பிலோ, மற்றும் ஏதேனும் வேறு உலோகங்களிலோ அடைத்துவைத்து வழிபடுவது.

4 இவ்வுலக வாழ்க்கையை வெறுத்து மறுவுலகம் ஒன்று இருப்பதாக நம்பி அவ்வாழ்க்கைக்குப்பிரயத்தனம் செய்ய முயலுவது.

5. உயிர்நீத்த பிதிர்க்களுக்கு வருடத்திற்கோர்முறையும், மற்ற இதர காலங்களிலும் உலகின் ஓர் மனிதன் அடையவிரும்பும் சுகபோகங்கள் அவ்வளவையும் பார்ப்பனர்கள் மூலம் அன்னார்கட்குக்கொடுத்தனுப்புவது என்பனபோன்றவைகளும், இன்னும் பார்ப்பன சகோதரர்கட்கு உலகில் உள்ள வஸ்துக்கள் எவை எவை உண்டோ அவைகள் பேரில் அவர்கட்கு விருப்பமானவற்றை கடவுளுக்கு விருப்பமென்றும், அல்லாதவற்றை வெறுப்பு என்றும், எழுதி வைத்த ஏடுகளே இன்று இந்து மதத்தின் அடிப்படையான ஆதாரங்களாய் இருப்பதென்பதையும்ஆழ்ந்தஅறிவும் அனுபவமும் உடையவர்கள் யாவரும் மறுக்கமுடியாது என்பது எனது திடமான நம்பிக்கை. மதங்களைப் பற்றி சுருக்கமாகக்கூறவேண்டுமேயானால் சுயநலக்காரர்களால் மக்களை ஏமாற்றிக்கொள்ளையடிக்கத்தீர்மானித்து ஏற்படுத்தப்பட்ட கொள்ளை ஸ்தாபனம் என்று கூறுவதைவிட வேறுவார்த்தை உபயோகிக்க எனக்கு இந்த இடத்தில் தெரியவில்லை. ஏன் இவ்வாறு சொல்லுகிறேனென்றால் பார்ப்பனர் தவிர ஏனையோர் மத ஆதாரங்களை வாசிக்கக்கூடாது. பிறர்வாசிப்பதையுங்கேட்கக்கூடாது. அப்படி மீறிக்கேட்டவர்களை சித்திரவதை செய்யவேண்டுமென்ற நிபந்தனைகள் அடங்கியிருப்பதிலிருந்தே நான் முன்கூறின 'கொள்ளை ஸ்தாபனம்' என்ற ஒருவார்த்தையை ருசுப்பிக்க வேறு சாட்சியம் வேண்டியதில்லை என்று ஏற்படுகின்றதா? அல்லவா? அறிஞர்களே அனுபவம் நிறைந்த பெரியோர்களே ஏதோ சிறுவன் மூர்க்கத்தனமாக எழுதிவிட்டானென்று நினையாமல் உங்கள் அறிவை நடுநிலையிலிருத்திச்சிந்தித்துப் பாருங்கள். இதுபோன்ற மதத்தலைவர்கட்கும், இதற்கு அனுசரணையாயிருந்து உதவிபுரிந்து வருபவர்கட்கும் வாலிபர்களாகிய நாம் இனியும் நற்புத்தி புகட்டாமல் விட்டுக்கொண்டிருந்தால் உலகில் ஆறறிவுபடைத்த மக்கள் சுதந்தரத்துடன் வாழ்வதா? அன்றி மண்ணோடு மண்ணாய்மடிவதா? என்ற கேள்வி உண்மை உணர்ச்சியுடைய வீரஇளைஞனின் ஹிருதயத்தினின்றெழாமல் வேறு என்ன எழக்கூடுமெனறுதான் கேட்கின்றேன். எனதன்பிற்குரிய ஆருயிர்த் தோழர்களே தேசத்தின ஒவ்வோர் திசையிலும் உங்களது சிந்தனா சக்தியைச் செலுத்திப் பாருங்கள். ஒரு பக்கம் சுதந்திர ஒலி ஒலிப்பதும், மற்றொரு பக்கம் சமதாம ஜோதி தாண்டவமாடுவதும் உங்கள் அறிவொளியாகிய கண்ணுக்குத் தென்படவில்லையா? சுதந்திர தாகம் வீறு கொண்டெழுமிக்காலத்திலும் நாம் வாளா உறங்கிக் கொண்டிருப்போமேயானால் பிறநாட்டார் நம்மைக் கண்டு எள்ளி நகையாட மாட்டார்களா? பகுத்தறிவே விடுதலை என்பதை உங்கள் ஹிருதயத்திலிருத்துங்கள். அறிவற்ற பாமர மக்களுக்கு மனிதனின் தனிப்பட்ட லட்சியம் இன்னதென்றெடுத்து இயம்ப முன்வாருங்கள். ஏ! மதத்தலைவர்களே! மடாதிபதிகளே!, மெய்யன்பர் குழாங்களே!, இந்தியாவை நோக்கும் உங்களுடைய கண்களால் டர்க்கி, ரஷ்யா போன்ற மேனாடுகளை நோக்குங்கள். அங்குள்ள பாதிரிமார்களும், கோவில்களும் என்ன பாடு படுகிற தென்பதைதங்கள் அறியாதது வருந்தத் தக்கதே. ஆங்குள்ள சீர்திருத்த நிகழ்ச்சிகள் இதியாவில் பரவ இன்னும் நெடுநாட்கள் இல்லை என்பதைத் தங்களுக்கு நினைப்பூட்டும் முறையில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ரஷியா தேசத்தின் தலைநகராகிய மாஸ்கோ நகரிலே கிறிஸ்து நாதரின் பெரியதோர் புராதின தேவாலயத்தின்நிலை என்னவாயிற்றென்பதை நீங்கள் அறியவில்லை போலும். அத்தேச சர்க்காரால் இடித்துத் தகர்த் தெரியும்படி உத்தரவு பிறப்பிக்கப் பட்டாய் விட்டது. நாகரிகமுள்ள நாடுகளில் மதத்தலைவர்களுடையசூழ்ச்சிகளும் பாதிரிமார்களுடைய ஏமாற்றுதல்களும், ஒழிந்து போய் விட்டன. மதமென்பது மக்களை மயக்கும் போதை என்றும், விஷ மென்றும், நினைக்கும்படியான நிலைமைக்கு வந்து விட்டது. ஆனால் நம்மிந்திய நாட்டிலோ கடவுளைப் பிடித்துகல்லினுளடைத்து, ஆண், பெண், என்ற இரு விக்கிரகங்களையும், பால், பழம் உடன் வைத்து, பள்ளியறையினுள் தள்ளி விட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்களென்றால், இவர்களைப் பார்த்து நாம் அழுவதா? சிரிப்பதா? என்பது எனக்கு விளங்கவில்லை. இந்தச் சமயத்தில் திரு. ஈ. வெ. இராமசாமியால் தோற்றுவிக்கப் பட்ட சமதர்ம இயக்கம் இந்தியாவுக்கு-ஏன் இன்னும் சொல்ல வேண்டுமானால் உலகத்திற்கே நல்ல பலனையளிக்குமென்று திடமாக எண்ணுகிறேன். இதனால் ஒரு காலத்தில் நமது நாடும் மூடப் பழக்க வழக்கங்கள் ஒழிந்து சீர்திருத்த நாடாகப் போவதும் உறுதி. சகோதரர்களே, மதவெறி என்னும் மயக்கத்தைக் குழிதோண்டிப் புதைத்து விட்டு மக்கள் நிலையில் எல்லோரும் சமம் என்று கருதி நடந்தாலன்றி உலக வாழ்க்கையில் இடமில்லை என்று கூறிக்கொள்வதோடு, மேற்கூறியவாறு பகுத்தறிவுக்கு வேலை கொடுக்கும்படியாய் கேட்டுக் கொள்ளுவதுடன் நான் மேலே உபயோகித்துள்ள வார்த்தைகளில் ஆத்திரத்தின் மேலீட்டால் என்னையறியாது ஏதாவது கடுமையான பதங்கள் உபயோகித்திருந்தாலும், மன்னிக்கும்படி வேண்டுவதோடு என் சிறு வியாசத்தை முடித்துக் கொள்ளுகின்றேன்.

மதிப்புரைகள்.

விசாலாட்சி அல்லது கட்டு நீங்கிய காரிகை.

இது ஒரு சீர்திருத்த நாவல்:- இதில் விதவை மணத்தின் அவசியத்தை வற்புறுத்தப் படுகிறது. இளம் விதவைப் பெண்களை மணஞ் செய்து கொடுக்காமல் வைத்திருப்பதால் அப்பெண்கள் அடையும் துன்பத்தைத் தெள்ளத் தெளிய விளக்கிக் காட்டப் படுகிறது. நாட்டுக் கோட்டைச் செட்டிமார்கள் விதவைப் பெண்களை நடத்தும் விதத்தையும் அதனால் வரும் கெடுதிகளையும் உணரலாம் இது குமரன் பத்திரிகையின் உதவியாசிரியர் திரு இ. சிவம் அவர்களால் எழுதப் பட்டது. இதன் விலை அணா 0—6—0.

விலாசம்:—இ. சிவம்.
உதவி ஆசிரியர்.
குமரன் ஆபீஸ், காரைக்குடி.

"ஊழியன்"
ரேங்கூன்

இது ரெங்கூனிலிருந்து பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் வெளி வரும் ஒரு வாரப் பத்திரிகை. பர்மாவில் உள்ள இந்தியர்களுக்கு ஊழியஞ் செய்வதே இதன் நோக்கம் என்று தெரிகிறது. பத்திரிகையில் பர்மா கலகம் சத்பந்தமான செய்திகளும், மற்றும் பல விஷயங்களும் வெளி வருகின்றன. இதன் ஆசிரியர் கே. என். சுப்பையா நாயுடவர்கள். வருஷசந்தா உள்நாட்டிற்கு ரூபாய் 5—0—0 வெளி நாட்டிற்கு ரூபாய் 6—0—0.

விலாசம்:-மானேஜர், ஊழியன்.
230 - 3[illegible]-th-Street,
Rengoon.

உடற்பயிற்சி.
(முதற் பாடம்.)

இது உடற் பயிற்சியின் அவசியத்தைப் பற்றிக் கூறும் சிறந்த புத்தகம். இதில் தேகாப்பியாசத்தின் அவசியத்தையும், தேகாப்பியாசம் செய்ய வேண்டிய முறைகளையும் விளக்கமாகப் போதிக்கப் படுகிறது. தேகாப்பியாச முறைகளைக் காட்டும் 41 அழகிய படங்கள் அடங்கியுள்ளன. இப்புத்தகத்தைக் கலாசாலை மாணவர்களுக்குப் பாடமாக வைப்பதனால் மாணவர்கள் தேகப் பயிற்சி செய்ய வேண்டியதின் அவசியத்தை உணர்ந்து. செய்து நன்மை யடைவார்கள், புத்தகம், நல்ல ஆர்ட் பேப்பரில் அச்சிடப்பட்டு, அழகிய கலிக்கோ பயிண்டு செய்யப்பட்டு 112 பக்கங்கள் கொண்டதாகவிளங்குகிறது.

விலாசம்:—லெ. சோமசுந்திரன்,
சாண்டோ, கீழச்சிவற் பட்டி.

மக்களைப் பிரித்து வைப்பது மதங்களே யாகும்.

தனித்தொகுதி வேண்டியது அவசியம்.

இங்கிலாந்தில் வட்டமேஜை மகாநாட்டிற்குச் சென்ற முஸ்லிம் பிரதிநிதிகளும், மற்றும் மைனாரிட்டி வகுப்புப் பிரதிநிதிகளும் சேர்ந்து, தனித்தொகுதியும், பாதுகாப்பும் வேண்டும் என்று தீர்மானித்து, சட்டசபைகளில் கீழ்க்கண்டவாறு ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்கப்பட வேண்டும் என்றும் முடிவு செய்து, அம்முடிவை முதல் மந்திரிக்கு அனுப்பியிருக்கின்றனர். முதல் மந்திரிக்கு அனுப்பியிருக்கும் ஒப்பந்தத்தில், திருவாளர்கள். ஆகாகான், பன்னீர்ச் செல்வம், அம்பெட்கார், கிட்னிகார், முதலியவர்கள் கையெழுத்திட்டிருக்கின்றனர்.

சட்டசபையில் ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கும் விபரம்: —

ராஜாங்க சபை.

மொத்த ஸ்தானம்	200
ஜாதி இந்துக்கள்	101
தாழ்த்தப்பட்டவர்	20
முஸ்லிம்கள்	67
கிறிஸ்தவர்	1
சீக்கியர்	6
ஆங்கிலோ-இந்தியர்	1
வெள்ளையர்	4

மத்திய தலைமை சட்டசபை.

மொத்த ஸ்தானம்	300
ஜாதி ஹிந்துக்கள்	123
தாழ்த்தப்பட்டவர்	45
முஸ்லிம்கள்	100
கிறிஸ்தவர்	7
சீக்கியர்	10
ஆங்கிலோ-இந்தியர்	3
வெள்ளையர்	12

வங்காள சட்டசபை.

மொத்த ஸ்தானம்	200
ஜாதி ஹிந்துக்கள்	38
தாழ்த்தப்பட்டவர்	35
முஸ்லிம்	102
கிறிஸ்தவர்	2
ஆங்கிலோ-இந்தியர்	3
வெள்ளையர்	20

பம்பாய் சட்டசபை.

மொத்த ஸ்தானம்	200
ஹிந்துக்கள்	88
தாழ்த்தப்பட்டவர்	28
முஸ்லிம்	66
கிறிஸ்தவர்	2
ஆங்கிலோ-இந்தியர்	3
வெள்ளையர்	13

சென்னை சட்டசபை

மொத்த ஸ்தானம்	200
ஜாதி ஹிந்துக்கள்	102
தாழ்த்தப்பட்டவர்	40
முஸ்லிம்கள்	30
கிறிஸ்தவர்	14
ஆங்கிலோ-இந்தியர்	4
வெள்ளையர்	8
மலை ஜாதியார்	2

பாஞ்சால சட்டசபை.

மொத்த ஸ்தானம்	100
ஜாதி ஹிந்துக்கள்	14
தாழ்த்தப்பட்டவர்	10
முஸ்லிம்கள்	51
சீக்கியர்	20
இதரர்கள்	5

சிந்து மகாணத்தில் இந்துக்களுக்கும், எல்லைப்புறத்தில் இந்து, சீக்கியர்களுக்கும் விசேஷ பிரதிநிதித்வம் வழங்கப்பெறும்.

சட்டசபை பிரதிநிதித்வ பாகுபாட்டை இந்து, சீக்கியர்கள் அங்கீகரிக்கவில்லை. வியாபார ஸ்தானம், ஜமீந்தார், தொழிலாளர் இவர்களுக்குத் தனியாக பிரதிநிதித்வம் வழங்கவில்லை. அந்தந்தவகுப்பினர் மேற்படியார்களுக்கு ஸ்தானங்களை ஒதுக்கி வைத்துக்கொள்ளலாம்.

குறிப்பு:—லண்டனில் மைனாரிட்டியார் தீர்மானித்த விஷயங்களில் மதசம்பந்தமான அபிப்பிராயங்களில் பலவற்றை மறுக்கின்றோம். (ப-ர்)

[4ம் பக்கத் தொடர்ச்சி.]

மீன்களுக்கு கடவுள் இருப்பதாக எண்ண வேண்டியதில்லை.

நவக்கிரகங்களைவிட்டுப் பிறகு நமது சூர்யன் இருக்கிறது. நமது உலகத்தைப்போன்ற பல லட்சம் உலகங்களை சூர்யன் விழுங்கிவிடும் அவ்வளவு பெரிது. அது சுமார் பத்து கோடி மைல்தூரமிருந்து பிரகாசிக்கின்றது. அது ஓர் பெரியநெருப்பு அதன் அனல் வெளியில் 9000 டிக்ரியாம்! உட்புறத்தில் 40 000 டிக்ரியாம்!! நமது உலகில் 120, 125 டிக்ரிக்குமேல் சகித்துவாழ முடியா. சூர்யனில் அணுக்களும் நிலைக்க முடியாதென்றால் உயிர் எம்மாத்திரம்.

சூர்யனுக்கு அப்பால் கோடானகோடி சூர்யர்களை நட்சத்திரரூபமாக ப்பார்க்கின்றோம். அவைகளில் சில நமது சூர்யனைவிட பத்து லட்சம் பெரிதாம். அவை 100000 டிக்ரிக்கு மேல் உஷ்ணமுளதாம். அவைகளில் பரமாணுக்களும் தங்க இடமில்லை போலும்! பரமாணுக்களுக்கும் தங்க இடமில்லாத நட்சத்திரங்களில் மகத்தாகிய கடவுள் தங்க வசதி ஏற்படுமா என்பதுதான் சந்தேகம்!! நட்சத்திரங்கள் இல்லாத வெளியில் பாழ்எங்கும் நிறைந்துளதாம். அதன் விசாலத்தை கணக்கிடமுடியாதாம். இந்த பாழில் தாங்கக்கூடாத குளிர் இருக்குமாம். இந்த அகண்டாகாரப் பாழிலாகிலும் கடவுள் வசிக்கலாமோ? பிரபஞ்சத்திலுள்ளப் பொருள்களில் கோடானகோடி நட்சத்திரங்களில் சூடுதாங்க முடியா. நட்சத்திரமில்லாத பாழில் குளிர் தாங்க முடியா. ஆனால் இந்த பாழில் கடவுளுக்கு என்ன வேலை என்று கேட்கலாம். இதற்கு ஞானிகள்தான் விடைபகரவேண்டும். ஆகவின் பிரபஞ்ச முழுதும் கடவுளுக்குத்தங்க இடமில்லையென ஏற்படும்.

ஆனால் இதன் மத்தியில் எங்கேஓர் மூலையில் நாம் உற்பத்தியாகி அற்பகாலம் இருந்து வந்த இடமும் போன இடமும் தெரியாமல் மறைந்து போகின்றோம். இந்த சந்தர்ப்பத்தில் நமது சொல்ப வாழ்வுக்கு வேண்டிய விஷயங்களைக்கருதாது, கடவுளர் என்றும், பேய்பிசாசுகளென்றும், காட்டேரிமுனீஸ்வரன் என்றும் வியர்த்த சொற்களைகற்பித்துக்கொண்டு அவைகளுக்கு கூடகோபுர மாடமாளிகைகளைக் கட்டுவித்துக் கொண்டு எல்லாம் உள்ள உலகில், வாய்க்குப்பிடி அரிசிகூட கிடைக்கப்பெறாத கோடானகோடிமக்களை மூடநம்பிக்கையில் ஆழ்த்தி நாமாகிய சில அற்ப தூசிக்கூட்டங்கள் எல்லா சுகபோகங்களையும் அனுபவித்துவரச் செய்துவரும் சூழ்ச்சியென்றால் இந்த திட்டத்தை வெறுக்காத உத்தமன் எங்குமில்லையா? இதனை நமது தமிழ்நாட்டு தமிழர் ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டுகிறோம்.

பணக்கார-முதலாளிகளின் பிரதிநிதி.

"ஆரம்பத்தில் திரு. காந்தியை இந்திய முஸ்லிம்கள் ஆதரிப்பவராயிருந்தார்கள். ஆனால், பிரிட்டிஷ் அரசாங்கத்தை ஒழித்துவிட்டு, இந்து அரசாங்கத்தை ஸ்தாபிக்க விரும்புகின்ற. இந்த பணக்காரர்கள், கைத்தொழிற்சாலைகளின் சொந்தக்கார முதலாளிகள் ஆகியவர்களின் பிரதிநிதியே, திரு காந்தி என்பதை பின்னால் தெரிந்துகொண்டோம்.

திரு. ஷாபி தாவூதி.

சுயமரியாதை இயக்கப் பிரமுகர்கள்.

திருவாளர்கள், 1 ஈ. வெ. ராமசாமி, 2. W. P. A சௌந்திர பாண்டியர், 3. ஆர். கே. ஷண்முகம், 4. எஸ். ராமநாதன் 5. கைவல்ய சாமியார், 6. ஈ. வெ. ரா. நாகம்மாள், 7. இந்திராணி பாலசுப்பிரமணியம். 8. சிவகாமி, சிதம்பரனார், 9. குருசாமி குஞ்சிதம், 10. நீலாவதிராம சுப்பிரமணியம் 11. சுலோசனா, பொன்னம்பலனார், 12. சிதம்பரநாதர். ஆகியவர்களின் போட்டோ படங்கள் 6½ x 4¾ சைஸ் படம் 1-க்கு 0—8—0. ஈ. வெ. ரா 8½ x 6½ 1-க்கு 1—0 0. மொத்தமாய் வாங்குகின்றவர்களுக்கு 100க்கு 6—4—0 வீதம் கமிஷன் கழித்துக் கொடுக்கப்படும்.

தனிசாமி வேண்டியவர்கள் விலைக்கு மேல் 4 அணா ஸ்டாம்பு அனுப்ப வேண்டும்

விலாசம்: பாலு & Co.,
No. 3 ஒப்டணக்காரத்தெரு
ஈரோடு.

சுயநாட்டுப் பொருளிருக்க
அயல்நாட்டுப் பொருள் ஏன்?

ஆனந்த டூத் பேஸ்ட்
என்னும்
இந்தியன் டூத் பேஸ்ட்.

பண்டிட் ஆனந்தம் அவர்கள் நமது நாட்டு வைத்தியத்தொழிலை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமெனும் பேரவாவினால் இருபது வருஷங்களுக்கு முன் நமது நாட்டு பொருள்களை ஆராய்ந்து மேல் நாட்டாருடைய டூத் பேஸ்ட்களுக்கு மேலான குணத்தோடு தயார் செய்து ராயல டூத் பேஸ்ட் என்னும் பெயரால் இந்தியாவில் முதன் முதல் 20 வருஷங்களுக்கு முன் வெளிப்படுத்தினார்கள். இதனைப பல பெரியோர்களும், அரசர்களும், பொது ஜனங்களும் உபயோகித்து ஆயிரக்கணக்கான நற்சாட்சி பத்திரங்களும், பொருட்காட்சிகளில் மெடல்களும் கொடுத்துள்ளார்கள்.

ஒரு டஜன் ஆனந்த டூத் பேஸ்டு டியூப் ரூ 4—0—0
தபால் செலவு வேறு. ஏஜண்டுகள் தேவை.

தமிழ் வைத்தியசாலை,
221. தங்கசாலை வீதி, சென்னை.

தந்தி விலாசம். மருத்துவன். டெலிபோன் நெம்பர் 2584.

கதரின் புரட்டை உணரவேண்டுமா?

அப்படியானால்

'கதர்-மூட நம்பிக்கை' என்னும் ஆங்கில புத்தகத்தைப் படியுங்கள்.

இதில் கதரைப் பற்றி எஸ். ராமநாதன் எம். ஏ. பி. எல். அவர்களின் பிரசங்கமும், அதற்குத் திரு. பட்டாபி சீதாராமய்யா, திரு. என். எஸ். வரதாச்சாரி ஆகியவர்கள் எழுதிய மறுப்புகளும், அம்மறுப்புகளுக்கு. திரு ராமநாதன் அவர்கள் எழுதிய பதில்களும் புள்ளி விபரங்களும் அடங்கியுள்ளன. இவற்றால் கதரின் பிரயோஜனமற்ற தன்மையையும், அதில் உள்ள மோசங்களையும் வெட்ட வெளிச்சமாகக் காணலாம்.

இதன் விலை அணா 0-2-0. ஒரு புத்தகம் வேண்டுவோர் 3 அணா ஸ்டாம்பனுப்பவும்.

மானேஜர் "குடி அரசு" ஈரோடு.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இரா பதிப்புப் புஸ்தகங்கள்.

1. இயற்கைமதம் ... 0—8—0
2. சிதம்பர ரகசியம் ... 0—8—0
3. சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை 0—4—0
4. சுயமரியாதைத் தத்துவக் கீதங்கள் ... 0—4—0
5. பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை (சித்திரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் உள்ளது) ... 0—6—0
6. மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை 0—8—0
7. ஆராய்ச்சி அணிகலம் ... 0—12—0
8. சென்னை லோக்கல் போர்ட் ஆக்ட் ... 2—0—0
9. மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம். ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.) ... 2—0—0

ஈ. வெ. ராமசாமியின் போட்டோ படம் ... 0—8—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0

ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,

ஈரோடு

"சன்மார்க்கன்"

உயரிய தமிழ் மாதப்பத்திரிகை.

ஆண்டுசந்தா.

உள்நாடு ரூ. 1—0—0.

வெளிநாடு ரூ. 1—4—0.

ஆசிரியர் (நாவலூற்று) ஸி. சுவாமி சிவநேசம், "சன்மார்க்கன்" பழனி.

சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற்கண்ட 6-9-31ந் தேதி குடி அரசில் வெளியான "சத்தியாக்கிரகமா . சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தகரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை வினியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

100 புஸ்தகம் விலை 0-12-0

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும்

மானேஜர்,
குடி அரசு ஈரோடு.

சகோதரி M. சீதாலெட்சுமி என்னும் கிரிஜாதேவி அவர்கள் இயற்றிய

மோகனரஞ்சனி

அல்லது

சமூகத்தோற்றம்

எனனும் சீர்திருத்த நாவல்

எளிய தமிழ்! இனிய நடை!! சிறந்தபொருள்!!!

பால்யமணம், ஆண்பெண், ஒருவருக்கொருவர் பிரியமில்லாது பெற்றோர் கட்டாயத்தின் மேல் நடத்தப்படும் மணங்களின் கதி, விதவைகளின் பரிதாபநிலை, பெண்களுக்கேற்படும் பலவிதமான துன்பங்கள், மதச் சட்டங்களின் கொடுமை, புரோகிதர்களின் வஞ்சகம், மடாதிபதி மோசம், ஜாதிக் கர்வம் முதலிய பற்பல விஷயங்கள் ஒவ்வொருவரையும் உண்மை மனிதராக்கும சக்திவாய்ந்த இந்நாவலை சிறுவர் முதல விருத்தர் வரையிலும் அவசியம் வாசிக்கவேண்டியது. சமூக முன்னேற்றங்கருதி 230 பக்கங்கள் கொண்ட அழகிய புத்தகத்தின் விலை ரூபாய் 1—0—0.

விலாசம்:—
சி. வ. பாலகிருஷ்ணன்,
88 அவதானம் பாப்பையா தெரு
வேப்பேரி, சென்னை.

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

:0:

'குமரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 5—0—0

வெளிநாடு வருடசந்தா 6—0—0

மாதப்பதிப்பு.

உள்நாடு வருடசந்தா 0—12—0

வெளிநாடுவருடசந்தா 1—0—0

ஆசிரியர்: சொ. முருகப்பா.

விலாசம்:—
மானேஜர், "குமரன்" காரைக்குடி.
ராமநாதபுரம் ஜில்லா

'புதுவைமுரசு'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0

வெளிநாடு ,, 4—0—0

மானேஜர், "புதுவைமுரசு"
4 லல்லிதொலாந்தால் வீதி
புதுச்சேரி.

'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0

வெளிநாடு ,, 4—0—0

ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்

விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P.O.
கோலார் தங்கவயல். (S. I.)

'முன்னேற்றம்'

வாரப்பதிப்பு

சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது

உள்நாடு சந்தா $. 3—0—0

இந்தியாவுக்கு ரூ. 5—0—0

ஆசிரியர்: கோ. சாரங்கபாணி

விலாசம்:—
மானேஜர், "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்

"நாடார் குலமித்திரன்"

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 4—0—0

வெளிநாடு ,, 5—0—0

ஆசிரியர்: சு. அ. முத்துநாடார்

விலாசம்:— மானேஜர்,
"நாடார்குல மித்திரன்"
அருப்புக்கோட்டை
ராமநாதபுரம் ஜில்லா.

குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

சந்தாதாரர்களுக்கு முக்கால் விலை.

கைவல்யம் அல்லது கஷ்க்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத்தொகுத்து வெளியிடப்பட்டது. இக்கட்டுரைகளைப்படிப்பதால் அனேக சாஸ்திர, புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு, சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து கொற்ற பண்டிதராகலாம். இதன் விலை அணு. 0—8—0

இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்ப இராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப்புரட்டுக்களை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணு. 0—4—0

இரண்டாம் பாகம் அயோத்தியாகாண்டம் அணு. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலிய வைகளின் ஆபாசங்களைக் காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச் சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம், இதை ஒருமுறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின்வண்டவாளம்முழுதும்தெரியும். பெரியபுத்தகம். 150 பக்கம். இதன் விலை அணு. 0—4—0

மநுநீதி மருமம்.

இது மநுதரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணு. 0—2—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்துதொகுக்கப்பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலிய வைகளின் சூழ்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்.

இதன் விலை அணு. 0—2—0

சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலிய வற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல். எளிதில் பொருள் விளங்கும்.

இதன் விலை அணு. 0—2—0

சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும், ஜன சமூகத்தை ஏமாற்றுவதுதான் சோதிடமென்பதையும் இனிமையான..சுலபமான பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணு. 0—2—0

ஈ. வெ. ராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜனசமூகம், சீர்திருத்தம்பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக்காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப்பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம். ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலைசிறந்ததாகும். இதன் விலை அணு 0—2—0.

சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக்கொள்கைகளை விளக்கி, இனிமையான புதியவர்ணமெட்டுகளில் பாடியபாடல்கள் அடங்கியுள்ளன.

இதன் விலை அணு 0—2—0.

தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறு வேடம் பூண்டு பொது ஜனங்களுக்குப் புராணபுரட்டுக்களை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணு 0—3—0.

பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை, முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப்போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணு 0—4—0.

மேயோ கூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னி மேயோ" எழுதியதில்உள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டில் உள்ள வேறுபல ஆபாசங்களையும் எடுத்துக்காட்டிச் சீர்திருந்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணு 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரித்திரப்புரட்டுக்களையும் தமிழ் நூல் ஆதாரங்களோடுவிளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.

இதன் விலை அணு 0—2—0

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்களே தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாச புராணங்களின் ஆதாரங்களைக் கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணு 0—2—0.

கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு S. ராமநாதன், அவர்கள் கதரைப்பற்றிச்செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீத்தாராமையாவும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில்வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம். இதன் விலை அணு 0—2—0.

முக்கிய கவனிப்பு:— மேல்கண்ட புத்தகங்கள் "குடி அரசு" சந்தாதாரர்களுக்கு முக்கால் விலைக்குக்கொடுக்கப்படும். ஆனால் பாதித்தொகை முன்பணமாக அனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.